The "Bharati." Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-சித்திரை
1933-௵ ஏப்ரல்-மே௴

பாரதி

OFFICE OF ... REGISTRAR OF BOOKS
15 JUL 1933

மாலை 5. மணி 1.

ஓர் செந்தமிழ்
மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.
ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

"பாரதி"

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

4-ம் ஆண்டு முடிவுற்று ஸ்ரீமுக சித்திரை முதல்
5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாஸிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாஸிகை

"பாரதி" ஒன்றே யாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ **2/=** அல்லது **3** ஷிலிங்
வெளி நாடுகளுக்கு " ரூ **3/=** " **5** "
போஷக சந்தா குறைந்தது ரூ **100/=**

தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

போறுப்பாளர்,

"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	முத்தண்ணு (ஓர் துப்பறி கற்பிதம்)	1-12—0
3.	அறநூல் மூலம்	0—3—0
4.	ஷை பதவுரையுடன்	0-12—0
5.	ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம்	0—4—0
6.	வீர சிவாஜி விஜயம்	0—3—0
7.	ஸ்ரீ ராமகிருஷ்ணமிருதம்	0—6—0
8.	அன்னை (ஸ்ரீ அரவிந்தர் அருளியது)	0—4—0
9.	கீதை காட்டும் பாதை	0-10—0
10.	புது யுகப் பாட்டு	0—5—0
11.	ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்	0-12—0
12.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு ரூ.	10—0—0
,,	,,	½-க்கு	,,	5—8—0
,,	,,	¼-க்கு	,,	3—0—0
கவர்	,,	2 & 3	,,	15—0—0
,,	,,	4	,,	20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.

நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

"பாரதி"

பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்கள்

உங்கள் புத்தகசாலையை

அழகு செய்வதாயிருக்கின்றன.

இவைகளில் பல பெரியோர்கள் சரிதைகளும், தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும், அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

தமிழ் நாட்டின் அறிஞர் சிகாமணிகளும், பண்டிதப் பெரியார்களும், ஆராய்ச்சி நிபுணர்களும் எழுதிய அரிய கட்டுரைகள் என்றும் படித்துணரத் தக்கவையாய்த் திகழுகின்றன.

விஷயங்களுக்கும் அச்சுக்கும் ஏற்ற விதம் உறுதியாக பைண்ட் செய்யப்பெற்றிருக்கிறது.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

1-ம்	வருட வால்யம்	1-க்கு விலை	ரூ. 3—0—0.
2-ம்	,,	,,	ரூ. 2—8—0.
3-ம்	,,	,,	ரூ 2—8—0.
4-ம்	,,	,,	ரூ. 2—8—0.

3-ம் வருட அனுபந்தம் ரூ. 0—4—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன் வால்யம் 1-க்கு ரூ. 3½ அல்லது 5½ ஷிலிங்.

'பாரதி' ஆலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாஸிகை.

பொருள் அடக்கம்.

மாலை 5. ஸ்ரீமுகவூ சித்திரைமீ மணி 1.

தொடர் எண்.		பக்கம்
1.	கடவுளை வேண்டல்—ராய. சொக்கலிங்கம் ...	1
2.	தமிழா, கவனி!—திரு. கணி. மு. யாக்கூப் அவர்கள்	3
3.	'பாரதி'யின் 5-வது ஆண்டு—ஆசிரியர், "பாரதி." ...	4
4.	பாரதியார்—திரு. ஸ்ரீவை. எம். எஸ். ராமானுஜம் அவர்கள்	5
5.	ஹிந்திப் பிரசாரமும் தமிழபிவிருத்தியும்—திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A. ...	9
6.	இராஜீயப் பிற்போக்காளருக்கோர் எச்சரிக்கை—திரு. K. வெங்கட ராவ் அவர்கள் ...	14
7.	பரதேசி—திரு. எஸ். வி. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B. A., B. L. ...	18
8.	ஆரம்பாசிரியர்களும் கிராம வாழ்க்கைச் சீர்திருத்தமும்—திரு. சி. ர. இரகுநாதன் அவர்கள் ...	25
9.	பத்திரிகாசிரியரும் நூலாசிரியரும்—திரு. M. வேலுச்சாமி அவர்கள், B. A. ...	33
10.	இந்திய நாகரீகத்தின் உற்பத்தி ஸ்தானம்—திரு. O. P. தேசிகன் அவர்கள் ...	36
11.	கூட்டுத் தொழில்—ஆசிரியர், "பாரதி."	43
12.	ஜான் மில்டன்—திரு. E. பரமசிவம் அவர்கள், B. A. ...	50
13.	நாகரீகக் கொலை—ஜனப். S. சையது ஆமத் அவர்கள் ...	63
14.	நபிபெருமானின் நற்பெருங் குணங்கள்—ஜனப். M. K. M. மீரான் அவர்கள் ...	68
15.	உண்மைக் காதலும் பக்தி யோகமும்—திரு. K. வெங்கட ராவ் அவர்கள் ...	71
16.	ஆராய்ச்சி மேடை—ஆசிரியர், "பாரதி."	74
17.	ஆசிரியக் குறிப்புகள்—	78

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்

மாலை 5	ஸ்ரீமுக-சித்திரை 1933-வூ ஏப்ரல்-மேமீ	மணி 1

கடவுளை வேண்டல்.

அறுசீர் விருத்தம்.

உலகமெலாம் படைத்தாய்நீ! உலகமெலாம் உள்ளாய்நீ! உலகில் உள்ள
அலகில்பொருள் அனைத்தையுமே ஆக்கினைநீ! உலகுயிரை ஆட்டு விக்கும்
புலமுழுதும் நீஎன்பது உண்மையெனில் கடவுளே! பொருவில் உன்னல்
தலைமகனெங் காந்தியெனும் புண்ணியரின் உயிர்புரக்கத் தவறி டாதே.

ஆற்றலென்பர் சக்தியென்பர் வலிமையென்றும் அறைந்திடுவர் அன்னை [உ
ஏற்றமிழி வில்லாமல் எல்லோரும் சமம்பெறவே எண்ணி ஈடில்
சாற்றரிய பெருமையுடைத் தன்னுயிரும் கொடுப்பதற்குச் சமைந்தான்
போற்றியவன் உயிர்காவா தொழிந்துபழி பூணுதே பொருவில் தாயே!

"உடலீவேன் பொருளீவேன் உயிரினையும் ஈந்திடுவேன்" என்று பல்லோர்
மடமடென வழுத்திடுவார் வாயதனால்; செய்கைக்கு வாரார் அன்னார்;
திடமுடைய சீர்க்காந்தி செப்புமொழி தப்பாதான்; தெய்வ நங்காள்!
உடனெழுந்தவ் உத்தமனின் உளமுடித்தே உயிர்காப்பீர்! உயிர்காப் பீரே! 3.

மண்ணில்நிகர் இல்லாத பாரதநல் மாதாவே! மணியே போன்ற
எண்ணில்புகழ்ச் சான்றோரை ஈன்றனைபண் டானாலும் ஈடி லாத
திண்ணமுடைக் காந்தியைப்போல் பெற்றனையோ? மூடர்புரி தீண்டா மைக்கா
அண்ணலுயிர் விடநீதான் ஆற்றுவையோ? தாயேநீ அருளில் லாயோ? 4.

பொறுமைதனில் நிகரில்லாய் நீயென்பர் புலவரெலாம் பூமி தேவி!
அறியாமைப் படுகுழியில் வீழ்ந்திடுவோர்; பாபங்கள் அனைத்தும் செய்வோர்;
குறையாளர் யாவரையும் சுமக்கின்ற நீஎங்கள் கோதி லாத
இறைகாந்தி பேரொளிகொள் சிற்றுருவப் பொறையிழக்க இசைவாய்
[கொல்லோ! 5.

நிலவருளும் தண்சுடரே! நிலம்விளங்கும் செங்கதிரே! நீவிர் எண்ணில்
பலகோடி நாளாஇவ் உலகறிவீர்; என்றேனும் பாந்த இந்தத்
தலமதனில் தண்ணளியார் காந்திநிகர் சான்றோனைக் கண்ட துண்டோ?
உலகறிய உரைத்தன்னோன் உயிர்காப்பீர்! தருணமிது! உறங்கல் செய்யீர்! 6.

மாநிலமே! வாளெரியே! வருகாற்றே! வயங்குபுகழ் வானே! நீரே!
மேனிலத்தின் வரையுயர்ந்து விளங்குகின்ற பெருமலைகாள்! மேலோர்
[போற்றும்
கானிலுறை பறவைகாள்! கடுவிலங்கீர்! பெருமரங்காள்! ககனம் வாழும்
மீனினங்காள்! இருசுடர்காள்! காந்தியுயிர் காப்பதற்கு மேவீர் கூடி. 7.

அம்பலத்தே ஆடிடுவாய்; அரங்கத்தே தனிகிடப்பாய்; என்பார் உன்னை!
நம்பிடுவார் துயர்களைவாய் என்றிடுவார்; நல்லடியார் உள்ளம் என்னும்
செம்பதுமக் கோவிலுறை தேவே! தீத் தீண்டாமை வேர்அறுக்கும்
எம்பெருமான் காந்தியெனும் இந்தியர்நல் உயிர்புரப்பாய் ஈசா! ஈசா! 8.

காந்தியுயிர் காவேயேல், கடலுலகம் இன்றுவரைக் கண்டி டாத
சேர்ந்தபழி பூண்பாய்நீ தேவே! நீ இல்லையெனக் செப்பு கின்ற
மாந்தரும்நீ இருக்கின்றாய் எனத்தெளிய மனங்கொண்டாய் ஆனால் எங்கள்
சாந்தகுணப் பெருங்கடலைத் தலத்திலுயர் தனிப்பொருளைக் காப்பாய்!
[காப்பாய்! 9.

உலகுயிர்கள் தொறுங்கலந்தே உறைகின்ற ஒருபொருளே! ஒருவன் இந்தத்
தலமதற்கே எனும்பெரியான்; சத்தியமே கமழ்வாயான்; சாந்தம் என்னும்
அலகில்குணக் குன்றனையான்; அருளன்றி அறியாதான்; அறமே செய்வான்;
கலைமுழுதும் நனியுணர்ந்தான்; காந்தியவன் ஆருயிரைக் காவாய்! காவாய்! 10.

—ராய. சொக்கலிங்கம்.

தமிழா, கவனி!

திரு. கணி. மு. யாக்கூப் அவர்கள்.

('நெஞ்சில் உரமுமின்றி' என்ற கிளிக்கண்ணி மெட்டு.)

சாதிப் பிரிவினையும் சமயப் பிணக்கினையும்
வாதிட் டொழிக்கும் வரை—தமிழா!
மாண்புவரப் போவதில்லை. 1.

தீண்டாமையென்ற கொடுந் தீயபைசாசந் தன்னை
வேண்டாமை யாக்கும் வரை—தமிழா!
மேன்மைவரப் போவதில்லை. 2.

பெண்களுக் கேயுரிமை பெரிதுங் கொடுத்தவரைக்
கண்களாய்க் கொள்ளும் வரை—தமிழா!
கதியடையப் போவதில்லை. 3.

கன்னியர் வாலிபர்கள் காதல் மணம்புரிந்து
மன்னியே வாழும் வரை—தமிழா!
வளமைவரப் போவதில்லை. 4.

தொழிலாளி முதலாளி சொல்லுமிவ் வேற்றுமையே
அழிவோடு வீழும் வரை—தமிழா!
ஐக்கியம்வரப் போவதில்லை. 5.

அஞ்ஞானக் கொள்கைகளை அறவே வெறுத்தொதுக்கி
விஞ்ஞானங் கற்கும் வரை—தமிழா!
வெற்றிவரப் போவதில்லை. 6.

அமிழ்தினற் காப்பியங்கள் அரியபல் சாத்திரங்கள்
தமிழ்தனில் மேவும் வரை—தமிழா!
தகவடையப் போவதில்லை. 7.

பொய்த் தொழில் தன்னைவிட்டுப் புதுப்புதிதானபல
கைத்தொழில் செய்யும்வரை—தமிழா!
கனமடையப் போவதில்லை. 8.

நந்தம் பாரதநாட்டில் நயமுடனைதுணி
பந்தமா யணியும் வரை—தமிழா!
பலனடையப் போவதில்லை. 9.

"பாரதி" மாஸிகையும் பற்பல ஸஞ்சிகையும்
சீருடன் பார்க்கும் வரை—தமிழா!
சிறப்படையப் போவதில்லை. 10.

'பாரதி'யின் 5-வது ஆண்டு.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி".

ஆண்டவனருளால் 4-வது ஆண்டு இனிது நடைபெற்று இப்பொழுது இந்த மணியுடன் 5-வது வருடம் "பாரதி"க்குப் பிறக்கிறது பாண்டி நாட்டின் மேற்கு மூலையில்—ஒரு கிராமத்தில் பற்பல இன்னல்களுக் கிடையில் "பாரதி" வெளிவந்தாலும் தனது கடமையை முற்றிலும் செய்தே வந்திருக்கிற தென்பது அநேகருக்குத் தெரியும். "பாரதி" தனது ஆசிரியரான எம்மை இரு முறை சிறைக் கனுப்பித் தனது தேசீயக் கடமையை நிறைவேற்றியதால், இம் மாஸிகை எவ்வளவோ கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அடைந்திருக்கிறது. தேசத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஒரு பெரிய இலட்சியங்கொண்டு எல்லாத் துன்பங்களையும் எதிர்த்து நின்று அவைகளைத் தாங்கி வந்திருக்கிறது. தபால் இலாகாவைப்பற்றி என்ன சொல்லுவது! நாட்டில் பத்திரிகைகளுக்கு ஆதரவு குறைந்த இக் காலத்தில்—பணப் பஞ்சம் நம் தேசமெங்கும் வாட்டிக்கொண் டிருக்கும் இக் காலத்தில்—தமிழ் நாட்டில் அதுவும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு உதவியற்ற இக் காலத்தில் தமிழ்ப் பத்திரிகைகளை உயர்தரத்தில் நடத்துவது மகா கஷ்டமாகுமென்று சொல்லத் தேவையில்லை. தமிழர்களுக்கு இப்பொழுது போதியபடி பாஷாபிமானமில்லை யென்பதை எவர் மறுக்க முடியும்? மொழிப் பற்றின்றி தேசப் பற்று எவ்வாறு உதிக்கும்? தமிழ் நாட்டினர் என்றுதான் விழிப்படைவார்களோ? நாம் நமது வேலையைச் செய்துகொண்டிருக்கிறோம்.

தேசீய இயக்கத்தை அடக்கச் சர்க்கார் அடக்குமுறை அஸ்திரங்களைப் பிரயோகித்துக் கொண்டிருந்த சென்ற ஆண்டிலும் நியாயமான முறையில் தனதுகுறியில் "பாரதி" சிறிதும் தவறாது சென்று தனது தொண்டை அஞ்சா நெஞ்சத்துடன் செய்தது. எந் நாட்டில் சுதந்திரம் அடக்கப்படுகிறதோ, எந் நாடு தனது அடிமைத்தன சங்கிலியை அறுத்தெறிய முயற்சிக்கிறதோ, எத்தேசத்தில் தேசீயப் புரட்சி உண்டாகிறதோ, அங்கு அடக்குமுறை தலைவிரித்தாடுவதைக் காணலாகும். எத் தேசத்து ஜனங்களுக்குப் பத்திரிகைச் சுதந்தர மில்லையோ, அவர்களை ஊமைகள் என்றே சொல்லல் வேண்டும்.

இப் புது ஆண்டின் முதன் மாதத்தில் நமது மாபெருந் தலைவர்—காந்தி அடிகள் சிறையினின்றும் வெளிவந்ததைக் கேட்டு உலக மக்கள் அனைவரும் பெரிதும் மகிழ்வார்களென்று நம்புகிறோம். இந்தியாவின் அரிய மாணிக்கம்—உலக பூஷணம்—பொறுமையின் குன்றம்—அன்புக் கடல்—சாந்தாவதாரம்—மகாத்மா காந்தி அவர்கள் பெருந் தவம்—21 நாட்கள் உண்ணு விரதம் கிடக்கிறார். அவருக்கு வெற்றிக்கு மேற் வெற்றி கிடைக்கட்டும்!

இப் புதிய ஆண்டின் பெயரால் "பாரதி"யின் போஷகதார்கள், அபிமானிகள், துணைவர்கள், வியாசதானிகள் அனைவருக்கும் வந்தனங்கள். இவ்வாண்டிலிருந்து சில விஷயங்கள் புதிதாகச் சேர்க்கப்படும். பணிசெய்ய வேண்டியது "பாரதி"யின் கடமை;—"பாரதி"யை வளர்த்துக் காக்கவேண்டியது சந்தாதாரர்களின் கடமை.

OFFICE OF ... 15 JUL 1933 ... MADRAS

பாரதியார்.

திரு. ஸ்ரீவை, எம். எஸ். ராமானுஜம் அவர்கள்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற் பகுதியோடு தமிழ் இலக்கியத்தில் ஒரு பெரும் பகுதி முடிந்தது. இந் நூற்றுண்டின் இறுதியிலே தான் மேல் நாட்டாரின் நவ நாகரீகத்தோடு, அவர்களது அறிவுப் பெருக்கும் கலைச் செல்வமும் நமது நாட்டிடை அதி வேகமாய்ப் பாயத் தொடங்கின. இடைக் காலத்தில் தோன்றிய தமிழ்ப் புலவர்கள், யமகம், திரிபு, மோனை முதலியவற்றில் தங்கள் நெஞ்சைப் பறிகொடுத்து 'பலனற்ற நெடுஞ் சொற்களாலே' பொருளற்ற கவிகள் யாத்துத் தமிழ் மொழிக்கு நிகரற்ற கேடு விளைவித்துவிட்டனர். நெடு நாட்களாக நிமிர்ந்த தலை குனியாது ஒளிர்ந்து கொண்டிருந்த நமது பழம்பெரும் இலக்கியம் எங்கே சோர்வுற்றுக் கால சரோவரத்தில் சோர்ந்து வீழ்ந்து

விடுமோ என்று பயப்பட வேண்டியதாயிற்று. ஆனால் தமிழர்களில் அதிர்ஷ்ட வசமாகச் சில மகான்கள் தோன்றி, தமிழ் இலக்கியத்திற்கே புதியதொரு ஜீதும்—ஜீவ வேகமும்—சோபிதமும் தந்து பேருதவி தந்தார்கள். இவர்கட்குள்ளே தலைசிறந்தவர்—தமிழ் மறுமலர்ச்சியை மண மலர்ச்சியாக்கிய மண மலர்—ஸ்ரீமான். **ஸி. சுப்ரமண்ய பாரதியாராவர்.**

ஸ்ரீமான். **சின்னசாமி அய்யரவர்களைத்** திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதார் இலர். இவர் எட்டையாபுரத்தில் சமஸ்தான உத்தியோகஸ்தராகவும், வித்வானாகவும் இருந்தார். இவரது மனைவியார் தமது இயற்பெயருக்கேற்ப லக்ஷ்மியே. இவ் விருவர் மனங்களும் மகிழ்ச்சியுற—இவர்கள் நெடு நாளாகக் கண்ட கனவு மெய்ப்பட—பன்னெடு ஆண்டுகளாய் இயற்றிய தவம்—இல்லறம்—பயனுற 1882-வது வருடம் கார்த்திகை மாதம் **"நண்பகல் எய்தாக்காலை ஞாயிறி"ற்றின் செங் கிரணங்களை எட்டையாபுரத்தில் முதன் முதல் கண்டார் நம் பாரதியார்.** இவர் தமது ஐந்தாவது பிராயத்தில் அன்னையை இழந்துவிட்டார். எனவே தனயனுக்குத் தாய் செய்ய வேண்டிய தொண்டையும் சேர்த்துச் செய்து வந்தார் சின்னசாமி அய்யர்.

ஐந்தாண்டில் கல்வி கற்கத் தொடங்கினார், குழந்தை சுப்ரமண்யம். மற்ற மாணவர்களைக் காட்டிலும் இவர் மகா மேதாவியாக விளங்கினார். தமது ஏழாவது ஆண்டு முதற்கொண்டே பாரதியார் பல பாடல்களைப் பாட ஆரம்பித்துவிட்டார். இக் காலத்தில் நிகழ்ந்ததோர் சம்பவத்தை ஈண்டு தருகிறேன்.

பாரதியார் எட்டையாபுரத்து மகாராஜா கல்லூரியில் வாசிக்கும்போது, ஏதோ ஒரு குற்றத்திற்காக ஜமீன்தார் பாரதியாரை ஏழடிகள் அடிக்கச் சொன்னாராம். இதனைப் பொறுக்க முடியாமல் நமது பாரதி 'என்னை ஏழடி அடித்த ஜமீன்தாருக்கு ஏழு ஜென்மங்களுக்குப் பிள்ளை பிறக்காமல் போக' என்று ஏழு வெண்பாக்களைப் பாடி முடித்தாராம்.

1897-ம் வருடம் **பாரதி** யவர்கட்கு கடயத்தில் ஸ்ரீமதி. **செல்லம்மாளுடன்** மணவினை நிகழ்ந்தேறியது. மணம் முடிந்த மறு வருடமே ஸ்ரீ சின்னசாமி அய்யரவர்களை நமன் தன் சொத்தென வலிந்து பறித்துக்கொண்டு விட்டான். அதன் பிறகு **திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில்** மூன்றாண்டுகள் கழித்தனர்—5-வது பாரம்வரைப் படித்தார். அப்பொழுது அவர் தமிழ் வித்வான்களோடு தொடுத்த வாதப் பிரதிவாதங்களுக்கும், சொற்போர்களுக்கும் அளவில்லை. தன்னைத் தாழ்த்த முயன்றவர்களை வெகு

சாமர்த்தியமாகவும், சமயோஜிதமாகவும் வாயடக்கிவிட்டிருக்கின்றார். இவைகளை இங்கு விரிக்கிற் பெருகும். இக் காலங்களைக் குறித்து பாரதியார் பிற்காலத்திலோர் செய்யுள் செய்துள்ளார்.

தந்தையார் மரித்த பிறகு 1901-ம் வருடம் காசிக்குச் சென்றார். அலகாபாத்துச் சர்வகலாசாலையில் ஒரு வருடம் வட மொழியைப் புதிதாகப் பயின்று, அவ் வருடமே பிரவேச பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினார்.

மூன்று வருடங்கட்குப் பின் மீண்டும் தமது சொந்த ஊருக்கு வந்து அங்குச் சமஸ்தானத்தினின்று அளிக்கப்பட்ட சொற்ப சம்பளத்தை வைத்துக் காலங் கழிக்கலானார். பின்னர் ஏதோ சில அசந்தர்ப்பங்கள் ஏற்பட ஊருக்கும், உற்றாருக்கும் வந்தனமளித்து விட்டு மதுரைக்கேகினார். அங்குச் சேதுபதி ஹைஸ்கூலில் ஓரிரண்டு மாதங்கள் தமிழ் பண்டிதரா யிருந்துவிட்டுத் திடீரென்று சென்னை 'சுதேச மித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியர் பீடத்தில் அமர்ந்தார். பத்திரிகையை வெகு விமரிசையாக நடத்தினார். தூங்கிக்கிடந்த தமிழரைத் துள்ளி எழப் பண்ணிவிட்டார். இவர் உள்ளம் மலர்ச்சி பெற்றுவிட்டது. இரண்டாண்டுகள் கழிந்த பின்னர் 'இந்தியா' என்ற பத்திரிகை யொன்றைத் தாமே நடத்தினார். நாட்டிலோர் புது ஆதர்ஸத்தை—நவ வேகத்தை—தேசக் காதல் உணர்ச்சியை உண்டுபண்ணித் தந்தார்.

பாரதியார் 'சுதேசமித்திரன்' உதவி ஆசிரியராய் அமர்ந்திருந்த பொழுது அப்பொழுதுதான் **தேசபக்த சிங்கம் லாலாஜியை அரசாங்கத்தார் அவமே ராஜ துவேஷ குற்றத்திற்கு ஆளாக்கி பர்மாவின் வடபால் நகரியாகிற மாண்டலேக்கு அனுப்பிவைத்தார்கள்.**

'சுதேசமித்திரன்' பத்திரிகாலயத்தில் பாரதியார், ஜி. சுப்ரமண்ய அய்யர் மற்றுஞ் சில நண்பர்களும் இருந்தனர். அவ்வமயம் 'சுதேசமித்திரனு'க்கு லஜபதியின் தீவாந்திர சிக்ஷையைக் குறித்த தந்தி வந்தது. இதை அறிந்த பாரதியார் 'ஹா' என்று அலறினார். அடுத்த நிமிஷம் லாலாஜியின் மீது செம்பாகமான அருங் கவிகளைப் பொழிந்தாராம். கையிற் காகிதமுங் கிடையாது; எழுதுகோலும் இல்லை. **உள்ளம் குமுறிற்று; நாக்கு எழுந்து நின்றது; 'பண்ணமிழ்த மழை தானே வர்ஷித்தது'.** கவியின் சாமர்த்தியத்தைப் பாருங்கள்! ஆஹா!

1908-ம் வருடம் பாரதியார் 'செந்தமிழ் **புதுவை'** புகுந்து அங்கு விலங்கற்ற கைதியாய் வாழ்வாராயினர். இங்கு இவர் அனுபவித்த யாதனைகளுக்கோர் அளவே கிடையாது; ஆதரிப்பார் அற்று,

புகழ்பவரற்று, பலவாறு துன்புற்றார். இக்காலத்திலேதான் அவர் பல பல நூல்களை எழுதிக் குவித்தார். இத் துன்ப காலத்தில் துன்பம் தோன்றாதவாறு பாரதியார் போதை தரும் லாகிரி வஸ்துவாகிய அபினைத் தின்னப் பழக்கம் செய்துகொண்டார். தாம் அபினைத் தின்றுவிட்டுக் கவிதைகள் எழுத உட்கார்ந்தாரானால் போதை தீரும் மட்டும் கை சலிக்காமல் எழுதிக்கொண்டேயிருப்பார். புதுவையில் தொடங்கிய இத் தூர்ப் பழக்கம் இறுதியில் இவருக்குக் கூற்றாகவே முடிந்தது. காரணம் வறுமை! வறுமை!! இவர் இறப்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் அபினைத் தின்றாராம். இவர் புதுவையில் வசித்தபொழுதுதான் தேச பக்தர் வ. வே. ஸு. அய்யரின் அன்பும் தொடர்பும் கிட்டியது. இவ்விருவருஞ் சேர்ந்து தாகூரடிகளின் சிறு கதைகளை வெகு அழகாகவும் திறமையோடும் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

முன்பு 'சுதேசமித்திரன்' தமிழ் நாட்டைப் பற்றித் தமிழில் அழகாக பாட்டொன்று யார் பாடுகிறார்களோ அவர்களுக்குக் கொஞ்சம் ரூபாய் பரிசளிக்கப்படும் என்றது. தான் எத்தனை அழகாக எழுதினும் தனக்குப் பரிசு கிடைக்காது என்பதை பாரதியார் நன்கு உணர்ந்து வாளா இருந்தார். ஆனால் பாரதியாரின் நண்பர்கள் அவரை வற்புறுத்தினர். அன்பர்கள் வேண்டுகோளைத் தட்டாத பாரதியார் அன்றிரவே 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற பத்துப் பாட்டுக்களை எழுதி மறு நாள் தன் நண்பர்களிடங் கொடுத்தனர். 'சுதேசமித்திரனு'க்கு அனுப்பப்பட்டது; பாரதியாருக்குப் பரிசு கிடைக்கவில்லை. பாரதியாரை ஆதரித்த சுதேசமித்திரனைப் பார்த்தீர்களா? வெட்கம்! வெட்கம்! கடைசியாக இவரது தேக பலம் குறைந்துகொண்டே வந்து, 1921-ம் வருடம் செப்டம்பர்மீ 11-ம் தேதி தமிழ் நாடு முழுதும் துக்க சாகரத்தில் மூழ்க பாரதியார் திருவல்லிக்கேணியில் பூத உடல் நீத்தார். உயிருள்ளவரை பாரதியாரைப் பராமுகஞ் செய்து பட்டினி போட்டுக் கொன்ற தமிழர் இப்பொழுது சிறிது கண் விழித்தனர். அந்தோ மணியை இழந்தோம்! மாணிக்கத்தை இழந்தோம்! தமிழகத் தனிப் பெருங் கவிதைப் பயிர் பறி போயிற்று!

பாரதியார் அருள் கவி. அவர் பாக்கள் அருட் பாக்கள் என்று பலர் கூற நான் கேட்டிருக்கிறேன். பாரதியார் பல நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர். ஒன்றும் படிக்காமல் ஏதோ அருள் வலிமையால் பாட்டுகள் பாடினார் என்பது ஒப்ப முடியாத உண்மை. எத்தனை தூரந்தான் அருள் செல்லும்! பாரதியாரே தனது நண்பர்களிடம் "கவிராயர் வீடுகளுக்கு நான் அலைந்த அலைச்சல் எனது கால்களுக்கன்றோ தெரியும்" என்று அடிக்கடி சொல்வாராம். மேலும்

15 JUL 1933 MADRAS

ஹிந்திப் பிரசாரமும் தமிழபி விருத்தியும்.

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

சென்ற பதினைந்து வருஷங்களாகத் தென்னாட்டில் ஹிந்திப் பிரசாரம் நடந்துகொண்டிருக்கிறது. அதுவும் கடந்த மூன்று வருஷங்களுக்குள் அதற்கு ஆதரவு மிகவும் அதிகமாகக் கிடைத்திருக்கிறது.

"ஹிந்திப் பிரசாரம்" என்று ஆரம்பித்த காலம் முதற்கொண்டே 'ஆங்கிலம், தாய்ப்

ஒரு நண்பர் தான் எழுதிய பாட்டைத் திருத்த அவரிடம் போன போது, அதைப் படித்துவிட்டு "அப்பா இன்னும் சிறிய பதங்களை உபயோகிக்கப் பழக்கிக் கொள். அதற்கு அனுகூலமாக கல்லாடத்தைப் படித்து வா" என்று கூறினாராம்.

இவர் நாலாயிரப் பிரபந்தத்தை நன்கு கற்று இருக்கிறார். இதனை அவரது கண்ணன் பாட்டே வெளியிடும்; கம்ப ராமாயணத்தைப் பசுங் குழவிகள் தாய்ப் பாலைக் குடிப்பது போன்று பருகுவாராம். எனவே 'பண்ணமிழ் தத்து அருள் மழை' பொழிந்த பாரதியார் மகா கல்விமான் என்பது ஒரு தலை.

இவர் சில சமயங்களில் இயற்கை யழகில் ஈடுபட்டுச் சொல்லொணா இன்பம் எய்தித் திளைப்பாராம். இன்னும் சமஸ்த ஜீவராசிகளிடத்தும்—புல் முதல் மனிதன் ஈறாக—செந்தண்மை பூண்டொழுகும் பான்மையர் நம் கவி. 'காக்கைக் குருவிகள் எங்கள் ஜாதி' என்ற பாட்டில் இதைக் கண்டு கொள்க. இத்தகைய இன் கவியின் என்பு தோல் போர்த்த யாக்கை இன்று நம்மைப் பிரிந்து விண்ணிடைத் தவம் செய்து கிடந்தாலும் இவரது 'காணி நிலம்', 'சந்திரமதி', 'வேலன் பாட்டு' இவைகளில் (புகழுடம்பு எய்தி) இன்றும் அழியாது வாழ்ந்து வருகின்றார்.

பாஷை இவைகளுக்கு மேல் ஹிந்தியையும் படிப்பது கஷ்டம்' என்ற கூக்குரல் இருந்துவந்திருக்கிறது. "ஆங்கிலத்தால் தாய்மொழி குட்டிச்சுவராய்ப் போய்விட்டது. இப்பொழுது ஹிந்தியையும் கொண்டுவந்து நுழைத்து அதை முற்றிலும் கொன்றுவிடப் பார்க்கிறார்களே" என்ற புகாரும் அதிகமாக இருந்து வந்தது. வர வர 'ஹிந்திப் பிரசாரத்தால் இந்த இரண்டு விதமான தீங்குகளும் உண்டாகவில்லை" என்ற நம்பிக்கை பொது ஜனங்களுக்கு உண்டாயிருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் மிகவும் அன்புடன் ஹிந்திப் பாஷையைப் பயில்பவர் தொகை அதிகரித்திருப்பதுடன் தாய்ப் பாஷையையும் அதிகமாகவே கவனித்து வந்திருக்கிறார்கள்.

என்றாலும், சென்ற வருஷம் திருச்சியில் கூடிய தமிழபிமானிகள் மகாநாட்டில் ஹிந்திப் பிரசாரத்தைக் கண்டித்திருக்கிறார்கள். 'ஹிந்தி அவசியமில்லை' என்றும், 'அது தாய் பாஷைக்குச் சத்ரு' என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். ஹிந்தியைப் பயில்வதால் ஜனங்களுக்கு நன்மையுண்டாகுமென்பது மட்டுமன்று; தாய்ப் பாஷைக்கும் அதனால் விசேஷ நன்மையுண்டு என்பதுதான் என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம். இதற்கு ஆதாரவாக இரண்டொரு விஷயங்களைத் தமிழபிமானிகள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஹிந்தியால் ஏன் தாய்மொழிக்குத் தீங்கு நேருவதாக நினைக்கிறார்கள்? இதை யோசிக்குங்கால் அடியிற் கண்ட காரணங்கள் சொல்லக்கூடும் என்று தோன்றுகிறது:—

(1) ஹிந்தியைப் படிக்க வேண்டுமென்ற ஆசையை ஜனங்களுக்குள் பரப்புவதால், தாய் பாஷையைப் பயில வேண்டுமென்ற மனப்பான்மையே நசித்துப் போகிறது.

(2) ஹிந்தியைப் பயிலுங் காலம் தமிழ் பயிலுவதற்கு இல்லாமற் போகிறது. ஹிந்திப் பிரசாரம் என்று ஒன்று இல்லாவிட்டால் தாய்மொழியைக் கற்க இன்னும் பல பேர் முன் வருவார்கள். அவர்களுக்கு இன்னும் அதிக நேரம் தமிழைப் படிக்கக் கிடைக்கும்.

(3) ஹிந்தியைப் பரப்புவதில் ஏராளமான செல்வம் செலவாகிறது. அதையெல்லாம் தாய்ப் பாஷையின் அபிவிருத்திக்காகச் செலவிடுவோமாயின் அது மிகவும் சிறப்பான நிலைமையையடையக்கூடும்.

(4) ஹிந்திப் பிரசாரம் முக்கியமானதாகக் கருதப்படுவதால், ஹிந்தியில் செய்யும் சிறியதொரு வேலையும் பத்திரிகைகளில் விசேஷமானதாகப் போற்றப்படுகிறது. அதற்குப் போதுமானதைக் காட்டிலும் அதிகமாகவே விளம்பரம் கிடைக்கிறது. தாய் மொழியில் வேலை செய்வோருக்கு இப்படிப்பட்ட விளம்பரம் இல்லை. ஆதலால் தாய்மொழியின் பக்தர்களுக்குப் போதுமான உற்சாகம் ஏற்படுவதில்லை. ஹிந்திப் பிரசாரத்தால் ஏற்பட்ட பழி இது.

சாதாரணமாக ஹிந்திப் பிரசாரத்தின் விரோதிகள் சொல்லக்கூடிய ஆக்ஷேபங்களெல்லாம் மேலே கண்ட நான்கு விஷயங்களுக்குள் அடங்கும் என்று நினைக்கிறேன். அப்படி வேறு ஏதாவது ஆக்ஷேபங்கள் இருந்து அவைகள் தெரிவிக்கப்பட்டால், அவைகளையும் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு முடிவையடைந்து அதைப் பிரசாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் இவைகளை எழுத முன்வரவில்லை, சில அபிப்பிராயங்கள் என் மனத்தைக் கெட்டியாகப் பற்றி இருக்கின்றன. இவைகளை மற்றவர்கள் முன்பாக வைத்து அவர்கள் நினைப்பதையும் அறிய விரும்புகிறேன். இந்த ஆராய்ச்சியால் ஹிந்திக்கும் தாய்ப் பாஷைக்கும் ஏதாவது நன்மையுண்டாகலாம் என்ற எண்ணத்துடன்தான் இந்த அபிப்பிராயங்களை வெளியிடத் துணிந்தேன்.

ஹிந்தியால் தாய்ப் பாஷை படிக்க வேண்டுமென்ற மனப்பான்மை நசித்துப் போவதென்றால், அதைவிடத் தீங்கு வேறொன்றும் நேரப் போவதில்லை. ஆங்கில மொழியின் பிரசாரத்தால் தமிழுக்குச் செல்வாக்கு மிகவும் குறைந்து போயிருக்கிறது. ஆனால் ஹிந்திப் பிரசாரத்தால் இத்தகைய தீங்கு நேரவில்லை என்று சற்று யோசித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

தேசியத்தின் வளர்ச்சியால்தான் இந்தியாவிலுள்ள பாஷைகளுக்கெல்லாம் ஒரு வளர்ச்சி ஏற்பட்டு அவைகளின் செல்வாக்கு நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வந்திருக்கிறது. கிராமங்கள் தோறும் பிரசாரம் தாய்ப் பாஷையிலேயே நடந்திருக்கிறது. தேசியக் கொள்கைகளைப் பல விடங்களிலும் பரப்புவதற்காக தாய்மொழியில் எழுதப்பட்ட பத்திரிகைகள் பல தோன்றி வளர்ந்திருக்கின்றன. இதற்கு மேல், திறமை வாய்ந்த நூலாசிரியர்களும் தேசிய உணர்ச்சியால் தாய்ப் பாஷையிலேயே பேசவும் எழுதவும் தொடங்கி இருக்கிறார்கள்.

எந்த தேசியத்தால் தாய்ப் பாஷைகளெல்லாம் விருத்தியடைந்திருக்கின்றனவோ அதே தேசியத்தால்தான் ஹிந்திப் பிரசார இயக்கமும் தோன்றி முன்னேற்றமடைந்திருக்கிறது. 'இந்தி

யாவிலுள்ள பல மாகாணத்து மக்களும் ஒன்றுகூடி நடத்தும் காங்கிரஸ் மகா சபைகளிலும் இதர சபைகளிலும் அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தை உபயோகிப்பதென்றால் அது தேசியத்துக்கே பெருத்த அவமானமாகும்' என்ற எண்ணமானது திரண்டு உருவெடுத்து ஹிந்திப் பிரசார இயக்கமாக விளங்கியிருக்கிறது. தற்காலம் நடக்கக்கூடிய பல மாகாணத்தார் ஒன்றுகூடும் தேசியக் கூட்டங்களிலும் எதிர்கால இந்திய சட்டசபையிலும் இந்தியர்கள் ஹிந்திப் பாஷையையே உபயோகிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

ஆகையால் 'ஹிந்திப் பிரசாரமும் மாகாண பாஷைகளின் அபிவிருத்தியும் தேசிய மனப்பான்மையின் சின்னங்கள்' என்று ஏற்படுகிறது. ஹிந்திப் பிரசாரம் தழைத்தோங்குமானால், தேசிய உணர்ச்சி பலமாக இருக்குமிடங்களில் ஹிந்தியும் அபிவிருத்தியடையும். அதே மாதிரி தாய்ப் பாஷையின் அபிவிருத்தியால் தேசிய உணர்ச்சி பலப்படும்; தேசிய உணர்ச்சி பலப்படுமிடங்களில் தாய்ப் பாஷையின் அபிவிருத்தியும் தவறாமல் உண்டாகும். ஆகையால், ஹிந்திப் பிரசாரம் பலப்பட்டு வருகிறதென்றால், அதனால் தேசியத்துக்கும் தாய்ப் பாஷைக்கும் பலம் அதிகரிக்குமென்பது திண்ணம்' என்று ஏற்படுகிறதல்லவா? எனவே 'ஹிந்திப் பிரசாரத்தால் தமிழ்ப் பாஷையின் வளர்ச்சி குன்றிப் போகும்' என்பது தவறான அபிப்பிராயமென்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது.

இந்த முடிவு வெறும் யுக்திவாதமென்று நினைப்பது மிகவும் தவறாகும். எத்தனையோ பேர் முன்பு ஆங்கிலத்தின் மோகத்தில் ஆழ்ந்திருந்தவர்கள் தேசியத்தின் வேகத்தால் முதலில் ஹிந்தியைப் படித்து வந்தார்கள். பிறகு தாய்மொழிக்குப் பிராதான்னியம் அதிகம் கொடுக்க வேண்டுமென்ற ஆவலால் அதை அதிக ஆர்வத்துடன் பயின்று வருகின்றனர்.

ஆங்கில மொழியானது தாய்ப் பாஷையைச் சேர வேண்டிய பெருமையுள்ள ஸ்தானத்தை வகித்து வந்ததென்ற விஷயத்தை நிரூபிக்கத் தேவை இல்லை. தேசத்தில் எல்லாப் பாஷைகளைக் காட்டிலும் அது மேம்பட்டு விளங்கியிருந்ததுமன்றி "தாய்ப் பாஷையில் விவகாரங்களை நடத்துவதுகூட வெட்கக்கேடானது" என்ற தப்பான மனப்பான்மையையும் உண்டாக்கி இருக்கிறது. தேசியத்தின் வேகமானது ஆங்கில மொழியை அது அநியாயமாக வகித்து வந்த ஸ்தானத்திலிருந்து நீக்கி, அங்கே ஹிந்தியை நிலைநாட்டியிருக்கிறது. ஆங்கில மொழியின் வீழ்ச்சியால் தமிழ்

போன்றதாய் மொழிகளின் வளர்ச்சிக்குக் குறுக்கே நின்ற ஒரு பெரிய தடையானது நீங்கிப் போகவே அவை முன்னேற்றமடையலாயின. ஆனால் ஆங்கில மொழியைப் போல் ஹிந்தி மற்ற பாஷைகளை ஒடுக்க விரும்பவில்லை. மற்ற பாஷைகளுக்கு அவைகள் பேசப்படும் மாகாணங்களில் பிரதான்னியங் கொடுத்து அவைகளுக்கு அடுத்தபடி ஹிந்திக்கு ஒரு ஸ்தானங் கிடைத்தால் போதுமென்று ஹிந்திப் பிரசாரர்கள் முதலிலிருந்தே சொல்லி வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். 'எதிர்காலத்தில் வேறு விதமாகச் சொல்லுவார்கள்' என்று நினைக்க இப்பொழுது யாதொரு முகாந்திரமும் காணோம்.

இப்படித் தாய்மொழிக்கு முக்கிய ஸ்தானமும், அதற்கப்புறம் ஹிந்திக்கு ஓரிடமும் கொடுத்திருப்பது நல்லதென்றே சொல்ல வேண்டும். தமிழில் பாண்டித்திய மடைந்திருப்பவர்கள் வேறு சில பாஷைகளிலும் அபிவிருத்தியடைந்தால் அவர்கள் எழுதும் நூல்களில் ஒரு புதிய ஒளி தோன்றும் என்பதிற் சந்தேகமில்லை, பழைய காலத்திலாகட்டும், தற்காலத்திலாகட்டும் எல்லா பாஷைகளிலும் நூல்கள் எழுதியிருக்கும் பேராசிரியர்களிற் பெரும்பாலாரும் ஒன்றுக்கு மேற்பட்ட பாஷைகளை அறிந்துதானிருக்கிறார்கள். ஆங்கில பாஷையின் அபிவிருத்தியாலேற்பட்ட ஒரு அனுகூலமும் இத்தகையதேயாகும்.

தவிர ஹிந்தியில் மற்ற எல்லாப் பாஷைகளிமுள்ள நூல்களையெல்லாம் மொழிபெயர்க்க இப்பொழுது நல்ல தருணம் ஏற்பட்டிருக்கிறது. ஹிந்தியிலும் மற்ற பாஷைகளிலுள்ள நூல்கள் மொழிபெயர்க்கப்படலாம். இதனால் இந்தியாவிலுள்ள எல்லாப் பாஷைகளிலுமுள்ள சிறந்த நூல்களுக்கு நல்ல பிரசாரம் ஏற்படுவதுடன் அவைகளில் முன் இல்லாத நூல்களும் எழுதப்படுவதற்கு ஹிந்திப் பிரசாரம் ஒரு முக்கிய காரணமாகிறது.

ஆகையால், தமிழர்களாகட்டும், மற்றவர்களாகட்டும், தங்கள் ஆயுளில் ஒரு பாகத்தை ஹிந்தி கற்றுக்கொள்ளுவதற்காகச் செலவிட்டால், அதற்காகத் தமிழபிமானிகள் குறை கூறுவது அழகாகாது. விரிந்ததொரு மனப்பான்மையை யுண்டாக்குவதற்குக் காரணமாயிருப்பதும், அதனால் வேறு தீங்குகளில்லாததுமான ஹிந்திப் பிரசாரத்தை வரவேற்பதுதான் நமக்கு ஒழுங்காகும்.

எப்பொழுது ஹிந்திப் பிரசாரம் தேசியத்துக்கு இன்றியமையாததென்று ஏற்படுகின்றதோ, அப்பொழுது 'அதற்காகச் செலவிடப்படும் பணம் தமிழபிவிருத்திக்கு இல்லாமற் போகிறதே' என்று வருத்தப்படலாகாதன்றோ? மேலும், வட இந்தியாவி

இராஜீயப் பிற்போக்காளருக்கோர் எச்சரிக்கை.

திரு. K. வெங்கட ராவ் அவர்கள்.

நம் தெய்வீகத் திருநாட்டை, அடிமை வாழ்வினின்று விடுவிக்கத் தோன்றியுள்ள தேசீய இயக்கத்தைப்பற்றியும் தேசீய வீரர்களைப்பற்றியும் அலக்ஷியமாய்க் கருதிப் பேசுவோர் பலருண்டு. ஆனால் அன்னை பணியே அரும் பணியெனக் கொண்ட தேசீய வீரனே! நீ இவற்றைச் சிறிதேனும் பொருட்படுத்தாதே! உன் கடமையை நீ செய்துகொண்டேயிரு!

விருந்து தென்னாட்டில் ஹிந்திப் பிரசாரம் செய்வதற்கென்று பெருத்த தொகைகள் நன்கொடையாக வந்திருக்கின்றன.

ஹிந்திப் பிரசாரத்துக்கு விளம்பரம் அதிகம் ஏற்பட்டு வருகிறதென்பது உண்மையே. ஆனால், இதற்காக அதைக் குறை கூறுவதைக்காட்டிலும், அது நடத்தப்படும் முறைகள் பலவற்றையும் கைக்கொண்டு தமிழ் மொழியை விருத்தி செய்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும். ஹிந்தி சென்ற 50, 60 வருஷங்களுக்குள் விசேஷமான அபிவிருத்தியை யடைந்துவந்திருக்கிறது; பல கஷ்டங்களுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு முன் வந்திருக்கிறது. அது அனுசரித்துவரும் பல முறைகளையும் தமிழர்கள் லாபகரமாக அனுசரிக்கலாம். பதினைந்து வருஷங்களுக்கு முன் தென்னாட்டில் ஹிந்திப் பிரசாரம் ஆரம்பமானபோது, அது எவ்வளவோ கஷ்டமான நிலைமையிலிருந்தது. அதிலிருந்து அது இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்ததற்கு முக்கிய காரணம் ஹிந்தி அபிமானிகளின் உற்சாகந்தான். அதேமாதிரி தமிழபிமானிகளும் தமிழை விருத்திசெய்ய முன் வருவார்களானால், 4, 5 வருஷங்களுக்குள்ளாகவே தமிழ் மொழி செழித்தோங்கும் என்பதிற் சந்தேகமில்லை. ஹிந்தி அபிமானிகள் எந்தெந்த முறைகளைக் கையாண்டு எப்படி முன்னுக்கு வந்தார்கள்? தமிழபிமானிகளும் எந்த அளவுக்கு எந்த விதத்தில் அவைகளைப் பின்பற்றலாம்? என்பவைகளைப்பற்றி பின்னால் ஆலோசிப்போம்.

தேசீய வீரனே! முன்னேற்றப் பாதையில் செல்ல முன் வந்துற்ற சகோதரனே! இனி வருங் காலம் உன்னுடையதே! மனக்களிப்புடன் ஆரவாரம் செய்வாய்! ஸ்வராஜ்யப் பேச்சே உன் மனதில் ஓர் நவீன உணர்ச்சியைத் தோன்ற வைத்துவிட்டது. ஸ்வராஜ்யப் பித்தே உன்னை அஞ்சா நெஞ்சினனாக்கி வருகிறது. அஞ்சேல்! உன்னைப் பைத்தியக்காரனென சிலர் கூறுவர். நீ அதை ஒப்புக்கொள்; சினங்கொள்ளேல். "நான் ஸ்வராஜ்யப் பைத்தியக்காரன்" என்று கம்பீரமாய் மறுமொழி கூறு. உன் போன்ற பைத்தியக்காரர்கள் இப் பாரந்த உலகின்கண், எண்ணிலா நற் கருமங்கள் புரிந்து புகழுடம் பெய்தியதை உலகச் சரித்திரம் வீரச் சுவையுடன் குறித்துக் காட்டுகிறது. தேசீய நறுமணங் கமழும் இயக்கம் வெற்றி பெருமற் போகாதென்பது உறுதி. தேசீய வீரனுக்கே ஜெயதேவி வெற்றி மாலையைச் சூட்டுகிறாள்.

தேச பக்தி மிகுந்த சூர சூளாமணியே! நீ நாளுக்கு நாள் முன்னேற்றமடைகிற வேகமோ கடும் புயலின் வேகத்தையுந் தோற்கடிக்கிறது. ஆனால் உன்னைச் சூழ்ந்துள்ள பிற்போக்காளர்களும் வீண் சந்தேகப் பிறவிகளும் உன் ஆதர்சத்தைக் கண்டு திடுக்கிடுகின்றனர். "போதும், போதும் நில்" என்கின்றனர். இம்மட்டோ? பெரியார் பேச்சைத் தட்டுபவன், மரியாதை பூண்டொழுகாதவன், போராடுங் குணங்கொண்ட பித்தன் என்று பல வாறு இடித்துரைக்கின்றனர். சகோதரனே! உன் மனதில் "தேச பக்தி" எனும் அக்னி கொழுந்துவிட்டெரியும் சக்தியை இன்னார் அறியார். தேசத் தொண்டு புரியும் உன் அளவிலா ஆற்றலையும், அன்னைபால் உனக்குள்ள பக்தி மேலீட்டலையும், வீழ்ந்துள்ள தாய் நாட்டின்பால் நீ செய்யத் தயாரா யிருக்கும் தியாகத்தையும் இவர்களறியார். உன் வீரத்தை இவர்களது பயங் கொள்ளித்தனத்தால் எதிர்க்க இயலாது. உன்னுடைய தன்னம்பிக்கை யுணர்ச்சிக்கு முன்னே இவர்களின் சந்தேக புத்தி கணமேனும் நிற்கொணாது.

தன்னம்பிக்கையுந் தன்னுறுதியுங் கொண்டவர்களுக்கு அன்னையின் அருள் சுரக்கும். "லோகநாயகியே! உலகை ஊக்குவிக்கும் சக்தித் தாயே! சீருக்குச் செல்வியே! வாழையடி வாழையாய் வந்துன் பணி செய்வோம்! எங்கள் தெய்வீகத் திருநாட்டில் வீரப் பெருக்கோங்குமாறு அருளாய்! மாண்பு பெருகவென்று சொல்லாய்! மாந்தர் சுதந்திரம் மன்னுகவென்று ஆசி கூறுதும்! அருளும், அன்பும், அறமும், நிறைவுந் திருவும் பெருகுங் கருணை யருளாய்!" என்று சக்தி யன்னையை தேசீய வீரன் துதிக்கிறான். சுத்தானந்த பாரதியார் பாடுவது போல்

"வறுமையும் மடமையும் மங்கிடத் தொழில்வளம்
மல்கிட வெங்கினு மருளாய்!
பொறுமையும் பெருமையும் வீரமு முண்மையும்
பொலிந்திடப் பூவினுக் கருளாய்!
சிறுமையுந் தீமையுந் தேய்ந்திட மாந்தரின்,
சீர்மை விளங்கிட வருளாய்!
மறுமையு மிம்மையும் மங்கள மான,
சுதந்திர வாழ்வினை யருளாய்"

என்று ஒவ்வொரு தேசீய வீரனுங் களிகூர்ந்து பாடுகிறான். இவனோ, தன் முன்னோர்களின் கலைகளைப்பற்றியும், நாகரீகத்தின் சிறப்பைப்பற்றியும் பெருமை பாராட்டிக் கொள்ளுகிறான். தன் தாய்நாடு அன்னியர் ஆதிக்கத்தின் கீழ் அடைந்து வரும் க்ஷீணதசையைக் கவனித்து இதற்கோர் பரிகாரந் தேடலவசியமெனக் கொண்டு இதற்காக எத்துணை தியாகம் புரியவும், கஷ்டங்களனுபவிக்கவும் சிறைவாசம் புரியவும் பின் வாங்குவதில்லை. தேச முன்னேற்றத்திற்குகந்த எத். திட்டத்தையும் ஏற்றுத் தொண்டாற்ற இவனே முன்னணிக்கு மார்தட்டி ஆர்வத்துடன் முன் வருகிறான். இவனது ஆர்வமோ பயமென்பதறியாதது. எவ்வித கஷ்டங்களையும் எதிர்த்து நிற்கத் தயங்காதது. வீண் சந்தேகப் பேர்வழிகள் "ஜாக்கிரதை" என்று பதறுவதைப் பொருட்படுத்தாதது.

இந்திய தேசீய இயக்கமானது மனித ஜாதியின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டதோர் புனித இயக்கம். தேசீய வீரனோ சகல துறைகளிலும் முன்னேற்றத்தையே நாடி யுழைப்பவன். இதற்கு மாறாக ஓர் சாரார் முன்னேற்றம் என்பதைக் கனவிலும் கருதத் திறனும் திடமுமின்றி, தற்கால நடை முறைகளிலேயே ஓடிக்கொண்டிருக்க மனங் கொண்டவர்கள். வாலிப வீரனின் உணர்ச்சி, நடத்தைகள், ஆவேசம் இவற்றின் கருத்தென்ன? இவர்கள் நாடி யுழைப்பதென்ன? இத்தகைய பிரச்னைகளைப்பற்றி பிற்போக்காளர்கள் சிறிதேனும் சிந்திப்பதே கிடையாது. பிறர் கூறினும் அவற்றிற்குச் செவி சாய்ப்பதில்லை. ஏனெனில் இவர்கள் சகலமும் தெரிந்தவர்கள் என்று எண்ணிக் கொள்ளுகின்றனர். அல்லது தங்கள் வாழ் நாட்கள் முழுவதையும் கழித்துவிட்டதாகவும், வாழ்வின் உத்தேசத்தையும் நிறைவேற்றிக்கொண்டு விட்டதாகவும் நினைத்துக்கொண்டு எமதருமனை நோக்கி, "ஐயனே! என் மீது உன் வலை வீசுவது என் நலனுக்கே" என்று முறையிடுகின்றனர். இதனாலேதான் இத் துறவிகளுக்கு(?) தேசீய உணர்ச்சியைப் பற்றி வாயில் வந்ததே பேச்சாகப் பேச மனம் வருகிறது போலும்

நாம் உலகில் மானிடராய்ப் பிறந்தபோதே நம்முடன் ஒரு வினையும் பிறந்தது. அவ் வினையைச் செய்து முடிப்பதில்தான் இவன் நரன், அவன் தேவன், மற்றொருவன் விலங்கு என்று பாகுபாடு ஏற்படுகின்றது. அற நூல் ஆசிரியர் கூறும் வண்ணம்

"தமக்காக வாழுமாஞ் சாலம்; மனிதர்
பிறர்க்காக வாழ்வர் பெரிது"

மிருகக் கூட்டங்கள் தம்மைக் கருதியே உண்டு உறங்கிப் பெற்று வளர்த்துப் பகுத்தறிவின்றி வாழுகின்றன. மனிதன் பிறர் நலத்தைக் கருதி வாழுபவன். தான் உண்பதும் பிறருக்கு ஊழியஞ் செய்யத் திறன் பெறுவதற்கே. மிருகங்கள் சாதாரண அறிவுள்ளன. மனிதன் தன்னறி வுள்ளவன். சாதாரண அறிவால், தான் பார்க்கும் பொருள்களில் தனக்கு வேண்டியதை மட்டும் மிருகங்கள் அறிகின்றன. மனிதன் தன்னறிவால் பார்ப்பதையெல்லாம் அறிந்து, உலகினின்று தான் வேறுபட்டவனாக அறிகிறான். பல எண்ணங்கள் எண்ணுகிறான். அவற்றை மொழிகிறான். இன்ப துன்பங்களை யறிந்து பிறருக் குதவுகிறான். தன்னுள்ளிருக்கும் கடவுளை உலகெலாங் காண்பவன் தான் அத்யாத்ம அறிவோன் அல்லது உள்ளறிவோன். மனிதன் பகுத்தறிவுடன் பரோபகாரஞ் செய்யவே பிறந்தான். பிறர்க்கென வாழப் பிறந்தவர் மக்கள். இவ் வற வுண்மைகளை நம்மாவியுள்ளே குறித்துக் கொள்வோமாக!

இந்திய தேசீய வாழ்க்கை என்னும் அலைகடல் துள்ளிக் குதிக்கத் தலைப்பட்டுவிட்டது. சக்தி யென்னும் அருளொளி இத் தேயத்தின் ஒவ்வோர் மூலை முடுக்கிலும் தன் அரிய கிரணங்களை வீசத் தொடங்கிவிட்டது. ஒவ்வோர் உண்மை இந்தியனின் மனதிலும் செயலிலும் அளவிலா வீரம் ததும்பிக் கூத்தாடுகிறது. உண்மை இந்திய இரத்தம் தங்கள் நரம்புகளிலோடும் ஒவ்வொருவரும் அன்னை பணியே தெய்வப் பணியெனக் கொண்டு தொண்டாற்ற முன் வந்துவிட்டனர். தேசீயம் என்னும் உணர்ச்சியால் நம் நாடு அடைய விருக்கும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போட எண்ணுவோர் பித்தர்களே யாவர். பிரான்சு தேசத்தில் புரட்சி இயக்கம் தோன்றி முறட்டுப் பிடிவாதக் காரர்களை மெய்ம் மறந்து நிற்கச் செய்த காலையில் ஓர் கவி, "ஜாக்கிரதை! அருகில் வந்தால் நசிந்துபோவாய்" என்று எச்சரிக்கை செய்ததுபோல் நம் தேசீய இயக்க விரோதிகளுக்கும் அரசியல் பிற்போக்காளருக்கும் உரியதோர் எச்சரிக்கை செய்கிறோம். அதனை ஏற்று நல் வழிப்படுவார்களா?

பரதேசி *

திரு. எஸ். வி. வெங்கடநாராயண சர்மா அவர்கள், B.A., B.L.

யமுனாவினுடைய கணவன் இறந்த பிறகு அவளுடைய அன்னை யசோதா யமுனாவை புக்ககத்திற்கு அனுப்பவில்லை. தன்னிடத்திலேயே நிறுத்திக்கொண்டாள். யசோதைக்கும் சுற்றத்தார் எவருமில்லை. அவளுடைய கணவன் இறந்து ஆறு வருடங்களுக்கு மேல் ஆயின. ஒரு மகன் இருந்தான்; அவனும் இறந்துவிட்டான். இதன் மத்தியில் யமுனையும் எந்தப் பசியின். காரணத்தாலோ தன் கணவனைச் சாப்பிட்டுவிட்டு வீடு வந்து சேர்ந்தாள். அவளைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு வீட்டுக் காரியங்களைச் செவ்வனே நடத்திவர உத்தேசித்திருந்தாள்.

பட்டினத்தில் யசோதையின் வீடுகள் அநேகம் இருந்தன. அவைகளிற் கிடைக்கிற வாடகையை வைத்துக்கொண்டே யசோதை தன் வாழ்க்கையை நடத்தி வந்தாள். வாடகை கொஞ்சமாகவல்ல; ஏதேஷ்டமாக இருந்தது. வெறுங் கஞ்சியைக் குடித்துக் காலங் கழிக்காமல் இரண்டு வேளையும் இராஜ போஜனம் உண்பதற்குப் போதுமானதாக விருந்தது. வீட்டில் யசோதை தனியாகவே யிருந்தாள். கேவலம் யமுனை மாத்திரம் அவளுக்குத் துணையாக வந்தாள். அன்னையினுடைய ஹிருதயம் இப்பொழுதும் தன் குழந்தையைக் கண்டு ஆனந்தித்தது. அவளுடைய ஸ்தனங்களில் தன் குழந்தையைக் கண்டு பால் பெறுகிற்று. யமுனையின் வயது பதினேழு இருக்கும். அவனுடைய கணவன் ஸ்வர்க்கத்தை யடைந்து மூன்று வருஷங்களாயின. அவ் வுலகத்தில் யமுனையினுடைய அகங்கள் அத்தோடு முடிவடைந்தன ஹிருதயத்தினுடைய உல்லாசமும் மகிழ்ச்சியும் ஹிருதயத்திலேயே எக் காலத்திலுந் தலைத்தோங்கும்படி அமிழ்த்தப்பட்டன.

நாளைக்கு மறுநாள் சந்திர கிரஹணம் புண்யகாலம். சந்திர கிரஹணம் என்றால் மஹிமை பொருந்திய தினம். கங்காஸ்நானத்திற்

* ஹிந்தியிலிருந்து மொழிபெயர்ப்பு.

காக அநேகர் வெகு தூரங்களிலிருந்து வருகிறார்கள். லட்சக் கணக்கான யாத்திரீகர்களின் கூட்டங் கூடுகிறது. யசோதையின் வீடு நதிக் கரையிலேயே இருந்தது. அவளுடைய வீட்டுத் தாழ்வாரத்தில் சில தினங்களாக ஒரு ஏழைப் பரதேசி தங்கியிருந்தான். அந்த யாத்திரீகன் யௌவனம் பொருந்தியவன். ஆனால் பாவம் ஏழை. இந்தக் கூட்டத்தில் அவனுக்குத் தங்குவதற்கு வேறொரு இடமுங் கிடைக்கவில்லை. யசோதை மனமிரங்கி தன் வீட்டுத் தாழ்வாரத்தில் அவனுக்கு இடங் கொடுத்திருந்தாள்.

(2)

மாலைப் பொழுது யமுனை ஸ்நானாதிகள் முடித்துக்கொண்டு மாடியின் மேல் உலாவிக்கொண்டிருக்கும் பொழுது அந்தப் பரதேசி தாழ்வாரத்திற் கருகாமையிலுள்ள மேடையின் மேல் ரொட்டி தட்டிக்கொண்டிருந்தான். நனைந்த குச்சிகளால் அடுப்புச் சரியாய் எரியாத காரணத்தால் அதை ஊதி ஊதி அப் பரதேசியின் கண்களில் நீர் தாரை தாரையா யோடுவதை யமுனை பார்த்தாள். புகையினால் கண்கள் சிவந்துவிட்டன. தற்செயலாய் அவனுடைய கைகளில் நெருப்புப் பட்டுவிட்டால் அவன் கைகளை உதரிக்கொண்டு நெடுநேரம் வரைத் துடித்துக்கொண்டிருப்பான். ஒரு நாள் அவன் பருப்பு வேகவைத்திருந்த பாத்திரம் அடுப்பிலேயே கவிழ்ந்துவிட்டது. அதையும் யமுனை பார்த்தாள். தன்னுடைய முயற்சிகளெல்லாம் வீணானதைக் கண்ட பரதேசியின் மலர்ந்த முகம் தண்ணீரில்லாத் தாமரை மலர் போல் வாடிவிட்டது. "நம்முடைய தாயார் கருணையோடு இவ்வளவு உதவி செய்திருக்கும்போது அவனுக்கு ஆகாரமுந் தயார் செய்து கொடுத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று யமுனை யோசிப்பாள்.

பகல் முழுவதும் அக்கினியால் தகிக்கப்பட்ட ஓட்டுத் தாழ்வாரத்தில் பரதேசி கேவலம் ஒரு ஜமக்காளத்தை விரித்துத் தூங்கிக்கொண்டிருந்தான். வெய்யிற் காலத்துச் சுடு காற்றுத் தொந்திரவு செய்வதில் இன்னும் அதிக உதவி செய்துகொண்டிருந்தது. எச் சமயம் யமுனை அநேக குடங்கள் தண்ணீரால் செய்யப்பட்ட மாடியின் மேல் பாய், மெத்தை முதலியவைகளை விரித்து குளிர்ச்சியாகத் தூங்கிக்கொண் டிருந்தாளோ, சந்திரனுடைய குளிர்ச்சி பொருந்திய கிரணங்கள் அமிர்தமாரி பொழிந்துகொண் டிருந்தனவோ, மெல்லிய மந்த மாருதம் வீசிக்கொண்டிருந்ததோ அச் சமயம் யமுனையின் மனதில் இந்த ஏழைப் பரதேசியின் நிலைமைக்காக மிகுந்த கவலையுண்டாய்க்கொண் டிருந்தது. அவள் யோசிப்பாள், "பாவம் அந்த ஏழைப் பரதேசி வெப்பத்தினால் வியர்வை பொழிந்து நனைந்து கிடப்பான். சூரியனால் தகிக்கப்பட்ட தாழ்வாரத்தின் தரை மிகவுஞ்

சூடாயிருக்கும். அவனுடைய சரீரம் முழுதும் எரியும். நமது தாயாரால் கொடுக்கப்பட்ட கிழிந்த பனை விசிறியினால் தன்னை விசிறி விசிறி அவனுடைய கைகளும் ஓய்ந்திருக்கும். முன் பின் பார்த்திராத அப் பரதேசியின் நிலைமையை யோசித்து யோசித்து யமுனையின் குளிர்ந்த படுக்கையும் அடுப்பில் ஏற்றப்பட்ட பாண்டிலி போற் காணப்பட்டது. குளிர்ந்த மந்தமாருதம் உஷ்ணக் காற்றைவிட அதிக உஷ்ணமாகக் காணப்பட்டது. யமுனை தன் படுக்கையிலேயே துடிதுடித்தாள்.

எப்படிப்பட்ட இரவில் தருணிகள் தங்கள் காதலர்களின் கழுத்தில் மாலைகளை யணிகிறார்களோ, புதிய மணப் பெண்கள் தங்கள் அன்பர்களோடு சல்லாபம் செய்கிறார்களோ—எவ் விரவில் ரஸிகர்களான யுவர்கள் தங்கள் காதலிகளை மார்போடு தழுவி இன்புறுகிறார்களோ, தாங்களும் சிரித்து அவர்களையுஞ் சிரிக்கவைத்து இன்புறுகிறார்களோ—எந்த இரவில் தருணி, தருணர்களுடைய ஆனந்தக் கிரீடைகளினால் மிருதுவான படுக்கை கசங்கிப்போய் விடுகின்றதோ அதே இரவில் இந்த ஆனந்தகரமான குளிர்ந்த இரவில் தன் குளிர்ச்சி பொருந்திய பாயின் மேல் படுத்துக்கொண்டு ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களை எண்ணியபடியே எப்பொழுது விடியும் விடியும் என்று காத்துக்கொண்டிருந்தாள்.

(3)

இன்று சாயந்திரம் துர்க்கையின் கோவிலிலிருந்து யமுனை கொண்டு வந்திருந்த மல்லிகை மாலை இப்பொழுது அவளுடைய மார்பின் மேல் படிந்திருந்தது. அப்பொழுது எல்லாம் மொக்குகளாக இருந்தன. இப்பொழுதோ ஒரு காமினியினுடைய மிருதுவான மார்பின் மேல் இருக்கும் காரணத்தால் ஆனந்தபரவசமடைந்து எல்லா மொக்குகளும் மலர்ந்துவிட்டன. அவைகளிலிருந்து நறுமணம் வீசத்தொடங்கிற்று. ஆனால் யமுனை மற்ற யுவதிகளினுடைய சுக சம்போகத்தை உன்னி ஆற்றாளாத் துயரங்கொண்டு அம் மலர் மாலையைத் தன் கழுத்தினின்றும் எடுத்து இரண்டு கைகளாலும் கசக்கி வீசி யெறிந்தாள். உலக முழுதும் இந்த நிசப்தமான ராத்திரியில் ஆனந்தத்தோடு இளைப்பாறிக்கொண்டிருந்தது. பரதேசியும் விசிறியை விசிறியபடியே தூங்கி யிருப்பான் என்று உத்தேசித்தாள். ஆகாயத்தில் கணக்கற்ற நக்ஷத்திரங்கள் புன்னகை புரிந்துகொண்டிருந்தன. தருணிகளாகிய மேகக் கூட்டங்களின் இடையே 'கண்ணா மூச்சி' விளையாடிக்கொண்டிருந்த சந்திரனைப் பார்த்து யமுனாவுக்கு ஒரு முறை பரதேசியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. தாழ்வாரத்தின் வெப்பத்தினால் பரதேசியின் நிலை என்னவாயிருக்கும் என்பதை ஒரு முறை பார்க்க விரும்பினாள். திடீரென்று

அச் சமயம் அவளுடைய காதுகளில் மதுரகானத்தின் இன்னிசை விழுந்தது. நிலவு வீசிக்கொண்டிருக்கும் அவ் விரவில் ஒரு மெல்லிய மாது தன் மன முழுதையும் செலுத்தி அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருப்பது போல் தோன்றிற்று. யமுனா தன் மன முழுதையும் செலுத்தி மிகுந்த கவனத்தோடு அந்தப் பாட்டைக் கவனித்தாள். பாடகனுடைய ராகத்தினாலும் நடுக்கத்தினாலும் அந்தப் பாட்டினுடைய வார்த்தைகள் நன்றாய்ப் படவில்லை. வெகு நேரம் கவனித்த பின்பு வார்த்தைகள் புலப்பட்டன.

“மல்லிகைகள் மலர்ந்திருக்கின்றன. நடுநிசிக் காலம்; இந்த மலர் மாலையை எவர் கழுத்தில் அணிவேன்? நானோ ஒன்று மறியாதவள். எனதன்பனோ பரதேசம் சென்றுவிட்டான். மலர் மாலையை எவர் கழுத்தில் போடுவேன்?” இந்தப் பாட்டின் இன்னிசை யமுனையின் காதில் விழுந்தவுடன் மனதில் பழைய காலத்து ஞாபகங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் எழத் தொடங்கின. பாடகன் ஆவேசத்தோடு பாடிக்கொண்டிருந்தான். ஆனந்தத்தோடு பாடப்பட்ட அந்தக் கீதம் அந்த நிசப்தமான நிலவு பொருந்திய இரவில் குயிலின் 'கூ' 'கூ'வைப் போல் எதிரொலித்தது. வேகமாக மீட்டப்பட்ட வீணையின் கம்பிகளைப் போல யமுனையின் இருதயத்தில் தந்திகளும் நடுங்கவாரம்பித்தன.

அவள் எழுந்திருந்து உலவ ஆரம்பித்தாள். உலவியபடியே கைபிடி சுவற்றின் ஓரமாக வந்தாள். யாரோ ஒருவர் கீழே தாழ்வாரத்தில் பாடிக்கொண்டிருப்பது போற் காணப்பட்டது. அதே பரதேசியின் கலகண்டமான இன்னிசையோ என்று யோசித்தாள். ஆனந்த சாகரத்தில் மூழ்கியவளாய் அந்தப் பாட்டைக் கேட்டாள். கேட்டமாத்திரம் அல்ல. கூடவே அழவும் ஆரம்பித்தாள்.

யமுனை ஏன் அழுதாள்? பாட்டின் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு கூர்மையான அம்புபோல் அவளுடைய மர்மத்தைத் துளைத்தது. யமுனா இப்பொழுதுதான் தன்னுடைய மல்லிகை மாலையைக் கசக்கி யெறிந்தாள். இதற்குள்ளாக “மல்லிகைகள் மலர்ந்திருக்கின்றன” என்ற பாட்டு அவள் காதில் விழுந்தது. அதனால் அவளுடைய மனது மிகவும் துக்ககரமான நிலைமையை யடைந்தது. பழைய ஞாபகங்கள் பழைய நினைவுகள் ஹிருதயத்தைத் துளைத்துக்கொண்டு வெளிக் கிளம்ப வாரம்பித்தன. வேறொன்றுஞ் செய்யமாட்டாமல் அழ ஆரம்பித்தாள்.

அந்தப் பாட்டில், தன் தலைவன் பரதேசம் சென்றிருக்கும் ஓர் தலைவி நடு ராத்திரியில் மல்லிகை மலர்கள் மலர்ந்து, அறை முழுதும்

நறுமணம் வீசுவதைப் பார்த்து, விரகதாபத்தைச் சகியாதவளாய், “மல்லிகைகள் மலர்ந்திருக்கின்றன.........யாருடைய கழுத்தில் மாலையைப் போடுவேன்” என்று பாடிக்கொண்டிருக்கிறாள். வாசனைத் தைலங்கள் புனுகு, ஜவ்வாது முதலியவை பூசிய ஒரு யுவதி தன் தலைவன் இல்லாத அறையில் பக்கத்தில் கிடக்கும் மல்லிகை மாலை மலர்ந்திருக்கிறது. தலைவனோ பரதேசம் சென்றுவிட்டான். இதனால் துக்கமடைந்தவளாய் “மல்லிகை மலர்ந்திருக்கிறது” என்று தன் மனத்திலிருந்து பாடுகிறாள். அன்பனோ இப்பொழுதுதான் இவ்விடத்தில் இல்லை. ஆனால் அவன் வந்த பிறகு அவனுடைய கழுத்தில் மலர் மாலையை யணிவாள். இன்றைக்கு அவன் பரதேசத்தில் இருக்கிறான். நாளை அவன் வந்த பிறகு தன் தாமரைபோன்ற மெல்லிய கரங்களால் மாலையை அவன் கழுத்தில் அணிந்து ஆனந்தமடைவாள். நாளைக்கோ அல்லது இரண்டு மாதங்கள்தான் கழித்தோ எப்பொழுதோ அவன் கழுத்தில் மாலையை அணிவது நிச்சயம்.

ஆனால் எவளுக்கு இந்த உலகம் சூன்யமாய்ப் போய்விட்டதோ அவள் என்ன செய்வாள் பாவம்! எவ்விடத்திற் சூரியனுடைய பிரகாசத்தில் வெளிச்சமில்லையோ, சந்திரனுடைய கிரணங்களில் குளிர்ச்சியில்லையோ, வாசனைபொருந்திய மலர்களில் வண்டுகள் இல்லையோ, தெள்ளிய நீரையுடைய நதிகளில் சிற்றலைகள் இல்லாமல் சூன்யமாயிருக்கிறதோ அவ்விடத்திலிருப்பவள் என்ன செய்வாள்? எண்ணெய்யில்லா விளக்கைப்போல் யமுனை எவ்விதமான ஆசையை யடையப்பெறுவாள்? எல்லோரும் தங்கள் தங்கள் அன்பர்களுக்காக மலர்கள் அர்ச்சனை செய்வார்கள். மலர் மாலைகள் தொடுப்பார்கள். ஆனால் யமுனை எந்த அன்பனுக்குத் தன் புஷ்பாஞ்சலியைச் செலுத்துவாள்? அவளுடைய கணவனோ நாளை வரமாட்டான். நாலு மாதங் கழித்தும் வரமாட்டான். அவள் வாழ்நாள் முடியுமட்டும் வரமாட்டான். அப்படிப்பட்ட யமுனை எந்த ஆசையை வைத்துக்கொண்டு, “என் அன்பன் பரதேசம் போயிருக்கிறான். அவனுடைய கழுத்தில் மாலையை எப்பொழுது அணிவேன்” என்று எப்படிப் பாடுவாள்?

நிலவின் சுத்தமான பிரகாசத்தில் பூதலம், மரஞ் செடி கொடிகள், புற் பூண்டுகள், மாடமாளிகைகள் எல்லாம் ஆனந்த பரவசமாயிருக்கின்றன. ஆனால் யமுனையின் ஆனந்தத்தை யார் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்? ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசமற்று மலினமாகக் கிடந்தன. சந்திரன் தன் கிரணங்களோடு ஆனந்தத்தைப் பொழிந்துகொண்டிருந்தான். பரதேசியும் அதே ஆனந்தத்தில் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தான். அவனுடைய பாட்டிலும் ராகத்திலும் கருணை ததும்பிக்கொண்டிருந்தது. தொனியில் துக்கம் நிறம்பியிருந்தது. ஆகையினால் யமுனையின் ஹிருதயத்தில்

துயரம் உண்டாயிற்று. ஹிருதயத்திலுள்ள வீணையின் ரிஷபமும், காந்தாரமும், மத்தியமும் மேல் ஸ்தாயியில் த்வனிக்க வாரம்பித்தன. யமுனை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். பாட்டு நின்றுவிட்டது. ஆனால் யமுனையின் ஆர்த்த த்வனி நின்றபாடில்லை.

4

இன்றைக்குச் சந்திர கிரஹண புண்ணிய காலம். கணக்கில்லாத பழக்காரர்களும், மிட்டாய்க்காரர்களும், இன்னும் அநேக விதமான கடைக்காரர்களும் தங்கள் தங்கள் கடைகளைச் சிங்காரித்துக்கொண்டிருக்கிறார்கள். யாத்திரீகர்களிடமிருந்து மிகுந்த இலாபத்தைச் சம்பாதித்துவிடலாமென்ற எண்ணத்தோடு இவ்வாறு செய்துகொண்டிருக்கிறார்கள். வேறொருபுறம் சிறுவர்களும் சிறுமிகளும் இராட்டினந்தூரி முதலியவைகளில் ஆனந்தத்தை யனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள், ஜவான்கள், கிழவர்கள் எல்லோரும் வந்திருந்தனர். இந்து தர்மத்தின் உண்மையான பக்தி வெகு தூரத்திலுள்ள பிராந்தியங்களிலிருந்தும் ஜனங்களை கங்கா நதியின் கரைக்கு இழுத்தது. கங்கைக் கரையில் சிறுவர் சிறுமியர், தருணர், கிழவர்கள், ஸ்திரீகள் முதலிய எல்லோரும் கங்கையின் நிர்மலமான ஜலத்தில் ஸ்நானஞ்செய்து பாபங்களைத் தீர்த்துவிட்டுப் புண்ணியத்தைக் கொள்ளையடித்துக்கொண்டிருந்தார்கள். கங்கையும் ஓர் அன்னை தன் குழந்தையின்மேல் இருக்கும் அழுக்கைக் கழுவி சுத்தம் செய்வதுபோல் இந்தக் கணக்கற்ற ஜனங்களின் பாபங்களைப் போக்கடித்துக்கொண்டிருந்தாள்.

சூரியாஸ்தமனம் ஆனவுடனே ஊரிலுள்ள நகராக்கள் ஒலிக்க ஆரம்பித்தன. கௌரி கோயில் மணிகள் ஒருங்கே ஒலித்தன. “சந்திரகிரஹணம் பிடிக்கப்போகிறது” என்று எல்லோருக்கும் அறிவிப்பதுபோலிருந்தது. கதிரவன் தன் கிரஹணக் கூட்டங்களைச் சுருட்டிக்கொண்டு மேற்கடலில் ஆழ்ந்தான். இருட்டு அதிகரிக்க ஆரம்பித்தது கண்டு யசோதை, “யமுனா எழுந்திரு. நாமுங் கங்கா ஸ்நானஞ் செய்து வருவோம். கிரஹணம் பிடித்துவிட்டது” என்றாள்.

இரண்டு ஸ்திரீகளும் வஸ்திரங்கள் எடுத்துக்கொண்டு குளிக்கச் சென்றார்கள். தாழ்வாரத்தில் பரதேசி காணப்படவில்லை. “ஒருகால் நமக்கு முன்னமேயே எழுந்திருந்து நதிக்குச் சென்றிருப்பான். ஆகையினால்தான் இங்கே காணப்படவில்லை” என்று நினைத்துக்கொண்டாள் யமுனை.

யமுனை கங்கா நதியில் முங்கி முழுகி ஸ்நானம் செய்யும் சமயத்தில் கொஞ்சதூரத்தில் பரதேசியும் ஸ்நானம் செய்துகொண்டிருந்த

தைப் பார்த்தாள். பரதேசியோ யமுனையை இதுவரையில் பார்த்ததில்லை. யமுனையும் அவன் எதிரில் சென்றதில்லை. அவளோ எப்போதும் வீட்டுக்குள்ளேயே இருக்கிறாள். அவள் அவனைப் பார்ப்பது எப்படி? அவனைப் பார்க்கவேண்டுமென்று யமுனை துடிதுடித்துக் கொண்டிருந்தாள். அப் பரதேசி தன்னை நோக்கி ஒரு முறையாவது கண்ணெடுத்துப் பாரானா என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்ருந்தாள். இன்று கங்கையில் அவளுடைய ஆவல் ஒருவாறு திருப்தி அடைந்தது. பரதேசி வழிப்போக்கர்களைப் பார்க்கும் பார்வையோடு யமுனையை நோக்கி ஒருமுறை பார்த்துவிட்டு, மறுபடியும் குளிக்க ஆரம்பித்தான். ஜீவனம் எடுத்ததன் பலன் கிடைத்துவிட்டது. இந்தப் பார்வைக்காகத்தான் யமுனை துடித்துக்கொண் டிருந்தாள். ஆனால் இந்தப் பிரேமையற்ற பார்வையால் அவளது தாகந் தீரவில்லை.

5

இரவு சுமார் பத்து மணியிருக்கும். வழக்கம்போல் யமுனை குளிர்ந்த பாயை மாடியின்மேல் விரித்துப் படுத்துக்கொண்டிருந்தாள். மறுபடியும் நேற்றுக் கேட்ட அதே பாட்டைக் கேட்க அதிக ஆவல் உண்டாயிற்று. தூரத்தில் இருந்த கடிகாரம் முறையே பதினொன்று, பன்னிரண்டு, ஒன்று, இரண்டும் அடித்துவிட்டது. ஆனால் பாடகனது இன்னிசை இன்னும் காதில் விழவில்லை. பாடகன் எங்கு சென்றுவிட்டான் என்று அறிவதற்காகக் கீழே எட்டிப் பார்த்தாள்.

ஆனால் பாடகன் என்ன பாதையின்மேலா இருக்கிறான்? அவனோ தாழ்வாரத்தில் படுத்திருப்பான். ஒரு முறை கீழே சென்று பார்க்கவேண்டுமென்று எண்ணங்கொண்டாள். கால் விரல்களின்மேல் நடந்தவளாய் யமுனை கீழே சென்றாள். மெதுவாகக் கதவண்டை சென்று சந்தின் வழியாகப் பார்த்தாள். தாழ்வாரத்தில் எவரும் இல்லாமற் பிரேமையற்ற ஹிருதயம்போல் சூன்யமாயிருந்தது. யமுனையினால் பொங்கிவரும் துக்கத்தைச் சகிக்க முடியவில்லை. தலையைப் பிடித்துக்கொண்டு அவ்விடத்திலேயே உட்கார்ந்துவிட்டாள்.

மனிதனிடத்தில் ஆசை என்பது மிகவும் பலமுள்ள ஒரு சக்தி. மனிதன் எப்போதும் நிராசையை அடைவதில்லை. இன்னும் இரண்டு நிமிஷத்தில் தூக்குமரத்தில் தொங்கப் போகிறவனுங்கூட ஒருவேளை நியாயாதிபதி தன்னை நிரபராதி என்று தீர்மானித்துவிட்டுவிடமாட்டாரா என்று நினைக்கிறான். சமுத்திரத்தில் முழுகுந் தருவாயில் இருக்கும் மனிதன், தான் பிழைக்கும் ஆசையை வைத்துக்கொண்டு மிதக்கும் வைக்கோலை எட்டிப் பிடிக்கிறான். மனிதன் துக்ககரமான சமயத்திலும் சுகத்தின் கனவைக் காணு

ஆரம்பாசிரியர்களும் கிராம வாழ்க்கைச் சீர்திருத்தமும்.

திரு. சி. ர. இரகுநாதன் அவர்கள்.

பீடிகை.

"இனிய பொழில் கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு—இது
கனியுங் கிழங்குந் தானியங்களுங்
கணக்கின்றித் தரும் நாடு."
—பாரதி.

எனக் கவியரசராற் போற்றப்பட்ட நமது இந்திய நாட்டில் பண்டைக் காலத்தில், சுகாதார விதிகளுக் கிணங்கவும், மதாசாரக் கோட்பாடுக

மனிதன் துக்ககரமான சமயத்திலும் சுகத்தின் கனவை காணுகிறான். பரிதபிக்கும் யமுனையின் மனத்திலும் ஆசை என்கிற குயில் "கூ" "கூ" என்று சப்தம்செய்ய ஆரம்பித்தது. "ஒருவேளை பரதேசி எங்கேயாவது எழுந்து சென்றிருப்பான்? காலை ஆனவுடன் திரும்பி வந்துவிடுவான்" என்று ஆலோசித்து மனதை ஒருவாறு சாந்தப்படுத்திக்கொண்டாள்.

எழுந்திருந்து மாடிக்குச் சென்றாள். நிலவு வீசிக்கொண்டிருந்தது. சந்திரனது கிரணங்கள் மிகவும் வெப்பமாகக் காணப்பட்டன. சந்திரன் மேகக் கூட்டங்களோடு விளையாடுவதைப் பார்த்தபடியே யமுனை தூங்கிவிட்டாள்.

பொழுது விடிந்தது. யமுனை எழுந்திருந்தவுடன் பைத்தியம் பிடித்தவள்போல் கீழே இறங்கி வந்து தாழ்வாரத்தைப் பார்த்தாள். தாழ்வாரம் முற்றிலும சூன்யமாக இருந்தது.

வாரங்கள், மாதங்கள், வருஷங்களுங் கழிந்தன. ஆனால் போன பரதேசி திரும்பி வரவேயில்லை. "மல்லிகை மலர்ந்திருக்கிறது" என்ற இன்னிசை அவள் காதில் அப்புறம் விழவேயில்லை.

இன்னும் யமுனை மாடியின்மேல் குளிர்ந்த பாயின்மேல் படுத்துக்கொண்டு பரதேசியின் சந்திரவதனத்தையும, அவன் முகத்திலிருந்து வரும் இன்னிசையையும் கற்பனை செய்துகொள்ளுகிறாள். சிற்சில சமயம் சிரிக்கிறாள். சிற்சில சமயம் அழுகிறாள். என்ன செய்வாள் பாவம்!

ளுக் கிணங்கவும், செவ்விய துறையில், கிராம வாழ்க்கை அமைக்கப் பெற்றிருந்தது. எத் துறையிலும் மனிதர் தம் வாழ்க்கை நிலையைக் கடத்த ஏற்ற இடம் கிராமமேயாம். அத்தகைய கிராமம் இதுபோழ்து கவலைக்கிடமான நிலையில் சீர்குலைந்து, ஆத்திகத் தன்மையழிந்து, நாத்திகத் தன்மை நாட்டமுறுவதா யிருக்கிறது. கிராம வாழ்க்கை சீர்திருத்தப்பட்டாலல்லது இக் குறைகள் நீங்கப்பெறா தென்பது திண்ணம். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்ற ஒல்காப் புகழ்பெறுந் தொல்காப்பியனாரது சொல்லுக்கிணங்க, எக் காலத்தும் அரசர்க்கரசராய் முறை செய்தோம்புநர் ஆசிரியர்களே யாவர். மூவேந்தர் காலத்தும் பா வேந்தர் சூழ்ந்து நின்றே முறை செய்து நாடு காத்தனர். எனவே இதுகாலை கிராம வாழ்க்கைச் சீர்திருத்தத்திற்கு ஆசிரியர்கள் உள்ளும் புறமும் ஓய்வொழிவின்றிச் செய்ய வேண்டிய வுதவி பலவுள. அவை யாவெனில்?

"பட்டினந் தன்னிலும் பாக்கநன் றென்பதைப்
பார்க்க வருஞ்சுடராம் பெண்ணே,
கட்டு மனையிலும் கோயில் நன்றென்பதை
காட்ட வருஞ்சுடராம் பெண்ணே"
—பாரதி.

கிராமங்கள் மிகுந்து பட்டினங்கள் குறைந்து விளங்கும் நமது நாட்டில், தற்போது கிராமங்கள் முற்றிலும் பட்டினங்களாக மாற்றப் படுகின்றன. அதாவது, செயற்கைத் தோற்றங்களைவிட இயற்கைத் தோற்றங்களைக் கண்டு களித்து, எல்லாம் கடவுள் செயல் என்றும், உலகின்கண் தோன்றியுள்ள பொருள் எல்லாவற்றிலும் உள்ளும் புறமுமாய் ஊடுருவிச் சென்று நின்று, காண்போர் கண்கள் கவரும்படி, அழகைச் செய்கின்ற ஒரு சக்தி யிருக்கின்றது. அதுவே தெய்வம். அத்தகைய அழகை மனிதனால் ஆக்க முடியாது என்பன போன்ற இன்பக் கனவு கண்டுகொண் டிருந்த கிராம வாசிகட்கு இதுகாலை, இயற்கையை மனிதன் வெல்லலாகும் என்ற இறுமாப்புந் திமிருங் கொண்ட எண்ணமும் செய்கையும் வாய்ந்த செயற்கைப் பொருள்கள் தோன்றி, கிராம வாசிகளின் இன்பக் கனவுகளை யெல்லாம் துன்பக் கனவுகளாக்கி, இதுவோ, அதுவோ வென்று மையப் படுகுழியிற் றள்ளி தத்தம் தொழில் முறை கெட்டு, கிராமத்தை விட்டுப் பட்டினம் செல்லத் துணிந்து, "கெட்டும் பட்டினம் சேர்" எனப் பிறக்கும் போதிக்கத் தலைப்படுகின்றனர். இத்தகைய மக்களுக்கு நம் நாட்டு மொழியில் இயற்கை வருணனைகளை ஊன்றிப் படித்து அறிய ஏற்ற சாதனங்களைத் தேட வேண்டுவது மிக மிக அவசியமாகும். அதற்கு இன்றியமையாதது கல்வி.

"கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல

பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு."
—பாரதி.

எனக் கூறிய நம் பாரதியாரின் தெய்வத் திரு வாக்கின்படி, கம்பர், திருவள்ளுவர், ஔவைப் பிராட்டி, புகழேந்தி, ஒட்டக்கூத்தர்போன்ற அரும் பெரும் புலவர்களைப் பெற்றெடுத்த நமது கிராமங்கள், இதுகாலை, கிராம வாசிகளைக் கல்விக்காகப் பட்டினங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறது. தற்போது நமது நாட்டில் நூற்றுக்கு 85 பேர் கிராம வாசிகளா யிருக்கின்றனர். நமது சென்னை ராஜதானியில் 36,000 கிராமங்க ளிருக்கின்றன. ஆனால் இங்கிலாந்துபோன்ற பிற நாடுகளில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கல்வி கற்றவர்களாயிருக்க நமது நாட்டில் நூற்றுக்கு ஆறுபேரே கல்விப் பயிற்சி யுள்ளோ ராயுளர். இக் குறையை நீக்கினாலொழிய கிராம வாழ்க்கை சீர்திருத்தம்பெறாது. இதற்கு ஆசிரியர்கள் (Adult Education) தத்தம் கிராமத்தின் வயது வந்த வாலிப ஜனங்களுக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும். எங்ஙனமெனில்,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."
(குறள்.)

எனவும் "கற்றலிற் கேட்டலே நன்று" எனவும் பண்டைத் தமிழாசிரியர்கள் கூறியவாறு பள்ளிக்கு வந்து எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வியலாத நடுத்தர வயதுடைய கிராம வாசிகளுக்கு, ஆசிரியர் தத்தம் ஒழிவு நேரங்களில் உபந்நியாசங்களாலும், பாரத இராமாயண, பெரிய புராண பிரசங்கங்களாலும் கேள்வி மூலமாய் பண்டையோர் வாழ்த் துறையை முந்தையோர் நூல்களில் குறித்தவாறு கேட்டு நடக்க வழி செய்ய வேண்டுவது மிகமிக அவசியம். எந்த நாட்டில் கலைகளும், காவியங்களும் கேட்போரின்றியும், கற்போரின்றியும் மங்குகின்றதோ அந்த நாட்டின் மாந்தர், நாளடைவில் வலிமை குன்றி, வாழ்க்கை முறை தவறுதல் திண்ணம். இதையே நமது கவிச் சக்கிரவர்த்தி

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதி லோர்மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்றார். எனவே நாட்டு மொழியில் உள்ள கலைகளை மக்கள் விரும்பிப் படிக்க வழிதேட வேண்டுவது ஆசிரியனுடைய முதற் கடமை. இதற்கு அரசாங்கத்தின் உதவி அத்தியாவஸ்யம்.

அரசியலறிவு

“தந்த பொருளைக் கொண்டே—ஜனந்
தாங்குவருலகத்தில் அரசர் எல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சமயர்வார்” —பாரதி.

(நாம்) அதாவது கிராமவாசிகள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்துக் கிடைத்த பொருளின் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு வரியெனக் கொடுக்கின்றோம். அப்படித் தந்த பொருளைக் கொண்டே அரசர்கள் தத்தம் அரசியலை நடத்துவர். அத்தகைய உலகமாகிய பெருங் குடும்பத்திற்குத் தலைவனாக இருந்து, வேண்டுவன கொடுத்து வேண்டாதன நீக்கிக் காக்கும் அரசாங்கத்தை மக்கள் அது ஒரு பெரும் பேய் என்று எண்ணிப் பயந்து நடுங்காமல், கடமையைச் செய்து உரிமையைக் கேட்க ஏற்ற வழியில் கிராமவாசிகளுக்கு அரசியலறிவை யூட்டல் மிக அவசியம். அதாவது இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் கிராமத்தில் வாழுமொருவன் அரசியல் ஞானத்திலெவ்வளவு பயிற்சியுள்ளவனா யிருக்கிறானோ அவ்வளவு நமது நாட்டு மக்கள் மதாசாரக் கோட்பாடுகளில் அதிகம் அறிந்திருக்கின்றனர். அதாவது “த்வைதம்” என்றால் என்ன “அத்வைதம்” என்றால் என்ன, எந்த தெய்வத்தை எவ்வாறு பூசித்தல் வேண்டும் எனச் செவ்விதில் உணர்ந்துளர். எனவே நமது நாட்டுக் கிராமவாசிகளுக்குப் பெரும்பாலும் அரசியல் ஞானம் குன்றிக் கிடக்கின்றது. என்னையெனில் உலகின் எப் பகுதியில் பார்த்தாலும், வைஸ்யதர்மம் தாண்டவமாடுகின்றது. அதாவது அரசன் முதல் ஆண்டிவரை போட்டி வியாபாரப் பெருக்கத்தால் பணம் பரித்து பசியவிக்கப் புதியதோர் முறையுங் கட்டுப்பாடுந் தேடி யுழல்வாரா யுளர். இதையே நமது கவிஞர்,

நாட்டு மாந்த ரெல்லாம்—தம்போல்
நரர்கள் என்று கருதார்
ஆட்டு மந்தையாமென்—றுலகை
அரசர் எண்ணி விட்டார்
காட்டு முண்மை நூல்கள்—பலதாங்
காட்டினார்க ளேனும்
நாட்டு ராஜ நீதி—மனிதர்
நன்கு செய்ய வில்லை

ஓரஞ் செய்திடாமே—தருமத்
துறுதி கொன் றிடாமே
சோரஞ் செய் திடாமே—பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே
ஊரை யாளு முறைமை—உலகில்
ஓர் புறத்து மில்லை
சார மற்ற வார்த்தை—மேலே
சரிதை சொல்லுகின்றோம். —பாரதி.

என்று தமது “பாஞ்சாலி சபதம்” என்னும் காவியத்தில் அழுத்தமாகக் கூறியுள்ளார். மக்கள் ஒருவர்க்கொருவர் வஞ்சனையின்றி தருமத்தின் உறுதியை அழிக்காமல் சோரஞ் செய்யாமல் பிறரைத் துயரத்தில் வீழ்த்தாமல் ஊரையாளும் முறைமை உலகில் ஓர் புறத்து மில்லை. அரசர் தத்தம் நாட்டு மாந்தரையும் தம்மைப் போன்ற மனிதர் என எண்ணாது ஆட்டு மந்தையாய் எண்ணிவிட்டார் போலும் அரசர்கள். பற்பல சாத்திரங்கள் மலிந்து கிடந்து ராஜநீதி புகட்டும் நூல்கள் செய்யாதொழிந்தனர். எனவே சாரமற்ற வார்த்தை என்று முடித்தார். ஜனநாயக ஆட்சி முறை தாண்டவமாடு மிக்காலத்தில் நம் நாட்டு கிராமவாசிகளுக்கு ஆசிரியர்கள் தேச பாஷைப் பத்திரிகைகள் மூலம் உண்மையான அரசியல் ஞானத்தை வளர்க்க வேண்டுவது மிக அவசியம். கிராமத்தில் பெருங் கூட்டங் கூடும்போதெல்லாம் அரசாங்கச் சட்டதிட்டங்களை விளக்கி யுரைத்தல் வேண்டும். இதற்குக் கிராமத்தில் ஒற்றுமை அவசியம்.

கிராமப் பஞ்சாயத்து

முற் காலத்தில் நமது நாட்டின்கண் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பஞ்சாயத்து சபை இருந்ததென்றும் அச் சபையின்கண் இருந்தோர் “இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டு இருவரும் பொருந்த” உரைத்து நீதியையும், அமைதியையும் நிலைநாட்டி வந்தனர் என்பதும் பழந்தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம். சாதிச் சண்டையும், சமூகப் போராட்டமும் மலிந்து கிடக்கும் இக் காலத்தில், ஆசிரியர்கள் தத்தம் கிராமங்களில் எத்தகைய வழக்குகளும், நூற்றுக் கணக்கில் செலவு செய்யப்பெறும் நீதி மன்றங்களுக் கேறாமல் பஞ்சாயத்துக் கிடையே தீர்த்துக்கொள்ளும் படியும் அதனால் ஏற்படும் லாபத்தையும் சமயம் வாய்த்தபோதெல்லாம் விளக்க முற்படுவதோடு, தாமே அத்தகைய பஞ்சாயத்துக்களைக் கூட்டி நடத்த வழிகாட்டியா யிருத்தல் வேண்டும். சிற்சில சமயங்களில் நடுவுநிலை தவறுங்கால், அஞ்சா நெஞ்சனாய்த் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் அத் தவறுகளை எடுத்துக் காட்டிச் சீர்ப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாணயச் சங்கம்.

பஞ்சத்தும் நோய் களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணாற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடி. —பாரதி.

மாந்தர் தத்தம் உண்மை நிலை தவறிக் "கொண்டதே கோலம் கண்டதே காட்சி" எனப் "பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்" என்றவாறு எவ்வாற்றானும் பாடுபட்டுப் பணந் தேடிப் பசிப்பிணி யவிப்பதே தத்தந் தொழிலெனக் கருதி நிற்பதால் "முள்ளால் முட்களையுமாறு" போல் பொருளைக்கொண்டே அப் புன்மையை யகற்றல் வேண்டும். ஆகையால் ஒற்றுமையையும் நம்பிக்கையையும் வளர்த்தும் ஐக்கியச் சங்கம், கடன் கொடுத்துக் கதியளிக்கும் சங்கமாக அமைந்துள்ளது. இத்தகைய சங்கங்களில் ஆசிரியர்கள் அமர்ந்திருந்து வெளி நாடுகளில் இச் சங்கங்கள் செய்யும் அற்புத வேலைகளையும், மக்கள் காலத்தில் கடனைத் தீர்த்துத் தத்தம் சொத்துக்களை மீதி செய்துகொள்ளும் விதத்தினையும் விளக்கல் வேண்டும். கிராம வாசிகளுக்குள் ஒற்றுமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தற் கேற்ற இச் சங்க வரையறைகளை ஆசிரியர்கள் தெரிந்துகொண்டு, இச் சங்கங்கள் இருக்குமிடங்களில் அச் சங்கத்தில் அங்கத்தினரா யமர்ந்து ஒழுங்கு பெற நடத்துவதோடு இல்லாத கிராமங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்க முயல வேண்டுவது மிகவும் அவசியம்.

சுய வாட்சி சபை.

நமது நாட்டில் எக் காலத்தும் அரசனைச் சார்ந்து நின்று, அரசாங்கம் செவ்விய துறையில் நடைபெறச் செய்ய வல்ல சபைகளிருந்தன. இவை சிலப்பதிகாரத்தில் "எண்பேராயம்" என வகுக்கப்பட்டுள. இவ் வெண்பேராயத்தை விளக்குங்கால் திவாகர ஆசிரியர்,

"காரணத் தியலவர் கரும விதிகள்
கனகச் சுற்றம் கடைகாப்பாளர்
நகரமாந்தர் நளிபடைத் தலைவர்
யானைவீரர் இவுளி மறவர்
இனையர் எண் பேராயம் என்ப"

என்றனர். இதில் "நகரமாந்தர்" என்ற சொற்கள் அரசியற் றுறையில் குடிமக்கள் சபையும் அக் காலத்தில் இருந்தது என்பதை விளக்குகிறது. அக் காலத்தில், அரசன் குடி ஜனங்களை ஆலோசித்தே பணியாற்றினன் என்பது விளங்குகின்றது. அத்தகைய மாந்தர் இதுபோது தத்தம் சுதந்திரத்தை விற்று வயிறு வளர்க்கும் நிலைமை யுற்

றிருப்பது மிகவும் வியப்பே. ஆகையால் சுயவாட்சி சபை, சட்ட நிரூபண சபை போன்ற அரசவைகளுக்கு தேர்தல் நடக்குங்கால் வாக்காளர்களின் கடமை, உரிமைகளை விளக்கி ஒவ்வொருவரும் தத்தம் வாக்குரிமையை மனச்சாட்சிக்கு விரோதமின்றி ஆய்ந்தோய்ந்து பார்த்து உபயோகிக்கச் செய்தல்வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் உபயோகிக்கச் செய்தல்வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் வாக்காளர்களின் சபையொன்று இருத்தல் வேண்டும். வாக்குக் கொடுக்கும் உண்மையினையும் இதர வேலைகளையும் அச் சபைகள், மக்கள் உணரும்வண்ணம் செய்தல் வேண்டும். தொழிலாளர்களுக்கு இது மிக மிக அவசியம்.

தொழில் முறை.

"யந்திர சாலை யென்பார்
எங்கள் துணிக ளென்பார்
மந்திரத்தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வ துண்டோ?

உப்பென்றும் சீனியென்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடி—கிளியே
செய்வ தறியாரடி." —பாரதி.

கோடிக் கணக்கான செல்வத்தைப் பளபளப்பிலும் மினுமினுக்கிலும் மயங்கித் தினந்தோறும் கொட்டிக் கொடுத்து ஏழையராய் வாடும் கிராம வாசிகளுக்கு அவர்கள் எளிமையை அகற்ற ஏற்ற உதவி மற்றெல்லாவற்றையும்விட மிகவும் இன்றியமையாதது. நமது நாட்டு மக்கள் தத்தம் தொழில் முறை தவறி, உடுக்கும் துணிக்கும் உண்ணும் சோற்றுக்கும் பிறரை எதிர்பார்த்து வாடுவது வருந்தத்தக்கது. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல் நமது நாட்டில் உண்டாகும் பருத்தியை நாமே நூலாக நூற்று உடையாக உடுத்து, மிக மிக மெல்லிதான துணிகளையும் செய்து, வெளி நாட்டோடு வியாபாரமும் செய்து வந்த நம மூதாதைகளின் உயர்வை என்னென்று புகல்வது! ஒவ்வொரு குடிசையிலும் 'ஓம்' என்ற ரீங்காரத்தோடு சுழன்றுவந்த இராட்டைகள் நாசமாக்கப்படவே நமது நாட்டுக் கிராம வாழ்க்கையும் நாசமடைந்தது. ஐந்து வயது குழந்தையும் ஐம்பது வயதுக் கிழவனும் சலியாமல் தத்தம் குடிசையில் செய்து வந்த மேன்மையான அக் குடிசைத் தொழில் தவிர வேறு எந்தத் தொழிலும் பரந்து, விரிந்து இடமகன்ற இந் நாட்டிற்கு இன்பத்தைத் தாராது என்பது திண்ணம் என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிறைய வேண்டும். மரங்களின் பட்டையினின்றும் நார்களி

னின்றும் உண்டாக்கப்பட்ட துணிகளுக்கே முற்காலத்தில் 'பட்டு' எனப் பெயர் கொடுத்து மிகத் தாழ்ந்த உயிராகிய செடிகொடிகளின் அங்கங்களிலிருந்து உண்டாக்கப்படுதலின் ஜீவகாருண்யத் துறையின் உயர்வை நோக்கிப் பட்டுக்கும் உயர்வைக் கொடுத்தனர் மேலோர். இக் காலத்திலோ ஆயிரக் கணக்காகப் பட்டுப் புழுக்களைச் சுடுநீரில் வேகவைத்துக் கொன்று எடுத்து உண்டாக்கப்படும் பட்டு மிக உயர்ந்த தெனக் கருதப்படுகிறது. மிருகங்களின் கொழுப்புகளாலும் ரத்தத்தி னாலும் உண்டாக்கப்படும் சாய வகைகளும் வழவழப்பும் நமது கண் ணைக் கவர்ந்து ஏராளமான செல்வத்தைக் கொள்ளை கொள்கின்றன. தற்காலம் ஐம்பது ரூபாயில் செய்யக்கூடிய கலியாணம் முதலிய சுப கருமங்கள் வெளி நாட்டுத் துணிகளாலும் உள் நாட்டுப் பட்டா லும் ரூபாய் ஐந்நூறுக்கு மேலாகிறது. இத் தொகைகளும் நம் நாட்டு மக்களிடையி லிருப்பதில்லை. இங்ஙனம் தினந்தோறும் தமக் குத் தாமே ஏழ்மை நிலையைத் தேடிக்கொண்டு வறுமையில் வாடும் நமது கிராமவாசிகளுக்குக் குடிசைத் தொழிலின் நன்மையையும் உன்னத லக்ஷியங்களையும் அறிந்து அத் தொழிலைக் கைக்கொள்ளும் படி போதித்தல் இன்றியமையாதது.

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓய மாட்டோம்"
—பாரதி.

என்ற அருமைத் திருவாக்கின்படி வீணர்களாய்த் திரியாது உழவி லும் தொழிலிலும் ஊக்கம் கொண்டு தத்தமக்கு வேண்டுவன தாமே செய்துகொள்ளும்படி உற்சாகப்படுத்த வேண்டுவது நமது கடமை.

முடிவுரை

இதுகாறும் ஆசிரியர் பள்ளிக்கூடத்துக்குப் புறம்பே செய்யக் கிடக்கும் தொழில் முறைகளை ஒருவாறு தொகுத்துக் கூறினேம். இனி பாடசாலைக்குள் ஆசிரியருக்கு அமைந்து கிடக்கும் அரிய பணி யைச் சுருங்கச் சொல்லி இக் கட்டுரையை முடிப்போம்.

"பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்—எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்"
—பாரதி.

என்றவாறு தற்காலம் இனித் தலைவர்களாக விளங்கியிருக்கும் சிறுவர் கள் பள்ளித் தலத்தையே கோயிலாகக் கொண்டு செவ்விய துறையில் கல்வி கற்றுத் தங்கள் பாரத தேசம் என்று தோள் கொட்டித் தூய் மையில் நடக்கச் செய்ய வேண்டுவது ஆசிரியரது பொறுப்பு. சிறு வற்குச் சிறு காலையினின்றே இயற்கைப்பொருள்களில் விருப்பம்

பத்திரிகாசிரியரும் நூலாசிரியரும்.

திரு. M. வேலுச்சாமி அவர்கள், B. A.

பத்திரிகை சமுதாய உயிர்நாடியின் சூசிகை. ஆசிரியர், சமுதாயத்தின் பிணி போக்க மருந்தீயும் மருத்துவர். ஒரு நாட் டின் இராஜீய, சமூக, மத, பொருளாதார நிலைமையை அந் நாட்டின் பத்திரிகைகளிலே தான் தெளிவாய் தெரிந்து கொள்ளலாம்.

செஞ்சொற் புலவனும் சேயிழை, சொல் லெனும் பஞ்சு கொண்டு, பனுவல் இழையாக்கி மதி யெனுங் கதி ரினில் அமைப்பதே நூலாகும்.

ஜான் ரஸ்கின் என்னும் ஆங்கில மஹான் நூற்களை தற்காலத் திற்கேற்றவை யென்றும் எக் காலத்திற்கும் ஏற்றவை யென்றும் இரு வகையாகப் பகுத்தார், நூல் நயத்தைக் குறித்து அவரது "ஸிஸேம் அண்டு லிலீஸ்" எனும் புத்தகத்தில் விரிவாய்க் கூறுகிறார். அதன் சுருக்கம் பின்வருவது:—

அதிகரிக்கும் வண்ணம் அவர்கள் மனதை பாகுபாடு செய்தல் வேண் டும். சிறுவர்கள் தெய்வ நம்பிக்கையுள்ளவர்களாயும் தேசப் பற்று டையவர்களாயும் ஆடம்பரமற்ற கிராம வாழ்க்கையில் அறிவைச் செலுத்த வல்லுநர்களாயும் ஆக்கவல்ல துறையில் பாடத் திட்டங் களை அமைக்க வேண்டுவது ஆசிரியரது கடமை. ஓழிவு நேரங்களில் கிராமத்தைச் சுற்றிலுமுள்ள நீர்ப் பாசனங்கள், மலைகள், ஏரிகள், நதிகள் முதலிய இடங்களுக்குச் சென்று இயற்கைப் பொருள்களைக் கண்டு களிக்கச் செய்தல் வேண்டும். சமயம் வாய்த்த போதெல்லாம் முன்னோர் சரிதங்களை விளங்கக் கூறி வீரமும் தீரமுமுடைய உண் மைச் சிறுவர்களாக விளங்கச் செய்தல் வேண்டும். இவ்வாறு குறித்த வழியில் தொண்டாற்றிக் கிராம வாழ்க்கைச் சீர்திருத்தம் செய்ய வல்ல ஆசிரியர்கட்கு இறைவன் அன்பும் அருளுமளித்து சாந்த நிலை அடையச் செய்வனென்பது திண்ணம்.

ஓம்.

ஓர் ஆசிரியன் மனித வர்க்கத்திற்குப் பயன் தரத்தக்க புதிய கருத்தைத் தன்னகத்திற் காண்கிறான். அது பயனுள்ளதென்று மனமார வுணர்கிறான். உடனே ஒருவிதப் பிரதி பிரயோஜனத்தையுங் கருதாமல் தன் வாழ்நாள் முழுதுங்கூட அதற்காகச் செலவிட்டு அதனை வெளியிடுகிறான். இதுதான் (எக் காலத்திற்கும் ஏற்ற) நூல்! டான்ட்டி (Dante) என்னும் இத்தாலியக் கவி, தமது வாழ்நாளில் "டிவைன் காமெடி" (La, Divine Commedia) என்னும் ஒரே நூலையே செய்தார். இவர் பிளாரென்ஸ் நகரிற் பிறந்தவர். பின்னர் நாடு கடத்தப்பட்டுப் பரதேசியா யிறந்தார். இவரது சரீரம்...........நகரில் அடக்கம் பண்ணப்பட்டது. அவரது கல்லறையில் "தன் தாயகத்தினின்றும் நெடுந் தூரத்திற்கப்பாலுள்ள இங்கு டான்ட்டி துயிலுகிறார்" என்று தீட்டப்பட்டிருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்குப் பின் பிளாரென்ஸ் வாசிகள் டான்ட்டியின் பெருமையையுணர்ந்தனர்...........நகரவாசிகளிடம் டான்ட்டியின் என்புகளைக் கேட்டனர். அவர்கள் கொடுக்க மறுத்தனர். டான்ட்டி இயற்றிய அத் தனி நூல் உலகிற் சிறந்த காப்பியங்களில் ஒன்றா யிருக்கிறது.

பத்திரிகாசிரியனாகிய சமூக மருத்துவனின் பணி யாது? மக்களிடையே பரவும் நோய்களைக் களைதல்; மக்களிடையே பரவும் நோய்கள் அனைத்திலும் அஞ்ஞானமே கொடியது. "அஞ்ஞானத்தின் படைகள் எண்ணற்றன. அஞ்ஞானத்தின் ஊற்று வற்ற வற்றத் தொலையாது. அஞ்ஞான விருக்ஷத்தின் வேர் ஆதிசேஷன் முடிவரையில் உண்டு. அப் படைகளை வெல்வதும் அவ் ஊற்றை வற்றடிப்பதும், அந்த மரத்தை வேரறுப்பதும் சாமான்யமான காரியமன்று."

மஹா பாரதப் போரிற் பார்த்தனை விடக் கிருஷ்ணனுக்கு வேலை யதிகம். கிருஷ்ணனுக்கு எவ்வளவு வேலையுண்டோ அவ்வளவு வேலை வேதவியாசருக்கு மிருந்தது. இற்றையப் பாரதப் போரில் தேசத் தொண்டர்களை விடப் பத்திரிகாசிரியர்களுக்குத்தான் வேலை யதிகம். பத்திரிகாசிரியர்களுக்கு எவ்வளவு வேலையுண்டோ அவ்வளவு வேலை நூலாசிரியர்களுக்குமுண்டு.

மக்களின் அறியாமையைப் போக்குவதே பத்திரிகாசிரியரது கடமை; நூலாசிரியரது கடமையும் அதுவே. ஆயினும் நூலாசிரியர் ஆழப் புதைந்து கிடக்கும் அபூர்வமணி. அந்த மணியை அளவிலாச் சிரமத்தோடு தோண்டி யெடுத்து மாசு போக்கி, சாணை பிடித்து, 'பட்டை' பிடித்துத் தக்க அணியிற் பதித்துப் பயனுறச் செய்யும் தொழில் நிபுணன் பத்திரிகாசிரியனே.

நூலாசிரியனின் சக்தி அளவிட முடியாதது. அவனது எழுதுகோல் வாளினும் வலிது. படைத் தளித்துக் காக்கும் முத்தொழிலும் வல்லது. "வால்டேர், ரூஸோ போன்றாரின் எழுதுகோல்கள் நெப்போலியன், கெய்ஸர் போன்றோரின் வாளினும் வலியவை. கார்லைல், ரஸ்கின், கார்ல்மார்க்ஸ், டால்ஸ்டாய் போன்றோரின் நூற் சக்தி அஞ்ஞானத்தைத் தகர்ப்பதில் வல்லரசுகளின் ஆயுதச்சாலைகளிலுள்ள வெடி குண்டுகளைப் பார்க்கிலும் பலம் பொருந்தியவை.

பத்திரிகாசிரியனது கண்கள் பல. மக்களின் யதார்த்த நிலைமையை அறிந்தவன் பத்திரிகாசிரியன். எத்தகைய நூல்கள் ஒரு நாட்டின் மக்களை விழிக்கச் செய்யும் என்பதைப் பத்திரிகாசிரியனே உண்மையில் உணரமுடியும். அத்தகைய நூலை இயற்றித் தரவல்ல சிறந்த ஆசிரியனைத் தேர்ந்தெடுக்குந் திறமையும் பத்திரிகாசிரியனுடையதே. நூலியற்றப்பட்ட பின், அதனைத் தூக்கி நிறை தெரிந்து பொது ஜனங்களுக்குக் கொடுப்பவனும் பத்திரிகாசிரியனே. சுருங்கக் கூறின், நூலாசிரியனது அறிவுக் கடலில் விஷய அமிர்தத்தைப் பிரவாகிக்கச் செய்து அதனை மக்கட்குப் பங்கிடுபவன் பத்திரிகாசிரியன்.

மேனாட்டிற் பல சிறந்த நூலாசிரியர்கள், பத்திரிகாசிரியர்களாலேயே பல விலையிலா நூற்களை யியற்றினர். ஜான்ஸன், அடிஸன், ஸ்விவ்ப்ட், டிக்கன்ஸ், கோல்டுஸ்மித், தாக்கரே போன்றவர்கள் தங்களது நூற்களைப் பத்திரிகை வாயிலாகவே பகுதி பகுதியாக வெளியிட்டனர்.

கேவலம் பொருளீட்டல் என்றும் ஒரே நோக்கமுடைய நூலாசிரியனும், பத்திரிகாசிரியனை யண்டினாற் க்ஷேமமடைகிறான். பொதுவாகப் பெரும்பான்மையான வாசகர்கள் விரும்பி வாசிக்கும் விஷயம் இன்னதென அவனே எளிதில் அறியமுடியும். புதிதாக இயற்றப்பட்ட நூலை எப்படி, எங்கு தகுந்த இலாபத்திற்கு விற்பதென்பதையும் அவனே யறிவான்.

இனிப் பாரத நாட்டு நூலாசிரியரதும், பத்திரிகாசிரியரதும் கடமைகள் யாவன்? "தற்காலத்தில் இன்னாட்டு ஜனங்கள் உலகிலுள்ள எல்லா அநாகரீக ஜனங்களைக் காட்டிலுங் கடைப்பட்டவர்களா யிருக்கிறார்கள்.........ஆடை யில்லாமல் காதுகளிலும், உதட்டிலும்...........துவாரங்கள் செய்து சங்குகளையும் வளையங்களையும் தொங்கவிட்டுக் கொண்டு.................திரியும் ஜனங்களுக்குக்கூட ஸ்வந்திரம் உண்டு. இத் தேசத்தார் அப் பெரும் பாக்கியத்தை இழந்துவிட்டார்கள். இந் நாட்டில் கல்வி மங்கிப் போய்விட்டது.

நூற்றிலே தொண்ணூறு ஜனங்கள் "அ" (ஆனா) எழுதச் சொன்னால் தும்பிக்கை யொன்று வரைந்து ஆனை யெழுதக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள். நமது சாஸ்திரங்கள் செல்லரித்துப் போய்விட்டன.

இந்திய நாகரீகத்தின் உற்பத்தி ஸ்தானம்.

(மஹா கவி ரவீந்திரநாத தாகூர் அவர்கள் எழுதிய கட்டுரை யொன்றின் மொழிபெயர்ப்பு.)

திரு. **O. P.** தேசிகன் அவர்கள்.

நவீன நாகரீகம் சிறப்பாக நகர்புறங்களுக்கே உரியது. அதில் சிரேஷ்டமா யிருப்பதனைத்தும் பட்டணங்களிலேயே காணப்படும். உண்மையில் அதைத் தவிர வேறு எவ்விதமான நிலைமையினைக் குறித்துச் சிந்திப்பதும் சிரமமான காரியமே. எங்கே பற்பல மனிதர்களும் ஒருமிக்கச் சந்தித்து உறவாடுகின்றனரோ, அங்கே மக்களின் பல்வகைப்பட்ட அறிவு சக்திகளும் ஒன்றோடொன்று உராய்வதனால், மனதை விழித்திருக்கச் செய்கின்றது; நாற்புறங்களினின்றும் கிளம்பும் தூண்டுதல்களால் ஒவ்வொரு மனிதனது சக்தியும், திறமையும் இயக்கப்படுகின்றன.

அதன்பிறகு எப்பொழுது ஓர் மனிதனுடைய சக்தியனைத்தும் தூண்டப்படுகின்றனவோ, அப்பொழுதே யவன் தன்னைப் பயனுறச் செலுத்தக் கூடியதோர் ஸ்தலத்தை நாடுவது சகஜமேயாகும் (இயற்கையேயாகும்). ஆனால் அப்படிப்பட்ட ஸ்தலம் எங்கு காணப்படும்? அது, பற்பல மக்களின் பலவகைப்பட்ட முயற்சிகளும், விதம் விதமான சிருஷ்டித் தொழிலில் மிகவும் மும்முறமாக

............இந் நாட்டின் கலைகளனைத்தும் மறைந்து போய்விட்டன. வீரியம் போய்விட்டது. பலம், சுகம், செல்வம் முதலிய நற்பொருள்களெல்லாம் அகன்றுவிட்டன.........அடிமை ஜாதியார் இந் நாட்டில் மஹா பரிதாபகரமான வாழ்க்கை நிகழ்த்துகிறார்கள்.'' பாலைவனம் போலிருக்கும் 'பாரத ஜன நிலை' ''யை'' ''ஆறும் ஓடையும் குளிர் பொழிலும் உள்ள ஓர் நகரமாக நிர்மாணிக்கும்'' பெரு முயற்சியில் பத்திரிகாசிரியர்களும் நூலாசிரியர்களும் இடைவிடாமற் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கு ஈடுபட்டிருக்கின்றதோ, அந்த இடமேயாகும். அத்தகைய ஸ்தலமே பட்டண மென்பது.

ஆதி மனிதனானவன், முதன் முதலாக நகரமொன்றைப் புதிதாக நிர்மாணித்து, அதில் குடியேறியபோது, அவன் அதனுடைய நாகரீகத்தினால் வசீகரிக்கப்பட்டவனாக இருக்கவில்லை. பெரும்பாலும் தனது பகைவனின் தாக்குதலினின்றும் தன்னை எளிதில் காப்பாற்றிக்கொள்ளுவதற் கேற்ற வசதியும், பலமும் பொருந்தியதோர் ஸ்தலத்தின் ஆவசியகத்தை யவன் உணர்ந்திருக்க வேண்டுமென்பதே அதற்குக் காரணமாகும். ஆனால் அந்த முதற் காரணம் எதுவா யிருந்தபோதிலும் பல்வகைப்பட்ட மனிதர்களும் பொதுவான ஓரிடத்தில் ஒன்று கூடி உறவாடுவதற் கேற்றதோர் தருணம் வாய்த்தவுடன் ஆங்கு அவர்களுடைய தனிப்பட்ட எண்ணங்களும், தேவைகளும், ஓர் பொது நலங்கொண்ட தோற்றத்தை யடைவதாயின. அதனின்றும் நாகரீகமே தனக்குத்தானே பரிணமித்தது.

ஆனால் பாரதமாதா ஓர் அதிசயத்தைக் கண்ணுற்றிருக்கிறாள். இந்திய நாகரீகத்தின் உற்பத்தி ஸ்தானம் பட்டணங்கள் (நகரங்கள்) அன்று. ஆனால் அரண்யங்களே. முதன் முதலாகக் குறிப்பிடத்தக்க அவ்வுடைய அபிவிருத்தியானது மக்கள் சமூகமானது ஒன்றோடொன்று நெருங்கி உராயுமிடத்தில் நிகழ்ச்சி பெறவில்லை. அங்கே விருக்ஷங்களும், கொடிகளும், ஆறுகளும், குளங்களும் மனிதனோடு தம்மை ஒன்றுபடுத்துவதற் கேற்ற வசதிகள் பல ஏராளமாக அமையப்பெற்றிருந்தன. அங்கே மனிதர்களும், விஸ்தாரமான வெளிகளும் இருந்தன. ஆனால் ஜன நெருக்க மென்பதில்லை. ஆனால் இத்தகைய பரந்த வெட்டவெளிகள் இந்தியாவின் இருதயத்தை முற்றிலும் உணர்ச்சியற்றதாகச் செய்துவிடவில்லை. அதற்குப் பதிலாக அது பாரத நாட்டின் தன் னுணர்ச்சிக்குப் பின்னும் அதிகமானதோர் சோபையையும், ஒளியையும் அளித்து உதவியது. இவ் வுலகிலே வேறெங்கும் அத்தகைய சம்பவம் நிகழ்ந்ததில்லை. வேறு இடங்களில், கால வித்தியாசத்தாலும், சந்தர்ப்பக் குறைவாலும், வனங்களில் வசித்திருக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைமைக் குட்பட்ட மக்கள், காட்டுமிராண்டிகளாகவும், அநாகரீகர்களாகவுமே மாறிவிடுவதை நாம் பார்க்கிறோம். அவர்கள் புலிபோன்ற மூர்க்கமுள்ளவர்களாகவாவது அல்லது மான்போன்ற பரம சாதுக்களாகவாவது இருக்கிறார்கள்.

ஆனால் பூர்வீக இந்தியாவிலோ, வனப் பிரதேசத்தின் ஏகாந்தத் தன்மையானது மக்களது அறிவையும், மனதையும் முற்றிலுமடக்கி யாட்கொண்டுவிடவில்லை. அதற்குப் பதிலாக அதற்குப்

பின்னும் அதிகப்படியான உத்வேகத்தையும், சக்தியையும் அது ஊட்டியிருப்பதையே காண்கிறோம். அதன் பயனாக அந்தப் புனிதமான ஆச்ரமங்களினின்றும் வெளிப்போந்த நாகரீக அருவியின் ஜீவ சக்தியானது இந்தியா முழுவதையும் நீர்ப்பாய்ச்சி வளப்படுத்தியிருப்பதுமன்றி, அதனுடைய பிரவாகம் இன்றளவுங்கூடச் சிறிதேனும் தடைப்படுத்தப்படாமலே இருந்துவருகின்றது.

வன வாசிகளுடையவும், ஆசிரம வாசிகளுடையவும் இடைவிடாத தியானத்தின் மூலம் இந்தியாவிற்குக் கிடைத்த இந் நாகரீகத்தின் வேகம் யாதொரு புறத் தூண்டுதல்களினின்றும் உற்பத்தியானதன்று. அல்லது மக்களது பல்வகைப்பட்ட தேவைகளின் அபரிமிதமான போட்டியால் அது வளர்ச்சியடைந்து விடவுமில்லை; ஆதலின் இந்தச் சக்தியானது குறிப்பாக வெளி வஸ்துக்கள் (பாஹ்ய வஸ்துக்களின்) மீது செலுத்தப்படவில்லை. அது இப் பிரபஞ்சத்தின் ஆழத்தையும் தனது தியானத்தால் ஊடுருவிச் சென்றிருக்கிறது. அது இயற்கைக்கும், மனிதனது ஆத்மாவுக்குமிடையே ஓர் ஒற்றுமையை நிலைநிறுத்துகிறது. ஆனதுபற்றியே இந்திய நாகரீகமானது பொருட் செல்வத்தின் உருவமாக—உலகப் பொருள்களின் வாயிலாக வெளிப்படவில்லை. இந்த நாகரீகத்தின் "நேதாக்கள்" (தலைவர்கள்) ஏகாந்த வாழ்க்கையில் களித்த தனி மனிதர்களே யாவர்-அவர்கள் அறையுடை யணிந்து, துறவிக்கோலம் பூண்ட கோவணாண்டிகளே. சமுத்திர தீரமானது தனது ஸ்தனத்தின் பாலைப் பருகி வளர்ந்த ஜாதியினருக்கு வர்த்தக மேம்பாட்டையளித்திருக்கிறது. ஆனால் பாலைவனத் தாயின் சுவல்ப பாலைக் குடித்துப் பட்டினி கிடந்து வந்திருக்கும் தேசமோ, உலகத்தையே ஜெயிக்கவல்ல போராற்றல் வாய்ந்ததாக ஆய்விட்டது. அம் மாதிரியாகவே ஒவ்வொரு விசேஷ சந்தர்ப்பமும் மக்களது சக்தியையும், முயற்சியையும் குறிப்பிட்ட தனித் துறையின் வாயிலாகச் செலுத்தி வந்துள்ளது. வட இந்திய சமவெளிகளிலுள்ள அடர்ந்த காடுகள் நமது நாட்டிற்கு மிக்க அரிய அனுகூலமொன்றை யளித்திருக்கின்றன. அவைகள் இந்தியாவின் அறிவுணர்ச்சியை இப் பிரபஞ்ச சிருஷ்டியின் மர்மமென்னும் ஆழ்ந்த இராஜ்யத்தின் உட்புறத்தையும், ஆழத்தையும் ஆராய்ந்தறியுமாறு ஏவியதாகக் கூறலாம். மனித வர்க்க மனைத்தும் வருங்காலத்தில், ஹிந்துக்கள் தமது புத்திக்கூர்மையால் (நுட்பத்தால்) அந்த விஸ்தாரமான சாகரத்தின் தூர தூரத்திலுள்ள தீவுகளினின்றும் திரட்டி வந்திருக்கும் அரிய பொக்கிஷக் குவியல்களை யாவலுடன் நாடி, அதன்பொருட்டுத் தனது நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளதென்பதில் சிறிதும் ஐயமில்லை. இரவு பகலாக, பருவங்களுக்குப் பின் பருவங்களாக இயற்கையின் சேஷ்டைகளை (லீலைகளை) யுணர்த்தும்

வன விருக்ஷங்களின் மத்தியில், தமது சீரிய வாழ்வை—இடைவிடாத் தியானத்தை நடாத்திவந்த ரிஷி சிரேஷ்டர்கள் தம்மைச் சுற்றிலும் இனிய மர்மமொன்று சூழ்ந்திருப்பதைத் தெளிவாகக் கண்ணுற்று ஆனந்தமெய்தினர். ஆனதுபற்றியே அவர்கள் "அகண்ட மண்டலாகாரம் வியாப்தம் யேன சராசரம்"—"ஜீவராசிகள் யாவும் பரமாத்மாவிடமிருந்து தோன்றி, எங்கும் வியாபித்து, நமது ஆத்மாவிலேயே புத்துயிர் பெற்றுத் துடிக்கின்றன" என்று அவ்வளவு அலக்ஷியமாகக் கூறிவந்தார்கள். அவர்கள் தம்மைத் தாங்களாகவே வலுவில் அமைத்துக்கொண்ட பலம் பொருந்திய செங்கற் கோட்டைகளிலும், இரும்புக் கூண்டுகளிலும் அடைத்துக் கொண்டுவிடவில்லை; அவர்கள் வசித்த இடத்தில் மிகவும் பரந்த பிரபஞ்ச சிருஷ்டியானது யாதொரு தடையுமின்றி அவர்களோடு நீக்கமறக் கலந்து, கூட்டுறவு பெற்று விளங்கியது. இந்த வனப் பிரதேசமே அவர்களுக்குக் குளிர் நிழலைத் தந்தது. கனி வர்க்கங்களையும், மலர்களையும் உதவியது; விறகும், தருப்பமும் அளித்தது இந்த வனப் பிரதேசமே.

அவர்களுடைய தினசரி வாழ்க்கையிலும், வேலைகளிலும், ஓய்வு நேரங்களிலும் பரஸ்பர உதவியளித்து வந்ததன் மூலம் சம்பந்தம் பெற்று விளங்கியது. இவ் விதமாகத்தான் அவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்த பிரபஞ்ச வாழ்க்கையுடன் ஒருவாறு தம்மைச் சம்பந்தப்படுத்திக் கொள்வதன் மூலம் தமது வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்துகொள்ள முடிந்தது. ஏனெனில் அவர்களுடைய சுற்றுப்புறமானது வெறும் சூனியமாகவும், உயிரற்றதாகவும், அவாந்தரமானதாகவும் இருக்கவில்லை. எங்கும் வியாபித்துள்ள இயற்கையின் வாயிலாகத் தமக்குக் கிடைத்துள்ள இன்பமனைத்தும் (நன்மை); வெளிச்சம், ஆகாயம், உணவு இவை யாவும் கேவலம் பூமியிலிருந்தாவது, அல்லது விருக்ஷங்களிலிருந்தாவது, அல்லது அகண்ட ஆகாசத்திலிருந்தாவது தமக்குக் கிடைந்தனவல்லவென்றும், ஆனால் தன்னறிவும், தன்னுணர்ச்சியும் வாய்ந்த முடிவற்ற ஆனந்த ஸ்வரூபத்தினின்றும் உற்பவித்தவைகளே யென்றும் இயற்கையாகவே அறியக்கூடிய மனப்பான்மை வாய்ந்தவர்களாக அவர்கள் இருந்தனர். ஆனதுபற்றியே அவர்கள் ஆகாயத்தையும், ஒளியையும், உணவையும், பானத்தையும் அத்துணை பக்தி பூர்வமாக வரவேற்றனர். இந்த தேச சரித்திரத்தின் இரு பெரும் பகுதிகளிலும், வேத காலத்திலும், பௌத்த காலத்திலும் வனங்களே (காடுகளே) அவர்களுடைய வாழ்க்கைக்குச் செவிலித்தாய் போன்று அமைந்தன. வேத காலத்திய ரிஷி சிரேஷ்டர்கள் மாத்திரமேயன்றி, புத்த பகவானுங்கூடத் தமது அரிய போதனைகளை அழகிய மாந் தோப்புகளிலும், மூங்கிற் புதர்களடியிலும் பொழிந்து

வந்தனர். ஆடம்பரமான மாடமாளிகைகளையும், அரண்மனைகளையும் அவர்கள் விரும்பினார்களில்லை. வனப் பிரதேச மொன்றே அவர்களை மார்புறத் தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டது. அதன் பிறகு நாட்கள் செல்லச் செல்ல நமது தேயத்தில் சிறு நாடுகளும், அதன்பின் இராஜ்யங்களும், ஏகாதிபத்யங்களும் பற்பல நகரங்களுடன் தோன்றின.

பாரதத் தாய் அயல் நாடுகளுடன் வர்த்தக சம்பந்தத்தை வளர்த்துவரலாயினள் (ஏற்படுத்திக்கொண்டாள்). பேராசைமிகுந்த சோளக் கொல்லைகள் அடர்ந்து, இருண்டு, நிழலைப் பரப்பி, சாந்தியும் அமைதியும் நிலவிய காடுகளைச் சிறிது சிறிதாக அப்பால் வெருட்டத் தொடங்கின; ஆயினும் பலமும், வளமும், யௌவன லாவண்யமும் பொருந்திச் சோபையுடன் விளங்கிய அக் காலத்திய இந்தியாவானது, வனப் பிரதேசங்களுக்குத் தான் கடமைப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ள ஒரு நாளேனும் தயங்கியதில்லை. இந்திய நாடு மற்ற வினைகளைக்காட்டிலும், தவ வாழ்க்கையையே (தபஸ்) உன்னதமாகக் கருதிப் பெரிதும் போற்றியுள்ளது; இந்தியாவின் "சக்கிரவர்த்திகளும், சதுராந்தர்களும்," முடிமன்னர்களனைவரும் காடுகளில் வசித்துக் கடுந்தவ மியற்றிய ரிஷி சிரேஷ்டர்களையே தமது முன்னோர்களாகவும், மூதாதைகளாகவும் போற்றுவதில் தாம் தனிப் பெரும் உயர்வும், சிறப்புமெய்தி யிருப்பதாகக் கருதிவந்தார்கள். இந்திய தேச வரலாற்றில் எந்த அரிய சம்பவங்களின் ஸ்ம்ருதியானது (நினைவு) ஒப்புயர்வற்ற அதிசயத்துடன் திகழ்கின்றனவோ, பவித்திரமும், காம்பீர்யமும் வாய்ந்திலங்குகின்றனவோ, உன்னதமும் சிலாகனியமாகவும் உள்ளனவோ அவை யனைத்தும் இந்தப் பூர்வீக ஆச்ரமங்களின் நினைவுடன் பிணைக்கப்பட்டு, இணையில்லா அழகுடன் ஒளிர்கின்றது. மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் இந்தியாவின் தனிமையும், அபூர்வ விசேஷமும் இதிலேதான் அடங்கியுள்ளது.

பாரத நாட்டில் விக்கிரமாதித்தன் அரசனாகவும், உஜ்ஜயினீபுரம் ஓர் பெரிய நகரமாகவும், காளிதாஸன் கவி சிரேஷ்டனாகவும் இருந்தபொழுது, இந்த ஆச்ரமங்களின் காலம், சென்றகால சம்பவமாக—பழங் கதையாக ஆகிவிட்டது. நாம் அப்போது உலக மக்கள் சமுதாயத்தின் முன்னணியில் சீனர், ஹூணர், ஸிதியர், பாரசீகர், கிரேக்கர், ரோமநாட்டினர் முதலிய அனைவரும் நம்மைச் சுற்றிலும் ஆவலுடன் குழுமியிருக்க, தலைநிமிர்ந்து, ஆண்மையுடன் வாழ்ந்துவந்தோம். தனது நிலங்களைத் தமது கைகளாலேயே உழுது, அதே சமயத்தில் தூர தூரத்திலிருந்தும் பாரமார்த்திக ஆராய்ச்சியின் பொருட்டுத் தம்மை நாடிவந்த வித்தியார்த்திகளுக்கு உன்னதமான தத்துவங்களைப் போதித்துவந்த ஜனக மகாராஜனைப்போன்ற ராஜ ரிஷியை யளிக்கக்கூடிய காலம் அதுவல்ல. ஆனால் அக் காலத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி, உலகம் புகழும் கீர்த்தியுடன் விளங்கிய கவிச் சக்கிரவர்த்தியார் தமது இணையற்ற நூல்களில் இந்த ஆச்ரமங்களைப்பற்றி வருணித்திருப்பதைக் காணும்போது, செல்வ மேம்பாட்டாலும், சுகபோக வாழ்க்கையாலும் கொழுத்துப் பூரிப்படைந்திருந்த அந்தப் பிற்காலத்திலுங்கூட பண்டை யாச்ரமங்களின் தூய்மை வாழ்க்கையானது நமது திருஷ்டியினின்றும் மறைந்துவிட்டதாயினும், அக் காட்சியும், அதைப்பற்றிய நினைவும் நமது உள்ளத்தினின்றும் அகலவேயில்லையென்பது தெளிவாக விளங்கும். காளிதாஸ கவி தமது அருங் காவியங்களில் தபோ வனங்களைச் சித்திரித்திருக்கும் அழகு ஒன்றே அக் கவியரசர் இந்தியாவுக்கே தனிமையாக உரியவராவார் என்பதை மெய்ப்பிக்கப் போதுமானவையாகும். துறவறத்தின் உன்னதமான லக்ஷியத்தை, ஆச்ரமவாசத்தின் அற்புதமான அழகை, அத்துணை இன்ப ரசம் ததும்ப, அவ்வளவு காம்பீரமான மொழிகளால் சித்திரிப்பதற்கு அவரையன்றி வேறு எவரால் முடியும்?

ரகு வம்ச காவியத்தில் முதற் காட்சி தோன்றியவுடன், அதனுடைய ஆரம்பத்திலேயே சாந்தியும், இனிமையும், தூய்மையும் பொருந்தி விளங்கும் ஓர் ஆச்ரமத்தின் புனிதமான காட்சியையே அது நமக்கு அளிக்கிறது.

> "மாலைப்பொழுது—அந்தி வேளை! ரிஷிகள் அருகிலுள்ள வனங்களிலிருந்து சமித்துக்களையும், தர்ப்பைப் புல்லையும், மலர்களையும், கனி வர்க்கங்களையும் சேகரித்துக்கொண்டு தமது குடிசைகளை நோக்கி மெல்ல மெல்லத் திரும்பியவண்ணமிருக்கிறார்கள். கண்களுக்குப் புலனாகாத தெய்வீகச் சோதியொன்று அவர்களைத் திரும்பவும் வரவேற்பதுபோலத் தோன்றுகிறது. இங்கே ரிஷி பத்தினிகளுக்கு மான் இனங்களே அவர்களுடைய குழந்தைகளைப்போ லிருக்கின்றன; அவைகள் தமக்காக எறியப்பட்ட தானியங்களைத் தின்று பசியாறி, ஆச்ரம வாயிலுக்குச் செல்லும் (பாதையின்) குறுக்கே நிர்ப்பயமாகப் படுத்துக்கொண் டிருக்கின்றன. ரிஷி புத்திரிகள் செடிகளுக்கும், விருக்ஷங்களுக்கும் ஜலம் கொண்டு வந்து கொட்டுகிறார்கள். அந்த ஜலமானது மரங்களின் வேரைச் சுற்றிலும் ஜலம் தேங்குவதற்காக யெழுப்பிய வரப்புகளின் உயரத்திற்கு எழும்பியவுடன், சிறு பக்ஷிகள் ஆங்கு வந்து அச்சமின்றி அந் நீரை யருந்தித் திருப்தியடைவதற்காக

> அவர்கள் ஓர்புறமாக ஒதுங்கி நிற்கின்றனர். சூரியன் மலைவாயிலிருக்கிறான்; முற்றத்தில் நெல் குவிக்கப்பட்டிருக்கிறது; மானினங்கள் அசை போட்டவாறே அச்சமின்றிக் கீழே அமர்ந்து இளைப்பாறுகின்றன. ஹோமப் புகையால் சூழப்பட்ட ஆகாயமானது ஆச்ரமத்தில் பிரவேசிக்கும் அதிதி ஒவ்வொருவனது அங்கங்களையும் தனது ஸ்பர்சத்தால் பவித்திரமாக ஆக்குகிறது."

இந்தக் காட்சியின் ஆழ்ந்த உட்கருத்து மனிதனுக்கும், இயற்கைக்குமுள்ள ஒற்றுமையைப் பூர்த்தி செய்வதேயாம்.

அபிக்ஞான–சாகுந்தள நாடகத்தில் ஓர் ஆச்ரமத்தின் தோற்றம் புலனாகிறது. இன்ப வாழ்க்கையிலும் ஆடம்பரக் கோலாகலங்களிலும் மூழ்கிக் கிடக்கும் அரண்மனையின் வனப்பையும் அது தோற்கடிக்கச் செய்கிறது (வெட்கித் தலை குனியுமாறு செய்கிறது). அந்த ஆச்ரமக் காட்சியின் உட்கருத்து மனிதனுக்கும் பிரபஞ்சத்திற்கும்—உயிர்ப் பொருள்களுக்கும் சடப் பொருள்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கு மிடையேயுள்ள உறவின்முறையின் அற்புத அழகேயாம்.

காதம்பரீயில் ஆச்ரமமொன்றின் சித்திரத்தைப் பாருங்கள்! மந்தமாருதம் செடிகளையும் கொடிகளையும் முடிதாழ்த்தி வணங்குவதுபோல் தாழ்வுறச் செய்கிறது; மரங்கள் பூஜா காலத்தில் மலர் தூவி அர்ச்சனை புரிவதுபோன்று தமது பத்ரங்களை (இலைகளை) வாரியிறைக்கின்றன; ஆச்ரமத்தில் ஓர்புறம் சியாமக நெல் உலரவைக்கப்பட்டிருக்கிறது; ஆமலகமும் (நெல்லி), லபலியும், கதலியும் (வாழை), பதரியும் (இலந்தை) போன்ற கனிவர்க்கங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. அந்தணச் சிறுவர்கள் வேதாத்யயனம் செய்யும் உரத்த த்வனி வனப் பிரதேசம் முழுவதும் முழங்கிப் பிரதிபலிக்கிறது; பச்சைப் பசுங் கிளிகள் தாமடிக்கடி கேள்வியுற்ற மந்திர வசனங்களை யப்படியே திருப்பிக் கூறுகின்றன; காட்டுக் கோழிகள் தேவதைகளுக்கு அளிக்கப்பட்ட பலிகளை யுண்டு மகிழ்கின்றன; பூஜை காலத்தில் நிவேதிக்கப்பட்ட நிபாநெற் மணிகளைப் பொறுக்கித் தின்பதற்கு அருகிலுள்ள ஏரியிலிருந்து வாத்துக் குஞ்சுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து சேர்ந்துவிட்டன; பெண் மான்கள் ரிஷி புத்ரர்களின் சரீரங்களைத் தமது நாவினால் நக்கிக் கொடுக்கின்றன!

இங்கேயும் அதன் உட்பொருள் ஒன்றேயாகும். மனிதன் செடி கொடிகளினின்றும், பசு பக்ஷி இனங்களிலிருந்தும் பிரிந்து தனித்து நிற்பதை யொழிக்கும் ஸ்தலங்களாகவே ஆச்ரமங்கள்

கூட்டுத் தொழில்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி."

ஆதியில் ஆங்கிலேயர்கள் இருந்த அதி கேவலமான, மிலேச்ச நிலைமைக்குப் பின்பு, அவர்களின் மிகு விவேக, விற்பன்ன சக்தியாலும், ஊக்கமோடும், உறுதியோடும் உழைத்த உழைப்பாலும், விளங்குகின்றன. இந்தப் பழைய பாடமே நமது நாட்டில் மீண்டும் மீண்டும் நமக்குப் போதிக்கப்படுகிறது.

நமது தேசத்தில் விலையிலா மாணிக்கங்களென ஒளிவீசும் இலக்கிய ரத்னங்கள் யாவற்றிலும் மனிதனுக்கும் சர்வ வியாபகமுள்ள ஜகத் சிருஷ்டிக்குமுள்ள ஒற்றுமையே வற்புறுத்தப்படுகிறது. நம்மைச் சுற்றிலும் ஜடப் பிரகிருதியானது நம்முடைய ஒவ்வொரு எண்ணத்தோடும், ஒவ்வொரு செய்கையோடும் நெருங்கிய தொடர்புள்ளதாக இணைபிரியாமல், அத்தனை நுட்பமாக லயித்து நிற்கிறது. மனித வாஸங்களனைத்தும் முற்றிலும் மக்களாலேயே நிரப்பப்பெற்று, இயற்கையென்பதே அதில் நுழைவதற் கனுமதி மறுக்கப்படும்பொழுது, நம்முடைய எண்ணங்களும், செய்கைகளும் சிறிது சிறிதாக அசுத்தமும், ஆரோக்கியக் குறைவுமடைந்து தங்களாலேயே சிருஷ்டிக்கப்பட்ட வெறுங் குப்பைக் குவியல்களிடையே, தமக்குத்தாமே உண்டுபண்ணிய (வழி தேடிக்கொண்ட) ஓர் மரணத்திற்கு, அழிவுக்கு உட்படுகின்றன. இயற்கைத் தேவியானவள் நமக்குள்ளேயே இடைவிடாமல் வேலைசெய்து வருகிறாள். எனினும், நாமே நடிகர்கள்போலவும், தான் கேவலம் அதற்காக வமைந்த ஆபரணத்தை (அணிகலனை)ப் போலவும், அவள் மௌனமாகவும், உணர்ச்சியற்றவளைப் போன்றும் அபினயம் செய்கிறாள்.

ஆனால் நமது கவி சிரேஷ்டர்களோ, பிரகிருதி தேவியின் இந்தச் சேஷ்டையை நன்கறிந்திருந்தனர்; அவர்களுடைய அருமையான கிரந்தங்கள், மனித வாழ்க்கையின் இன்ப துன்பங்களுடன் இயற்கையின் லீலா விபூதிகள் கலந்துறவாடும் (லயித்திருக்கும்) அனந்தமான—முடிவற்ற தோற்றத்தை வெளியிடும் குறிப்புகளுடன் த்வனிக்கின்றன.

(தொடரும்.)

பல அரிய பெரிய விஷயங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று அடங்கா ஆசை கொண்டு, இடைவிடாது முயன்று, ஆராய்சி செய்த தின் நேர்மையாலும், ஒவ்வொரு விஷயத்திலும் அதிகக் கருத்தைச் செலுத்தி, அநேக நுட்பங்களைத் தெரிந்துகொண்ட தன்மையாலும், "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பதைக் கடைப்பிடித்து, கடல்களையும், வனம் வனாந்திரங்களையும் தாண்டிப் பொருள் உண்டாக்கப் பற்பல வழிகளைக் கண்டறிந்த தீரத்தாலும், உலகத்தின் பல தேசங்களுக்குத் தைரியத்துடன் சென்று, அத் தேசத்தினர்களைச் சூழ்ச்சிகளால் வென்ற சமயோஜித ராஜ தந்திரத்தாலும், இன்னும் அவர்களுக்கு இயற்கையாக அமைந்திருக்கும் நுட்ப புத்தியாலும், ஊக்கத்தாலும், விடாமுயற்சியாலும், இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக அவர்களுடைய ஒப்பற்ற ஒற்றுமையின் சக்தியாலும் உலகத்தின் ராஜீய காரியங்களிலெல்லாம் முதன்மையாகவும், வல்லரசுகளில் ஒரு தேசத்தினராகவும், வியாபாரத்தில் அரசர்களாகவும், கைத்தொழிலில் நிபுணர்களாகவும், விவசாயத்தில் விற்பன்னர்களாகவும், வேறெத்துறைகளிலும் முன்னவர்களாகவும் விளங்குகிறார்கள் ஆங்கிலேயர்கள்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உலகத்தில் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளைப்பற்றிக் கவனித்தாலோ, அத் தேசத்தின் செல்வம் ரொக்கமாக 1,821,000,000,000 டாலர் (டாலர் = ரூ. 3–2–0) இருக்கிறதாம். அந் நாட்டிலுள்ள நிலங்கள், ஆடு மாடுகள், இயந்திரங்கள், விவசாயம், சுரங்கம் முதலியவை சம்பந்தமான உற்பத்திகளையும் ஏனைய பிறவும் கணக்கிட்டால், உலகத்தின் செல்வத்தில் அதுமட்டும் 5-ல் 1 பாகமாக விளங்குகிறதென்று ஒரு பொருளாதார நிபுணர் கூறுகிறார். "நமது அபார ஆஸ்தி ஜனங்களிடமே யிருக்கிறது. இந்த ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பதே நமது மகா பெரிய வேலையாகும். ஜனங்களே நமக்கு முக்கிய ஆஸ்தியாகும்" எனக் கூறுகிறார் டாக்டர் லூயி டப்லின் என்பார். "ஆளைத் தேடி ஆஸ்தியைத் தேடு" என்பது தமிழகத்தின் நாட்டுப் பழமொழியாகும்.

அயர்லாண்டு தேசம் எத்தனையோ வருடங்களாகச் சுய ஆட்சி அடைவதற்காகப் பாடுபட்டுக்கொண்டு வருவது உலகம் அறிந்த விஷயமாகும். பொருளாதார சுதந்திரம் அடையாது, ராஜீய சுதந்திரம் பெற்றும் பயனில்லை யென்று சர். பிளான்கெட் என்பவர் எண்ணி, ஐக்கிய இயக்கத்தின் மூலமாக நன்கு வேலை செய்து ஐரிஷ் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் கைதூக்கிவிட்டுத் தேசத்தில் செல்வத்தை நிலைக்கச் செய்தார்.

டென்மார்க்கு ஒரு சிறிய தேசம். அதன் மொத்த விஸ்தீரணம் 17,118 சதுர மைல். அத் தேசத்தார்களின் ஒற்றுமையாலும்

கூட்டுறவாலும் அவர்கள் முன்னுக்கு வந்துவிட்டார்கள். பால், வெண்ணெய், நெய், கசாப்பு, ஆடு மாடுகள் முதலியவைகளைக் கூட்டு வியாபாரத்தால் நல்ல விலைக்கு விற்று, ஐக்கிய பண்டகசாலையும், வளர்ப்புச்சாலைகளையும் ஏற்படுத்தி இன்று உலகம் போற்றும்படியாக வாழ்கிறார்கள் டேனியர்கள். உலகத்திற்கே டென்மார்க்கு தேசம் கூட்டுறவுச் செய்தியை அனுப்பிக்கொண் டிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லாக் குடியானவர்களைக் காட்டிலும் டேனிஷ் குடியானவர்கள் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்கிறார்கள்.

ஜப்பானியர், சில சிறிய தீவுகள் அடங்கிய ஒரு சிறு தேசத்தில் வசிப்பினும், அவர்களுடைய உழைப்பு, உற்சாகம், ஊக்கம், நுண்ணறிவு முதலியவைகளைக் காட்டிலும், அவர்களின் ஒற்றுமையால் வல்லரசுகளில் ஒன்றாகவும், அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் அவர்களைக்கண்டு பொறாமை யடையும்படியாகச் செல்வத்தில் சிறந்து, வீரத்தில் மிகுந்து, தீரத்தில் அதிகமாகி, செல்வாக்கில் உயர்ந்து, உலகம் மதிக்கும்படியாக வாழ்கிறார்கள். "பொருளாதார சுதந்திரம் வாழ்க்கையில் இன்பம் உண்டாக்கும்" என்று கூறுகிறார் எல்பார்ட் ஹப்பார்டு. "பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது வள்ளுவர் வாக்கு. உலகத்தில் பல நாட்டார்கள் செல்வத்தில் சிறந்து விளங்குகிறார்கள்; இந்தியர்கள் பரிதாபமான நிலைமையில் இருக்கிறார்கள்.

ஸ்விட்ஜர்லாண்டு தேசத்தில் பால்காரர்கள் ஒற்றுமையுடன் கூடி ஏற்படுத்திய ஸ்தாபனத்தின் மூலம் பாலை நல்ல விலைக்கு விற்கிறார்கள். அமெரிக்காவில் எலுமிச்சைத் தோட்டக்காரர்கள் தங்கள் ஒற்றுமையினால் பழங்களையோ, சாரத்தையோ (Essence) நல்ல விலைக்கு விற்கிறார்கள். காலையில் மலர்ந்து, மாலையில் வாடும் புஷ்பங்களை உண்டாக்கும் புஷ்பத் தோட்டக்காரர்களெல்லாம் சில நாடுகளில் ஒன்றுபட்டுத் தாங்கள் உற்பத்தி செய்யும் மலர்களையெல்லாம் இலாபகரமாக விற்பனை செய்கிறார்கள். இவைபோன்ற உதாரணங்கள் பலவுண்டு. இனி ஒன்றுமட்டும் கூறிவிடுகிறோம். இந்தியர்களில் வியாபார அரசராக விளங்கும் டாடா கம்பெனியார், கேரளத்தில், கொச்சி சமஸ்தானத்தில், டாடாபுரத்தில் தேங்காயிலிருந்து வெண்ணெயெடுக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தி, விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் உதவி செய்ததுமன்றி, அந்நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குத் தேங்காய் ஏற்றுமதியை அதிகமாகக் குறைந்துவிடும்படி செய்துவிட்டார்கள். நம் தேசத்தின் மூலப்பொருள்களெல்லாம் அயல் தேசங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து நமது இயற்கைப் பொருள்களெல்லாம் செயற்கைப் பொருள்களாக்கப்பட்டு மீண்டும் நம்மிடமே வருகின்றன. நம்

தேசத்து மூலப் பொருள்கள் அயல் நாடுகளுக்குச் சென்று, மாற்று ரூபங்களுடன் நம் தேசங்களுக்கு வருமானால், அவைகளை நம்மைக் கொல்லவரும் பீரங்கிக் குண்டுகள் என்று நாம் கருதவேண்டும்.

அயல் நாடுகளிலிருந்து வந்திருக்கும் எத்தனையோ கம்பெனிக்காரர்கள் பெரிய இலாபங்கள் அடைந்துகொண்டிருக்க, நாம் கீழே போய்க்கொண்டிருக்கிறோம். மதுரையில் வைத்திருக்கும் ஹார்வி மில்லில் 100-க்கு 25 வீதம் லாபம் கொடுக்கிறார்கள். ஜல மின்சாரத்தால் ஓடும் பாபநாச மில்லிலும் தக்க லாபம் உண்டு. 50 வருஷங்களுக்கு முன்பு ரூ. 25,000 மூலதனம் வைத்து ஸ்தாபித்த ஸ்பென்ஸர் அண்டு கம்பெனி (Spencer & Co.) ரூ. 5,000,000-க்கு மேலாக விருத்தியாகி யிருக்கிறது. கண்ணன் தேவன்மலை உற்பத்திக் கம்பெனியார்கள் (K. D. H. P. Co) 1926-ம் வருடத்தில் 100-க்கு 37½ லாபமும், 1927-ம் வருடத்தில் 100-க்கு 32 நிகர லாபமும், கூட்டுத் தேயிலைத் தோட்டக் கம்பெனியார்கள் (The Amalgamated Tea Estates Co.) 1926-ம் வருடத்தில் 100-க்கு 35 லாபமும், 1927-ம் வருஷத்தில் 100-க்கு 30 நிகர லாபமும், ஜேம்ஸ் பின்லே அண்டு கம்பெனி (James Finlay & Co.)-க்குச் சொந்தமான 4 தேயிலை எஸ்டேட் பங்குக்காரர்களுக்கு 1926-ம் வருடத்தில் 100.க்கு 30 லாபமும், 1927-ம் வருடத்தில் 100-க்கு 25 நிகர லாபமும் கொடுத்திருக்கிறார்கள். டிடாகூர் காகித மில் (Titaghur Paper Mills), டாடா இரும்புத் தொழிற்சாலை, பக்கிங்காம் மில், கர்னாட்டிக் மில் முதலிய இன்னும் அநேக கூட்டுத் தொழிற்சாலைகளுக்கு நல்ல இலாபம் உண்டு. இவ் வுதாரணங்களை அடுக்கிக் கொண்டு போனால், விஷயம் வளர்ந்துகொண்டே போகும்.

சிலர் அதிகமாக ரூபாய் போட்டுவைத்திருந்த ஆர்பத்னெட் கம்பெனி ஒடிந்து விழுந்தது. தென்னிந்தியாவில் வயல்நாடு தங்கச் சுரங்கக் கம்பெனியில் பங்கு சேர்ந்த பலர் நஷ்டமடைந்தனர். இப்படிப்பட்ட ஏதோ சில அசம்பாவிதமான சம்பவங்களினால் கூட்டு வியாபாரிகளில் பலர் நம்பிக்கையை இழக்கிறார்கள். எக் காலத்திலும், எந் நாட்டிலும் சில அயோக்கியர்கள் இல்லாமலில்லை என்று சரித்திரம் கூறுகின்றது. இந்தியாவில் வர்த்தக விஷயத்தில் இன்னும் சரியானபடி நம்பிக்கை உண்டாகவில்லை. "சூடு கண்ட பூனை அடுப்பண்டை போகாது" என்ற முதுமொழிபோல, நம்மவர்கள் ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டு, இக் காரியத்தில் நெருங்குவதில்லை. எல்லா நாடுகளிலும் இம்மாதிரியான சம்பவங்கள் பல வுண்டு. அறிஞர் கிளின் பார்லோ (Glyn Barlow) என்பர் இந்தியக் கைத்தொழில் முயற்சி (Industrial India) என்ற புஸ்தகத்தில் அடியிற் கண்டவாறு எழுதுகிறார்.

"இந்திய வியாபாரமானது ஜாஸ்தியான அளவில் விருத்தியாக வேண்டுமானால், "ஏகோபித்த கூட்டு வியாபாரச் சங்க முறை" முதல் முதல் உற்பத்தியாகவேண்டும். இந்தியாவில் பிரத்தியேக வர்த்தகக் கூட்டமானது பெரிய முயற்சிகளில் பணம் செலவிடத் தகுந்த செல்வமுள்ளதா யிருக்கிறதில்லை. ஆகையால் பெரிய முயற்சிகளைச் செய்ய ஆரம்பிக்க வேண்டுமானால், தன்னுடைய பணத்தைக் கூட்டுவியாபாரக் காரியங்களில் வட்டிக்கு விடும்படி இந்தியர்களுக்குக் கற்பிக்க வேண்டும். ஒதுக்குப்புறமா யிருக்கிற ஆயிரக் கணக்கான இந்திய கிராமங்களில் காரியசித்தியாகும் தொழில் முயற்சிக்கு வேண்டிய சாதனங்கள் மறைந்து கிடக்கலாம். ஆனால் கிராம வாசி ஒருவருக்கும் தனியே ஒரு பெரிய முயற்சியில் பணம் செலவிடத் தகுந்த ஐவேஜாவது, தைரியமாவது இல்லாமையினால், அந்த முயற்சியும், அத்துடன் அதில் வரக்கூடிய இலாபமும் புதைந்து கிடக்கிறது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அதற்கு வேண்டிய கை முதலைத் தங்களுக்குள்ளேயே பங்கு வீதமாகச் சேர்க்கவேண்டும். பிறகு ஒரு காரிய நிர்வாக சபையை நியமிக்க வேண்டும். அந்தச் சபையைக்கொண்டு அதற்கு ஒரு மானேஜரை ஏற்படுத்த வேண்டும். அது வர வர விருத்தியடையும்படி ஜாக்கிரதையாய்ப் பார்த்து வரவேண்டும். இலாபத்தை எதிர்பார்க்கும்படி கிராம வாசிகள் கற்றறிய வேண்டும். அதாவது தொழில் முயற்சி அபிவிருத்தியாக "ஏகோபித்த கூட்டு வியாபாரச் சங்கத்தை" ஏற்படுத்த அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதே."

முற்காலத்தில் ரோமர்களுடைய ஆடம்பரச் செலவுகளுக்காக ரோம் ராஜ்யத்திலிருந்து 10,00,000 பவுனுக்குக் (இக்கால இங்கிலீஷ் நாணயப்படி) குறைந்து இந்தியாவுக்குப் போகாத வருஷமே கிடையாதென்றும், ரோமும் அதைச் சேர்ந்த மற்ற மாகாணங்களிடமிருந்தும் வருடந்தோறும் 40,00,000 பவுன்கள் இந்தியாவுக்குச் சென்றன வென்றும் பிளினி என்பவர் கூறுகிறார். இவ்வாறு அவர் கூறுவதைப்பற்றி நாம் பெருமை பாராட்டிக்கொண்டபோதிலும், தற்காலத்தில் எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சாமான்களை ஆண்டுதோறும் அயல் நாடுகளிலிருந்து இங்கு வரவழைப்பது கேவலம்! கேவலம்!! அயல் நாடுகளிலிருந்து அதிகமான இறக்குமதியால் நம் நாட்டின் செல்வமெல்லாம் கொள்ளை கொள்ளப்பட்டு, அவைகள் அயல் நாடுகளுக்குக் கொண்டுபோகப் படுகின்றன.

டாடா, சாசூன், பொமான்ஜி, வாச்சா, படேல், ரெடிமணி, பெட்டிட், பஜாஜ் முதலிய இன்னும் எத்தனையோ பேர்கள் பம்பாய் மாகாணத்தில் வியாபாரத்தில் சிறந்து விளங்குவதாய்க் கேள்விப்படுகிறோம். ஆனால் தென்னாட்டில் அவ்விதமில்லை. வடநாட்டவர்கள் பலர் தென்னாட்டிற்கு முக்கிய வியாபார நிமித்தமாக வந்து குடியேறித் தத்தம் தொழில்களை உற்சாகத்துடன் நடத்துகிறார்கள். தமிழ் நாட்டில் பெரிய பட்டினங்களில் வட நாட்டார்கள் இல்லாத

பட்டினங்களே கிடையாது. தமிழர்களில் பலர் வட நாட்டிற்குச் சொற்ப சம்பளம் பெறும்பொருட்டே செல்லுகின்றனர். அவ்வாறு சென்ற தமிழர்களில் கல்கத்தாவில் ஆண்ட்ரூ யூல் அண்டு கம்பெனி (Andrew Yule and Co.)-யுடன் கூட்டாகக் கூடிச் செல்வமுற்றுப் பின்பு கன்னிவாடி ஜமீனை வாங்கிய N. R. அய்யரையும், சுய முயற்சியினால் மேன்மையடைந்து, கல்கத்தாவில் பிரபலமாக இப்பொழுது கம்பெனி வைத்து நடத்தும் வானமாமலை N. S. T. சாரி அண்டு கம்பெனியையும், காசியில் பிரபலமாகப் பட்டு வியாபாரம் செய்யும் திருநெல்வேலி ஜில்லா, களக்காடு K. S. முத்தையா அண்டு கம்பெனியையும் தமிழ் நாடு ஒருவாறு அறியும். ஜெர்மனியில் கோட்டின்ஜன் (Gottingen) என்னும் நகரத்தில் வியாபாரம் நடத்தும் A. R. பிள்ளை அண்டு கம்பெனியை திருவாங்கூர் வாசிகள் அதிகமாக அறிவார்கள். லண்டனில் வீராச்சாமி என்பவர் சாப்பாட்டு விடுதி ஒன்றை வைத்து நடத்திவருகிறார். இவைபோன்ற உதாரணங்கள் இன்னும் பல இல்லாமலில்லை.

பொன் விளையும் நாடெனவும், கற்பக நாடெனவும், புகழ்பெற்ற நமது பரத கண்டம்—பலவகை ஏற்றங்களும், இயற்கை வளங்களும், வனப்புகளும் வாய்ந்த நமது மாதுரு பூமி—"இல்லை" என்று வந்தவர்களுக்கு இல்லை என்னாது கொடுத்து உதவிய நமது ஜென்ம தேசம்—அநேக விஷயங்களில் உலகத்திற்கே மகுட மணியாக விளங்கிய நமது தவத் தாய்நாடு—அருளுடைய தவ மக்கள், அறிவுடைய மேன் மக்கள், ஆவேசமுடைய வீர மக்கள், ஆற்றலுடைய அரிய மக்கள், ஆயிரம் ஆயிரமாக அவதரித்து, அவனிக்கே அறிவுச் சுடர் அளித்த அருமைத் திரு நாடு—"தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த நாடு"—உலகத்திற்கே உணவளித்த நாடு, இப்பொழுது அடிமைப்பட்டு, அளவற்ற தரித்திரத்தை அடைந்து அவஸ்தையுறுகின்றது. உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டு, மலேயா, பீஜி, தென்னாப்பிரிக்கா, கானடா முதலிய தேசங்களுக்குப் போய் வயிறு வளர்க்கும் நமது சகோதரர்கள் நாழி அரிசிக்காகப் படும் பாட்டை அயல்நாட்டினர்கள் கண்டு நமது புராதனப் புனித வாழ்க்கையையும், நமது பண்டைப் பலப்பல பெருமைகளையும் அறவே மறந்துவிட்டு, கோடி கோடிப் பவுன் பெறும் எவ்வளவோ வஸ்துக்களை எத்தனையோ தேசங்களுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்த விஷயத்தைக் கவனிக்காது, நம் தேசத்தைக் கூலிக்கார தேசம் என்று அழைப்பதிலிருந்து தேசம் அடைந்திருக்கும் சீர் கேடான நிலைமையை ஒரு வழியில் நாம் அறிகிறோம். 18 நூற்றாண்டுகளுக்கு முன் நம் நாட்டிற்கு வந்து சென்ற பிளினி, டாலமி, பெரிப்ளஸ், ஸ்ட்ராபோ முதலிய அயல்நாட்டார்கள் எழுதிய குறிப்புகளில் நமது வாணிபத்தை மெச்சி

தவும் சிலாகித்திருக்கிறார்கள். "இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பண்டங்கள் ரோம் ராஜ்யத்தில் நூறு மடங்கு அதிக விலைக்கு விற்கப்பட்டன" என்று பிளினி கூறுகிறார். இவ்விதமாக முற்காலத்தில் அருமையான, ஆச்சரியமான இயற்கைப் பொருள்களையும், அயல் நாடுகளுக்கு அளித்து, இயற்கை வளங்களெல்லாம் நிரம்பிப் பொன் கொழிக்கும் பூமியாக விளங்கிய நமது பரத கண்டம், இப்பொழுது எல்லாத் தேசத்துச் சாமான்களும் விற்கும் சந்தையாகி விட்டது. ஒவ்வொரு தேசத்திற்கும் விவசாயமும் கைத்தொழிலும் வாணிபமுமே ஜீவ நாடிகள். நமது நாடோ விவசாய நாடு. இந்தியாவில் முக்கால் பங்குக்கு மேலாக ஜனங்கள் விவசாயத்தை ஆதாரமாகக் கொண்டு, அதனையும் விருத்தியாக்காது, கைத்தொழில், வியாபாரம் முதலியவைகளையும் கவனியாது வருவதால், செல்வம் வறண்டு, நாடு வறுமையுற்றுவிட்டது. போதாக் குறைக்கு அடிமையில் ஆழ்ந்து கிடக்கும் நம் தேசத்தை அயல் நாட்டினர்கள் சுரண்டிக்கொண்டு போகிறார்கள். கைத்தொழில் படுத்துவிட்டது; வாணிபம் சிறுத்துவிட்டது; அயல் நாட்டார் ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. நாட்டில் ஊக்கமில்லை; உற்சாகமில்லை; உறுதியில்லை; உழைப்பில்லை. அயர்லாண்டு தேச பக்தர் ஒருவர் கூறுகிறார் "கைத்தொழில் முயற்சியும், நமது ஊக்கத்தை வீணே போக்காமல் பயன்படுத்தும் துறைகளில் சாவதானமாய்த் தவறின்றிச் செலுத்தும் சாதனையும் உண்டானால், நமக்குத் தற்சமயத்தைக் காட்டிலும், நற்சமயம் முன் ஒரு பொழுதும் கிட்டவில்லை. எக் காரியத்திலும் அடுத்தடுத்து முயல்வதே எடுத்த காரியம் சித்தியாவதற்கு முக்கிய காரணம். வைராக்கிய சித்தராய் மாத்திரம் முயற்சி செய்துகொண்டு வருவோமானால் மற்ற தேசத்தாரைப்போலக் குறைவறச் சுகம் பெற்று வாழ்ந்து, சுயாதீனராகும் நிலைமை நமக்கு விரைவில் கிட்டும் என்று நம்புகிறேன்." ஆகவே நமது கேவலமான தற்கால நிலையை நீக்கி, முன் போல் உயர் பதம் பெற்றுய்யுமாறு, தேசாபிவிருத்திக்குரிய வழிகளைப் போதித்து, கைத்தொழிலும், வியாபாரமும் சாதாரண ஜனங்களைச் சீமான்களாக்குமென்றும் ஏழைகள் பிழைக்க வழிகள் உண்டாகும் என்றும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்களுக்கு நூதன உற்சாகம் கொடுக்க வேண்டியது தேசாபிமானிகளின் கடமையாகும். இனிமேலாவது கைத்தொழிலபிவிருத்தியை நாடி, மூலதனம் சேகரித்து, கைத்தொழில், கூட்டு வியாபாரக் கம்பெனிகள் ஏற்படுத்தி, "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றபடி பல சீமைகளுக்குச் சென்று, நமது நாட்டுச் சரக்குகளை அயல் நாடுகளுக்கு அனுப்பி, ஒற்றுமை விரதம் பூண்டு, வீண் விவகாரங்களையும், பொதுக் காரியங்களில் ஜாதி, மதம், கட்சி முதலிய பேதங்களை

ஜான் மில்டன்.

திரு. E. பரமசிவம் அவர்கள், B. A.

ஆங்கில இலக்கிய பீடத்தில் ஷேக்ஸ்பியருக்கு அருகில் இரண்டாவதாக வைத்துப் பூஜிக்கப்படுபவர் ஜான் மில்டன். தாய் மொழியில் அழியாத் தன்மையுள்ள பெருங் காவியங்கள்

யும் ஒழித்து, தேசாபிமானம் பூண்டு, தேசாபிவிருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக் கருதிப் பாடுபடவேண்டியது ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும். இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் உழைத்தால்தான் இந்திய நாடு பண்டைச் சிறப்படைந்து விளங்கும்.

நம் நாட்டில் பரவியிருக்கும் அவநம்பிக்கைத் தன்மையே கூட்டுத் தொழிலின்மைக்கு முக்கியமாயிருக்கிறது. நம்பிக்கையின்மை என்ற இந்தக் குணம் போனலொழிய நம் தேசம் க்ஷேமமடையாது. கவனித்துப் பாருங்கள். மேன்மை அடைவோமென்ற நம்பிக்கையில்லாவிடில், ஒருவனுடைய வாழ்க்கை கஷ்டமாகவும், கனமாகவும், கசப்பாகவு மிருக்கும்.

இந்தியர்கள் உலக மாறுபாட்டையும் காலத்தின் கடும் வேகத்தையும் நன்கு கவனிக்கவேண்டும். ஒவ்வொரு தேசத்தின் அபிவிருத்தியையும் கூர்ந்து நோக்கவேண்டும். இந்தியாவின் பிற்போக்கைப் பார்க்கவேண்டும். நம் நாட்டில் விவசாயம் விருத்தியாக, கைத்தொழில் பெருக, வியாபாரம் முன்னேற, கொடுக்கல் வாங்கல் விசாலிக்க, செல்வம் சிறக்க வேண்டுமேயானல், இந்தியாவில் பலக் கூட்டுத் தொழில்களைச் செய்யப் பலரும் முன் வந்து, ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். எவ்வளவு சாமான்கள் அயல் நாடுகளிலிருந்து வீணாக இறக்குமதி செய்யப்படுகின்றன! எவ்வளவோ மூலப் பொருள்கள் இங்கு அறிவாரற்று அப்படியே கிடக்கின்றன! எப்பொழுது கூட்டுத் தொழில் ஒற்றுமையுடன் செய்யப்பட்டு, எவ்வளவோ சாமான்கள் இங்கு உற்பத்தியாகி அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறதோ அப்பொழுதுதான் நம் நாட்டில் பணம் தங்கி தேசம் செழிக்கும்.

ஆக்க வேண்டுமென்கிற ஆசை இளமையிலேயே இவரைப் பற்றிற்று. கவியரசன் கம்பன் இராமாயணம் இயற்றித் தமிழணங்கைச் சிங்காரித்திருப்பது போன்று மில்டனும் இரு புராணங்கள் பாடி, ஆங்கில பாஷையை அலங்கரித்திருக்கிறார். இவர் பால்யத்திற் கொண்ட கருத்திற்குப் பல இடையூறுகள் நிகழ்ந்தும் கோரிய நோக்கத்தை நிறைவேற்றினர். செல்வமும், செல்வாக்கும் ஒருங்கே நல்கும் பல தொழில்கள் இவரைக் கூவியழைத்தன. அவற்றையெல்லாம் புறக்கணித்துச் சிறு வயதிலிருந்து தான் விரும்பிய புலமைத் தொழிலை யேற்றுப் பெருவாழ்வு நடாத்திய பெருமை மில்டனுக்குத் தவிர மற்ற ஆங்கில இலக்கிய ஆசிரியர்களுக்குக் கிடையாது. ஷேக்ஸ்பியர், கோல்டுஸ்மித், ஜான்சன் முதலியோர் பொருள் ஈட்டக் கருதியே புத்தகமெழுதுந் தொழிலை மேற்கொண்டனர். மில்டனே தாய் பாஷையை உயர்த்த வேண்டுமென்ற ஒரே நோக்கங்கொண்டே புலவரானர். இப் புனிதப் புலவர் சரித்திரத்தைத் தமிழர் ஒவ்வொருவரும் அவசியம் அறிதல் வேண்டும்.

இளமை.

இங்கிலாந்தில் லண்டன் நகரில் 'சீப்சைடு' என்னுந் தெருவில் ஒரு நடுத்தரமான குடும்பத்தில் 1608-ம் ஆண்டில் ஜான் மில்டன் பிறந்தார். இவருடைய தந்தைக்கு தஸ்தாவேஜுகள் எழுதுந் தொழில். அதில் அவர் நல்ல ஊதியம் பெற்று வந்தார். மில்டனின் தந்தை அதிகச் சுதந்திர உணர்ச்சியுடையவர். அவர் கல்லூரியில் வாசித்துக்கொண் டிருக்கும்போது கத்தோலிக் மதத்தை விடுத்து, புராடெஸ்டண்டு மதத்தைத் தழுவ விரும்பினர். கத்தோலிக் மதத்தில் நம்பிக்கை கொண்ட அவரது பிதா, மதம் மாறினல் சொத்துரிமையை இழக்க நேரிடுமென எச்சரித்தார். செல்வத்தில் சிந்தை செலுத்தாது அறிவினல் தூண்டப்பெற்றவராய்ப் புராடெஸ்டண்டு மதத்தைத் தழுவினர். மில்டனுடைய இரத்த நாடிகளிலும் அதே சுதந்திர உணர்ச்சி துடித்தோடுவது புலனகும்.

மில்டன் தனது வீட்டிற் கருகிலிருந்த செயிண்ட் பால் பள்ளியில் கல்வி பயின்றார். அதன் ஆசிரியர் அலக்ஸாண்டர் கில் என்பவர். இவர் மில்டனுக்கு லத்தீன், கிரீக், ஹீப்ரு பாஷைகளில் விருப்பத்தை யுண்டுபண்ணினர். ஒருநாள் இவரது வகுப்பில் பைபிலிலுள்ள சங்கீதத்தில் சில வசனங்கள் வியாக்கியானத்திற்குக் கொடுக்கப்பட்டன. மாணவர்கள் பலரும் பலப்பல விதமான அர்த்தம் எழுதியிருந்தனர். அவைகளில் மில்டன் எழுதியிருந்த வியாக்கியானமே மிகவும் பொருத்தமுடையதென்று ஆசிரியரால் மிகவும் போற்றப்பட்டது. சிறு பிள்ளையிலேயே கவி பாடும் திறமை மில்

டனுக்கு இல்லாவிடினும் கல்வியில் ஆழ்ந்த கருத்துடையவராகக் காணப்பட்டார். மில்டன் ஒரு சமயம் "நான் பன்னிரண்டு வயதிற்குமேல் பன்னிரண்டு மணிக்குள் படுக்கைக்குச் சென்றதில்லை" எனப் பகன்றார். இவ்வுரை இவர் இளமையிலிருந்தே நூலாராய்ச்சியில் ஆர்வமுடையவர் என்பதைத் தெற்றென விளக்குகிறதல்லவா?

மில்டன் தனது பதினாறாவது வயதில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த கிறிஸ்து கல்லூரியில் சேர்ந்தார். இவரது தோற்றப் பொலிவையும் அறிவின் விரிவையும் ஒழுக்கத்தின் உயர்வையுங் கண்ட மாணவர்களும் ஆசிரியர்களும் இவரை நன்கு மதித்து நேசித்துவந்தார்கள். அன்பின் மிகுதியால் மாணவர்கள் அவரைக் கன்னியரி (Lady of Christ) எனப்பட்ட பெயரிட்டு அழைத்தனர். கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போது தன் இருபத்தோராவது வயதில் 'இயேசுவின் ஜனனம்' (Christ's Nativity) என்ற கவி புனைந்தார். அதற்கடுத்த வருடம் சர்வகலாசாலைப் படிப்பை முடித்து எம்.ஏ. பட்டம் பெற்றார்.

ஹார்டன் காலம்.

மில்டனது தந்தை தனது வயோதிகப் பருவத்திற் சுகவாசத்திற்காக லண்டன் நகருக்கு 17 மைல் தூரத்திலுள்ள ஹார்டன் என்னுங் கிராமத்தில் நிலம் வாங்கி அங்கே குடியேறினார். சர்வகலாசாலைக் கல்வி முடிந்தவுடன் மில்டன் ஒரு தொழிலையும் மேற்கொள்ளாது அக் கிராமத்திற்குச் சென்று வதியலானார். இவர் இங்கிலாந்துக் கோயிலி (Church of England)ல் ஒரு பிஷப்பாக வேண்டுமென்பது பெற்றோரின் உள்ளக்கிடக்கை. ஆனால் மில்டனோ அத் தொழிலை அதிகம் வெறுத்தார். அக் காலத்து அரசனும் பிரபுக்களும் மதுவுண்டு மயங்கி ஆடல்பாடல்களில் தங்கள் காலததைக் கழித்துச் சீர்கெட்ட நிலைமையிலிருந்தனர். "அரசன் எப்படியோ குடிகளும் அப்படியே" என்றபடி ஜனங்களும் அரசனைப் பின்பற்றியொழுகினர். கோயிற் குருக்கள் இறைவனுக்கு இடித்துரைத்து சன்மார்க்கத்தில் உய்விக்க முன்வரவில்லை. கோயில் மதாச்சாரியர்கள் அரசனால் நியமிக்கப்பட்டதால் தங்கள் தொழிலைக் காப்பாற்றக் கருதி, மன்னன் முனிவிற்கு இலக்காகாதபடி நடந்துகொண்டார்கள். சேவா விருப்பம் நிறைந்த மில்டன் நாட்டுக்குத் தொண்டுசெய்ய முடியாத நிலைமையிலிருந்த இங்கிலாந்துக் கோயில் பிஷப் வேலையை வெறுத்தது சரியல்லவா?

மில்டன் வக்கீல் வேலைக்குப் படிக்க நினைத்ததுண்டு. ஆனால் அவ் வெண்ணத்தையும் ஏனோ விடுத்தார். இவ்விதம் இவருக்கு

ஒரு தொழிலிலும் மனஞ் செல்லாததற்குக் காரணம் சிறு வயதிலேயே இவர் தன் வாழ்வின் நோக்கத்தை யறிந்துகொண்டதேயாகும். தான் உலகில் தோன்றியது புலவனாகிப் பிரகாசிப்பதற்கே என்ற எண்ணம மில்டனின் மனத்தில் சதா கனவிலும் நனவிலுமிருந்து இவரது வாழ்வை உருவகப்படுத்தியது. சங்கீதம், இலக்கியம் ஆகிய கலைகளில் இவருக்கு இயற்கை யன்னை நல்ல சக்திகளையளித்திருந்தாள். கலாசாலைக் கல்வியினால் இக் கலைகளில் நல்ல பாண்டித்தியமும் பெற்றார். சர்வகலாசாலைப் பட்டம் பெற்ற பின்னரும் போதிய செல்வமிருந்ததால் ஏதாவது தொழிலைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. எனவே சந்தர்ப்பமும் இவரது நோக்கத்தைப் பூர்த்திசெய்ய ஊக்கியது. இவர் புலமையைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தோ மிகவும் உன்னதமானது. ஒரு கவிஞன் மனத் தூய்மையுடையவனாகவும் ஆழ்ந்த நூலாராய்ச்சியுடையவனாகவும் இருக்க வேண்டுமென்பது மில்டனின் கருத்து. இக் கருத்திற்கிணங்கப் புலவராக விரும்பிய மில்டனும் ஹார்டனில் ஒழுக்கத்தை உயிராகக் கருதி அல்லும் பகலும் புத்தக ஆராய்ச்சியிலேயே தனது காலத்தைப் பயன்படுத்திவந்தார். கண்ட கண்ட புஸ்தகங்களையெல்லாம் படியாது, நல்ல நூல்களைப் பொறுக்கி எடுத்து அவைகளை ஊன்றிப் படிப்பது இவரது வழக்கம். தினந்தோறும் உலவச் சென்று இயற்கை யழகைக் கண்டு களித்துவந்தார். சங்கீதப் பிரியராகையால் லண்டனுக்குச் செல்லும்போதெல்லாம் நாடகத்திற்குச் செல்லுவதுண்டு. இவ்விதம் இவர் ஹார்டன் கிராமத்தில் பெருங் கவியாக வேண்டுமென்ற விருப்பங்கொண்டு தன்னைத் தயார்செய்துகொண்டிருந்தார்.

இக் காலத்தில் மில்டனிடம் நறுமணங் கமழும் பாக்கள் சில அரும்பின. அவை, லலா குரோ, இன் பென்ஸரோஸோ, கோமஸ், லிஸிடஸ் என்பவைகளாகும், 'லலா குரோ'வும், 'இன் பென்ஸரோஸோ'வும் நாட்டுப்புறத்தில் ஒருவன் இயற்கை யழகைக் கண்டு களித்தல், புத்தகம் படித்தல், குற்றமற்றிருத்தல் முதலிய இன்பங்களைப்பற்றிக் கூறுகின்றன. இவைகளில் இயற்கை வர்ணனைகள் மிகுந்து விளங்குகின்றன. 'கோமஸ்' என்ற மாஸ்க்கை 1634-ம் ஆண்டு ஒரு நண்பரின் வேண்டுகோளுக்காக எழுதினார். ஹென்றி லாஸ் என்பவர் மில்டனுடைய சிநேகிதரும், பிரபல சங்கீத வித்துவானுமாவர். பிரிட்ஜ்வாடர் பிரபு வேல்ஸ் தேசத்துப் பிரஸிடெண்டாக நியமனம் பெற்றதைக் கொண்டாடுவதற்காக லாஸ் மில்டனை ஒரு மாஸ்க் எழுதும்படி வேண்டிக்கொண்டார். 'மாஸ்க்' என்பது சங்கீதமும், சீன்களும் நிறைந்து, சம்பாஷணை ரூபத்திலமைக்கப்படும் ஒரு சிறு கதை. இது உற்சவ காலங்களில் நடிக்கப்பட்டு

வந்தது. மில்டன் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றக் கருதி 'கோமஸ்' என்ற மாஸ்க்கை எழுதியனுப்பினார்.

'கோமஸ்' மில்டனின் முக்கிய கொள்கையைத் தன்னகத்துக் கொண்டிருப்பதால் இதன் சாரத்தை அறிதல் அவசியமாகும். சகோதரர்களிருவர் தங்கள் சகோதரியோடு ஒரு கானகத்தின் வழியாகப் பிரயாணஞ் செய்யும்போது சாயங்கால வேளையாகிறது. அவ் விளநங்கை தன் தாகத்திற்குத் தண்ணீர் கேட்க, அவளை ஒரு மரத்தடியிலிருத்தி நீர் நிலை தேடிச் சகோதரன் செல்லுகிறான். கதிரவன் மறைந்து காரிருள் சூழ, சகோதரி யிருக்குமிடந் தெரியாது திகைக்கின்றனர். அம் மடமான் அக் கானில் உறையா நின்ற 'கோமஸ் என்னுங் கொடியோன் வசப்படுகிறாள். அவன் அவளைத் தன் இச்சையைப் பூர்த்திசெய்யும்படி நிர்ப்பந்தப்படுத்துகிறான். அவ் விளமாது அவன் கருத்திற் கிணங்காது, கன்னி நிலை கலங்காது தனது கற்பைக் கடவுள் காப்பார் என்னுந் திடமான நம்பிக்கை கொண்டு, அவனை நல்ல வழிப்படுத்த முயன்றுகொண்டிருக்கிறாள். இத் தருணம் வன தேவதையின் உதவியால் அவளது சகோதரன் அவளை ஆபத்தினின்றும் விடுவித்து இனிதே தங்கள் ஊர் அடைகின்றனர். இறைவன் அறம்புரிவோரை ஆதரித்து மறம்புரிவோரை ஒறுக்கிறார் என்னும் மில்டனின் முக்கியமான கொள்கை 'கோமஸ்' என்னும் மாஸ்க்கில் மிளிர்கிறதைக் காணலாம்.

1637-ம் வருடம் 'லிஸிடஸ்' என்னுங் கவி இயற்றப்பட்டது- எட்வர்ட் கிங் என்பவர் கேம்பிரிட்ஜில் படித்துக்கொண்டிருந்த புலமை வாய்ந்த மாணவர். மில்டனுக்கும் இவருக்கும் அறிமுகமுண்டு. எட்வர்ட் கிங் அயர்லாந்து சென்று திரும்பி வரும்போது கப்பலுடைந்து கடலில் மாண்டார். அவர் மரணம் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைக்குக் கவலையை யுண்டுபண்ணிற்று. அவரை வியந்த பலரும் பல பாக்கள் எழுதினார்கள். மில்டனும் வெந்திரை விழுங்கிய எட்வர்ட் கிங்கைப்பற்றிப் பாமாலை தொடுத்து அனுப்பினார். இரு நண்பர்களாகிய ஆட்டிடைய ரிருவர் இறந்து பட்டால் மற்றொருவர் அவரது பிரிவாற்றாது வருந்துவதுபோன்று எட்வர்ட் கிங்கை ஆட்டிடைய நண்பராகப் பாவித்து மில்டன் 'லிஸிடஸி'ல் துக்கிக்கிறார்.

ஐரோப்பாச் சுற்றுப் பிரயாணம்.

ஒரு மாணவனின் கலாசாலைப் படிப்பு முடிந்தவுடன் அவன் பூகோளத்தைச் சுற்றிப் பிரயாணஞ் செய்வதால்தான் அவனது கல்வி பூர்த்தியாகுமென்று மேனாட்டார் கருதுவது போற்றத்தக்கதேயாகும். எம்.ஏ. பட்டம் பெற்ற மில்டனும் இதாலி, கிரீஸ் முதலிய தேசங்களைப் பார்த்துவர விழைந்தார். இவ்விரு இடங்களே சகல மேனாட்டுக் கலைகளுக்கும் பிறப்பிடம். நடுக் காலத்திலும் ஐரோப்பா அந்தகாரத்தில் மூழ்கிக் கிடந்தபோது, கல்வியில் ஆர்வத்தை யெழுப்பிச் சீர்திருத்த உணர்ச்சியை உண்டாக்கிப் புத்துயிர் அளித்த பெருமை இவைகளுக்குண்டு. ஆகையால் இவைகள் மேனாட்டாரால் பண்டைப் பெருமைக்கு இன்னும் மதிக்கப்பட்டு அறிவாளிகளால் யாத்திரை ஸ்தலங்களாகக் கருதப்பட்டு வருகின்றன. 1637-ம் வருஷம் மில்டன், தந்தையிடம் செலவுக்குப் பணம் பெற்று, ஐரோப்பாவிற்குப் பிரயாணமானார். பிரான்ஸ், இயற்கை வனப்பு மிகுந்த சுவிட்ஜர்லாந்து முதலிய நாடுகளின் வழியாக இத்தாலி தேசத்தை யடைந்து, அங்குள்ள வெனிஸ், ரோம், பிளாரன்ஸ் முதலிய பண்டைச் சிறப்பு வாய்ந்த நகரங்களைப் பார்த்தார். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பாகையால் ஆங்காங்குள்ள அறிவாளிகள் இவ் வாலிபரின் கல்வியறிவை வியந்து வரவேற்றனர். பூமி யுருண்டையென்ற உண்மையை உய்த்துணர்ந்து உலகிற்குக் கூறிய கலிலோவை அந் நாட்டு அரசாங்கத்தார் மதத் துரோகி யெனக் குற்றஞ்சாட்டி, பிளோரன்ஸ் நகரச் சிறையில் அடைத்து வைத்திருந்தனர். மில்டன் அவரைப் பேட்டிகண்டு பேசினார். இத்தாலியர்கள் தங்கள் நாட்டு இதிகாச புராணங்களை வியந்து பேசிப் பெருமை கொண்டதை மில்டன் உணர்ந்தார். தானும் இங்கிலாந்தைப் போற்றிப் பெருமை கொள்ளும் ஓர் காவியம் எழுதவேண்டுமென முடிவுசெய்தார். இத்தாலியிலிருந்து கிரீஸ் தேசத்திற்குப் பயணப்பட்டார். இங்கிலாந்திற் குடிகளுக்கும் அரசனுக்கும் போர் என்ற செய்தி நடுவழியில் எட்டியவுடன் "என் நாட்டார் அரசனின் கொடுங்கோன்மையை ஒழித்துச் சுதந்திரம் பெற இரத்தஞ் சிந்திக்கொண்டிருக்கும்போது நான் அறிவு வளர்ச்சிக்கு உல்லாசமாகப் பிரயாணம் செய்துகொண்டிருப்பது இழிவு" என மில்டன் கருதித் தாய்நாடு திரும்பினார். இவரது தேசாபிமானந்தான் என்னே!

இடைக்காலம்.

மில்டன் தாய்நாடு திரும்பியவுடன் தேசீயப் பணியில் இறங்க அவசியம் ஏற்படவில்லை. லண்டனில் தங்கி முன்போலவே நூலாராய்ச்சியில் தன் கவனத்தைச் செலுத்தினார். அத்துடன் தனது சகோதரியுடைய இரு குழந்தைகளுக்குங் கல்வி புகட்டிவரலானார். உபாத்திமைத் தொழிலில் பிரியம் உண்டாகவே இன்னுஞ் சில பையன்களுக்கும் பாடம் கற்பிக்க இசைந்தார். இக் காலத்திலேதான் கல்வியின் சீர்திருத்தத்தைப்பற்றி ஒரு கட்டுரை (Tract on Education) வரைந்தார். ஒருவனுடைய ஒழுக்கத்தையும் அறிவையும் வளர்த்து அவனைத் தன் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் உபயோ

கமுள்ளவனாகச் செய்வதே கல்வியின் நோக்கமென அதில் கூறியிருக்கிறார். நம் நாட்டில் அரசாங்கத்தை நிர்வஹிப்பதற்கு ஆட்கள் உற்பத்திசெய்வதையே முதல் நோக்கமாகத் தற்காலக் கல்வி முறை அமைக்கப்பட்டிருப்பது சரித்திர வுண்மை. நம் தேயத்துப் பெற்றோரும் கானல் நீராகிய உத்தியோகத்தையே குறிக்கொண்டு, ஏராளமான பொருட் செலவில் மக்களைப் படிக்கவைத்து முடிவில் ஏமாறுகின்றனர். ஆகையால் இலக்கியக் கல்வியை மாத்திரம் அளித்து, படித்தவர்களுக்குள் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தாமல், தொழிற் கல்வியின் அவசியத்தை யுணர்ந்து நாட்டிற்குப் பயன்படும்படியான கல்வி முறையைச் சீர்திருத்தி யமைப்பது அரசாங்கத்தின் முதல் வேலையாகும்—முக்கிய கடமையாகும்.

மண வாழ்வு.

1643-ம் ஆண்டு மில்டன் அரச கட்சியைச் சேர்ந்த பதினேழு வயதுடைய **மேரி பவுல்** என்கிற ஒரு படியாத நாட்டுப்புற மங்கையைத் தனது முப்பத்தைந்தாம் வயதில் மணந்தார். இம் மணத்தால் மில்டனுக்கு இன்பந் துய்க்கவில்லை. மேரி பவுல் கணவன் இல்லத்திற்கு வந்த ஒரு மாதத்திற்குள் மில்டனோடு சச்சரவு செய்துகொண்டு தகப்பன் வீடு சென்று திரும்பிவர மறுத்துவிட்டாள். ஒத்த நலனும், ஒத்த கல்வியுமுள்ள தம்பதிகள் யாதொரு மனவேற்றுமையுமின்றி, மலரும் மணமும்போல் ஒன்றுபட்டு வாழின் மணவாழ்வில் இன்பமுண்டு. மேரி பவுலோ அரச கட்சியாகிய எதிர்க் கட்சியைச் சேர்ந்தவள்; கல்வியில்லாதவள்; உயரிய நோக்கமற்றவள். மேலுந் தன் மனைவியின் மனப்போக்கை யறிந்து நடந்துகொள்ளுவதற்கு மில்டனும் அசக்தராயிருந்தார். மாறுபட்ட தன்மையுள்ள மில்டனுக்கும் மேரி பவுலுக்கும் மனப் பிணக்கேற்பட்டது இயல்பே.

மேரி பவுல் திரும்பிவர மறுக்கவே மில்டனுக்கு அவள்மீது அளவற்ற வெறுப்புத் தோன்றியது. அவளை நீக்கிவிட்டு வேறு மணஞ்செய்யக் கருதினார். ஆனால் அக் காலத்தில் விவாக ரத்துச் செய்யும் வழக்கம் கிடையாது. சட்டமும் அதற் கிடங்கொடுக்கவில்லை. பொதுஜன அபிப்பிராயத்தை விவாக ரத்திற்குச் சாதகமாகத் திருப்பவும், அதைச் சட்டபூர்வமாகப் பாராளுமன்றத்தைத் தூண்டவும் கருதி ஒரு துண்டுப் பிரசுரம் விடுத்தார். கணவன் நோக்கத்தை யறிந்த மேரி பவுல் திகிலடைந்து **1645**-ம் ஆண்டு மில்டனிடம் லண்டனுக்கு வந்து முழங்காற்படியிட்டு மன்னிப்பு வேண்ட அவரும் மன்னித்து உவந்து ஏற்றுக்கொண்டார். இவ்

வம்மை மூன்று பெண் மகவுகளைப் பெற்று **1652**-ம் வருடம் உயிர் நீத்தார். பெண்கள் சிறுமிகளா யிருந்ததால் மறுமணஞ் செய்தார். அவ் வம்மையும் ஓராண்டு கழித்து மாண்டார். அதன்பின் கொஞ்சக்காலம் விவாகமின்றியிருந்து வசதிக் குறைவால் **1663**-ம் வருடம் மூன்றாம் முறை மணந்தார். இம் மாது கொழுநனைப் பேணும் உத்தமி. குருடரும் வயோதிகருமான மில்டனை நன்கு உபசரித்தாள். ஆனால் மில்டனின் மண வாழ்வை முழுமையும் நோக்கும்போது சந்தோஷகரமாகத் தோன்றவில்லை. ஏனெனில் அதற்குப் பின்தான் பல கஷ்டங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வரத் தொடங்கின. கலியாணத்திற்குப் பின் இவரது ஜீவியமாகிய மரக்கலம் கொந்தளிப்புள்ள கடலில் சென்றதெனக் கூறலாம்.

அரசியலில் இறங்கல்.

குடியரசுக் கட்சியில் அனுதாபங் கொண்டிருந்த மில்டனுக்கு **1649**-ம் வருடம் நாட்டுச் சேவை செய்ய ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது. பெரும் படைத்தலைவரும், அரசியல் நிபுணருமான **கிராம்வெல்லின்** தலைமையின்கீழ் குடியரசுக் கட்சி அரசகட்சியைப் போரில் புறங்காட்டி யோடச்செய்து வெற்றிபெற்றது. கொடுங்கோல் மன்னனாகிய முதலாவது சார்லஸ் கழுவேற்றப்பட்டு இங்கிலாந்தில் குடியரசு ஸ்தாபனமானது. அக் காலத்தில் அரசன் ஆண்டவன் பிரதிநிதியென்றும் அவன் ஆணையே ஆண்டவன் ஆணையென்றுங் கருதப்பட்டு வந்தது. ஐரோப்பாவிற்குத் தப்பியோடிய முதலாவது சார்லஸின் தம்பியாகிய இரண்டாவது சார்லஸும், அரசனைச் சார்ந்த பிரபுக்களும் அங்கு பகிரங்கமாகவும், உள்நாட்டில் இரகசியமாகவும் குடியரசுக் கட்சியின் செயலையும், குடியரசையுங் கண்டித்து, பலத்த பிரச்சாரம் செய்துவந்தார்கள். குடியரசுக் கட்சிக் குடிகளும் மன்னனைக் கொன்றது குற்றமோவென்று அஞ்சத் தொடங்கினர். இச் சமயம் அரசியல் வானத்தில் ஒரு ஜோதி தோன்றிப் பொதுஜனங்களை உற்சாகித்தது. 'அரசர்கள், நியாயாதிபதிகளாகியோரின் காலம்' (The Tenure of Kings and Magistrates) என்னும் ஒரு சிறு நூலை மில்டன் எழுதி வெளியிட்டார். அதில் கொடுங்கோல் மன்னனாகிய முதலாவது சார்லஸைக் கொன்றது நியாயமென ரூபித்தும், குடியரசு ஸ்தாபனத்தை ஆதரித்தும், ஜனங்களுக்குத் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் ஊட்டினார். இதனால் மில்டன் பொதுஜனங்களின் அன்பைப் பெற்றுப் பெரிய அறிவாளியென மதிக்கப்பட்டார்.

அக் காலத்தில் மேனாட்டில் லத்தீன் பாஷை மிகவும் போற்றப்பட்டு வந்தது. இப் பாஷை தெரிந்தோரே கற்றோராகக் கருதப்பட்டனர். ஐரோப்பிய தேசங்களின் அந்நிய நாட்டு நடவடிக்கைகள் லத்தீன் பாஷையில்தான் நடைபெற்றன. மில்டன் சில ஐரோப்பியப் பாஷைகளிலும், லத்தீனிலும் தேர்ச்சியுடையவராகயிருந்ததாலும் 'அரசர்கள், நியாயாதிபதிகள் ஆகியோர்களின் காலம்' என்ற புஸ்தகமெழுதி ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றிருந்ததாலும், குடியரசு அரசாங்கத்தில் துவிபாஷகராக 1649-ம் ஆண்டு நியமனம் பெற்றார். அந்நிய நாட்டுத் தபாலைக் கவனித்தலும், பிறநாட்டுத் தூதர்களுக்குக் குடியரசுத் தலைவர்கள் பேட்டிகொடுக்கும்போது மொழிபெயர்ப்பதும் மில்டனுடைய வேலை. அத்துடன் ஓர் குடியரசுப் பத்திரிகைக்கும் ஆசிரியராயிருந்து அரசாங்கத்திற்கு ஒரு பேராணை விளங்கினார். இவருக்குச் சம்பளம் வருடத்திற்கு முன்னூறு பவுன்.

இரண்டாவது சார்லஸின் தூண்டுதலால் லத்தீன் பாஷையில் வல்லுனரான லாஸ்மஸியஸ் என்ற ஒரு கல்லூரி யாசிரியர் அரசனை யாதரித்தும் குடியரசை யிகழ்ந்தும் ஒரு நூலெழுதி, 1649-ம் ஆண்டு ஐரோப்பாவில் வெளியிட்டார். அது இங்கிலாந்திற்குள் வாராமல் தடுக்கப்பட்டது. குடியரசுத் தலைவர்கள் அதற்கு மறுப்பெழுதக் கேட்க, அவ்விதமே மில்டன் "இங்கிலாந்துக் குடியரசு மறுப்பு" என்ற லத்தீன் நூலை 1651-ம் ஆண்டு பிரசுரித்தார். இதிற் குடியரசின் நன்மைகளை ஐரோப்பாவிற்கு எடுத்துக் காட்டாமல் லாஸ்மஸியஸை திட்டி யெழுதினதால் ஒரு பயனும் ஏற்படவில்லை. 1660-ம் வருடம் லாஸ்மஸியஸ் மில்டனைப் பலவாறாகத் தூஷித்து ஒரு மறுப்பெழுதினார்.

மில்டன் பால்யத்திலிருந்து கண்களுக்கு அதிக வேலை கொடுத்துவந்தார். அரசியல் வாழ்வில் இறங்கியபின் அன்னிய நாட்டுத் தபாலைக் கவனித்து வந்ததுடன், குடியரசின் எதிரிகளுக்கு மறுப்பெழுதும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டதால் நேத்திரங்களுக்கு மிதமிஞ்சிய வேலை ஏற்பட்டது கண்களில் நீர் வடிந்து வலியுண்டானபோது, டாக்டர்கள் கண்களுக்கு அதிக வேலை கொடுக்கக் கூடாதென்று தடுத்தார்கள். அதற்கு அவர் "தேசத் தொண்டு புரியுமாறு என்னுள்ளத்தைத் தூண்டும் ஆண்டவன் ஆணையை அவமதித்து வைத்தியர்கள் சொல்லுவதைக் கேளேன்" என விடைவிடுத்தார். 1650-ம் ஆண்டு இடது கண் கெட்டது. ஈராண்டுகள் சென்று மறு கண்ணும் மறைந்தது. இவ்வாறு மில்டன் தனது நாற்பத்திரண்டாம் வயதில் இரு நேத்திரங்களையும் பறிகொடுத்ததைப்பற்றி எவரும் வருந்தாமலிருக்க முடியாது. என்றபோதிலும்

குடியரசு ஒழியும்வரை இவர் துவிபாஷிப் பதவியை யிழக்கவில்லை. இவருக்கு உதவியாக இருவர் நியமிக்கப்பட்டனர்.

முடியரசைப் பார்க்கிலும் குடியரசு எவ்வளவோ சிலாக்கியமானதாக இருந்தாலும் 17-ம் நூற்றாண்டு அதற்குப் பண்பட்டிருக்கவில்லை. அரசன் இறைவனது பிரதிநிதி என்கிற மூடக் கொள்கை மக்கள் மனதை விட்டகலவில்லை. 1658-ம் வருஷம் பெருஞ் சேனாதிபதியும், அரசியல் நிபுணரும் குடியரசுத்தலைவருமாகிய கிராம்வெல் இறந்தவுடன் குடியரசிற்குச் சாவுமணி யடிக்கப்பட்டது; இதற்குப் பின்பு வந்த ஜனநாயகத் தலைவர்கள் அவ்வளவு திறமை வாய்ந்தவர்களாயில்லை. குடியரசுக் கட்சிக்குள் பல பிளவுகள் தோன்றவே அரச கட்சி வலுக்க ஆரம்பித்தது. 1660-ம் ஆண்டு ஐரோப்பாவில் உறைந்து வந்த இரண்டாவது சார்லஸை இங்கிலாந்துக் குடிகள் அழைத்து முடிசூட்டினார்கள். அதுகாலை குடியரசுக்கட்சித் தலைவர்கள் பலர் கழுவேற்றப்பட்டனர். மில்டன் ஒரு நண்பரின் உதவியால் உயிர் பிழைத்தார்.

மில்டனின் அரசியல் சேவையால் நீடித்த பலன் ஒன்றும் ஏற்படவில்லை. இவர் நிலை நிறுத்தக்கருதிய குடியாசே கவிழ்ந்து முடியரசு எழுந்தது. மில்டன் ஒரு கவியாக வேண்டுமென்றே கல்லூரியில் கற்றார். சர்வகலாசாலையை விட்ட பின்பும் ஒரு தொழிலிலும் இறங்காது ஹார்ட்டன் கிராமத்தில் ஓய்வு உறக்கமின்றிப் படித்துத் தன்னைத் தயார்செய்து கொண்டிருந்தார். இவர் இத்தாலி தேசத்திற் பிரயாணம் செய்த பொழுது அந்நாட்டார் தங்கள் டாண்டி யெழுதிய 'டிவைனா காமெடியா' போன்ற அரும் காப்பியம் ஆங்கிலத்திற் கிடையாதெனப் பெருமைபாராட்டிய சமயம், இங்கிலாந்து திரும்பியதும் உலகம் போற்றும் ஒரு காப்பிய மியற்றித்தன் பாஷையைச் சிறப்பிக்க வேண்டுமென்று கனவு கண்டார். இம்மேலான நோக்கங் கொண்டிருந்த மில்டன் திடீரென இதைக் கைவிட்டு அரசியல் வாழ்வில் இறங்கியது விசனிக்கத்தக்கதாகும். மில்டன் தனது நல்ல பிராயத்தில் இருபது ஆண்டுகளைத் தேசீய வாழ்வில் வீணாக்கினாரென்றே சொல்லவேண்டும். கவிதா உற்பத்திக்கு அவகாசமும், மனநிம்மதியும் இன்றியமையாதவை. இவை இரண்டையும் தேசீய வாழ்வில் கண்டல் அருமை: ஆகையால் இக்காலத்தில் நறுமணங் கமழும் பாமலர் ஒன்றும் மில்டனில் அரும்பவில்லை. இராஜிய வாழ்விற் குதியாது கவி புனைவதில் தனது அருங்காலத்தைக் கழித்திருப்பரேல், அநேக உயரிய காப்பியங்கள் இயற்றி ஷேக்ஸ்பியருக்கு மேலான கவியெனா இவர்தம் புகழை நாட்டிச் சென்றிருக்கலாம். இடைவிடா வேலையினால் தன் இரு நேத்திரங்களையும் இழக்க வேண்

டிய துர்ப்பாக்கியமும் நேர்ந்திராது. கீழ்மக்களோடு அரசியல் வாக்குவாதத்தில் இறங்கித் தன்னைத்தானே இழிவு படுத்திக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டிராது. எனவே புலவர்கள் இராஜிய வாழ்வில் இறங்குவது உசிதமல்லவென்றே சொல்ல வேண்டும். ரவீந்தரநாத்டாகூர் தேசியப்பணி செய்ய முன் வராது ஒதுங்கி நிற்பது போற்றத்தக்கது. இவர் அரசியலில் இறங்கியிருப்பரேல் 'கீதாஞ்சலி' என்ற உயரிய நூலை உலகுக்கீந்து உலக கவியெனப் புகழடைந்து 'நோபல்' வெகுமதி பெற்றிருக்க முடியாது.

இவ்விடத்தில் நம்பரதகண்டத்தின் பெருமையைப் பற்றிச்சில வார்த்தைகள் பகராமல் இருக்கமுடியவில்லை. தொன்று தொட்டு உலக முன்னேற்றத்திற்கு வழிகாட்டிய பெருமை நம்நாட்டிற்குண்டு. சரித்திர காலத்திற்கு முன் இப்புவி அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த போது ஐம்புலன் ஆட்சி கொண்டு இச்சையை அடக்கி மனதை அறிவின் வசப்படுத்தினால் இன்பம் ஜனிக்கும் என்ற உண்மை ஒளி புத்தரிடமிருந்தே பிற நாடுகளுக்குப் பரவிற்று. சென்ற நூற்றாண்டு பகவான் இராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும், நம் நாட்டில் தோன்றி மதத்தால் எழும் மதச்சண்டையை ஒழித்துப் பார்மிசை சமரச உணர்ச்சியை வளர்க்க எல்லா மதங்களும் கடவுளால் காட்டப் பட்ட வழிகளே என்ற உண்மையை உலகிற்கு ஊட்டினர். இப்போது ரவீந்தரநாத் டாகூர், மஹாத்மா காந்தி ஆகிய இரு ரத்தினங்களைப் பாரதமாதா தன் கிரீடத்தில் அணிந்து பெருமை கொண்டிருக்கிறாள். போல்ப் பூரில் அகிலவுலக சர்வகலாசாலையை நிறுவித் திறம்பட நடாத்தி அந்நிய நாட்டு மாணவர்களையும் அங்கு இழுத்துக் கொண்டிருக்கிறார். எவ்விதம் ஒட்டுமாமரம் இன்சுவையுள்ள பெருங் கனிகளைக் கொடுக்கிறதோ அவ்விதமே மேற்கித்திய சாஸ்திரத்தையும், நம் ஆத்மீகக் கலைகளையும் திரட்டி மாணவர்களுக்குக் கற்பித்து இம்மண்ணுலகில் புதிய நாகரீகத்தை உண்டாக்கி மேனாட்டார், கீழ் நாட்டார் என்ற வேற்றுமை உணர்ச்சியை அகற்றிச் சகோதர உணர்ச்சியை வளர்க்க 'விஸ்வபாரதி' சர்வகலாசாலையைக் கருவியாகக் கொண்டு உழைத்து வருகிறார். கல்வித் துறையில் உலகிற்கு இஃது ஒரு புதுமார்க்க மன்றோ? இவரது பரந்த நோக்கந்தான் என்னே! பல தேயங்களுக்கு ஒன்றின்மீது ஒன்று நம்பிக்கையின்றிப் படைகளையும், படைக்கலங்களையும் பெருக்கி உலகில் தரித்திரத்தை தாண்டவ மாடச்செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில் அஹிம்சையும், அஞ்சாமையும் அடிப்படையாகக் கொண்ட சத்தியாக்கிரகம் என்ற ஒப்பற்ற படைக்கலத்தைக் கண்டுபிடித்து போர் முறையில் புதுவழி காட்டுங் காந்தியடிகளை ஈன்றிருக்கும் நமது தாய்நாட்டின் பெருமைக்கு அளவுண்டோ?

கடைசிக் காலம்.

ஷேக்ஸ்பியர், ஜான்ஸன் முதலானோர் வாலிபத்தில் வருந்தி வயோதிகத்தில் இன்பமடைந்தனர். மில்டனோ வாலிபத்தில் சகல சௌகரியங்களுடன் வளர்ந்து முதுமையில் துன்புற்றார். கவி புனைவதை விட்டும் கண்களைத் தியாகஞ் செய்தும், சுதந்திரத்திற்காகப் போராடியுந் தன் நோக்கம் நிறைவேறாததால் மட்டற்ற மனோவியாகூலம் அடைந்தார். புது அரசாங்கத்தால் இவருடைய சொத்துக்களும் பறிமுதலாயின. ஆயினும் அவருக்கு உணவிற்கும் உடைக்கும் போதுமான ஆஸ்தி விடப்பட்டது, இந்நிலைமையில் தான் தன் வாழ்வின் நோக்கமாகிய காப்பியங்கள் எழுதுவதில் கருத்தைச் செலுத்தலானார். இம்மஹத்தான வேலைக்கு வசதிகள் மிகமிகக் குறைவு. மூன்றாம் மனைவி உள்ளன்புடன் பணிவிடை செய்த போதிலும் அவ்வம்மைக்கு எழுதப் படிக்கத் தெரியாததால் மில்டன் வேலையில் உதவி புரிய முடியவில்லை. முதல் தாரத்துப் பெண் மக்கள் இவருக்குப் புத்தகங்கள் வாசிக்கவோ, இவர் கூறு பவைகளை எழுதவோ உவந்து முன் வரவில்லை. மில்டன் நினைத்த போது பாமாரி பொழியுங் வரகவியல்ல; சில வேலை கவியூற்றுப் பெருக்கெடுத்தோடும்; சிலசமயம் அடைபடும். நடுநிசியிலும் மனதில் உதிக்கும் பாக்களை எழுதுவதற்கு தன் பெண்மக்களின் மூவரில் யாரையாவது எழுப்புவது உண்டு. தகப்பனின் உயரிய நோக்கத்தை உணரச் சக்தியற்ற அச்சிறுமிகள் துயிலைக்கலைத்துத் தொந்தரவு செய்த மில்டனை வெறுத்தனர். மில்டனை வியந்து பார்க்கவரும் வாலிபர்களும், குவாக்கர் மதத்தைச் சேர்ந்த எல்லுட் என்ற இவரது நண்பரும் வாசித்தும், எழுதியும் உதவிசெய்தனர். எனவே மில்டன் தனது 52-ம் வயதில் வாணாள் வேலையை முடித்து ஓய்வெடுக்க வேண்டிய காலத்தில் ஒரு வசதியுமின்றித் தன் வேலையைத் தொடங்கினார்.

“பறிகொடுத்த பரலோகம்” (Paradise Lcst) என்ற பைபிள் கதையைப் புராணமாகப் பாடக் கருதி, 1658-ம் வருஷம் எழுத ஆரம்பித்து ஏழு ஆண்டுகள் இடைவிடாது உழைத்து 1665-ம் ஆண்டு முடித்தார். மானிடரின் மூதாதையராகிய ஆதாமும் ஏவாளும் ஸ்வர்க்கத்தில் இருந்தனர். பிசாசின் பேச்சைக் கேட்டுக் கடவுளின் கட்டளையை மீறியதால் 'நெற்றி வியர்வை நிலத்தில் விழ வருந்தி உழைத்து வாழக்கடவீர்' எனச் சபிக்கப்பட்டு ஸ்வர்க்கத்தினின்றுந் துரத்தப்பட்டனர். விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாட்டில் உலக உற்பத்தியைக் கூறும் இக்கதையை அணிச் செறுக்குடன் கம்பீர நடையில் 'பறிகொடுத்த பரலோகம்' என்ற காப்பிய

மாகப் பாடியிருக்கிறார். இதற்கு மேலான புராணம் ஆங்கிலத்தில் கிடையாது.

'பறிகொடுத்த பரலோக'த்தைப் பார்வையிட்ட மில்டனின் ஆப்த நண்பராகிய எல்வுட் என்பவர் பரலோகம் மீண்டும் பெறலைப் பற்றி ஒரு புராணஞ் செய்யின் நலமென நவின்றார். அதைச் செவி மடுத்த மில்டன் "பரலோகம் மீண்டும் பெறல்" (Paradise Regained) என்ற புராணத்தை 1671-ம் வருடம் எழுதி முடித்தார். மானிடரைப் பாவத்தினின்றும் மீட்க அவதரித்த இயேசு பகவானின் திவ்ய சரித்திரம் இப் புராணத்தில் அடங்கியிருக்கிறது.

1671-ம் வருடத்தில் "சாம்ஸன் அகனிஸ்தீஸ்" (Samson Agonistes) என்ற நாடகமும் பிரசுரிக்கப்பட்டது. பெரும் பயில்வானாகிய ஸாம்ஸன் எதிலர் கையில் அகப்பட்டுக் கண்களைப் பறிகொடுத்து இன்னற்படுகிறான். பைபிளிற் காணப்படும் இக் கதையை மில்டன் கிரீக் நாடகத்தைத் தழுவி சோக முடிவு நாடகமாக (Tragedy) அமைத்தார். கண்ணிழந்த ஸாம்ஸனைப் போலவே, கபோதி மில்டனும் பகைவர் மத்தியில் உறைந்து கஷ்டப்பட்டதால், இந் நாடகத்தில் அவருடைய துயரம் பிரதிபலித்திருத்தல் காணலாம்.

விண்ணேகல்.

முதுமைப் பருவத்தில் ஓயா உழைப்பால் மில்டனின் உடல் நலம் குன்றவே சரீரத்தில் சார்ந்திருந்த சூலைநோய் வலுத்து 1674-ம் ஆண்டு இப்புவி விட்டுப்பிரிந்தார். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பதை மில்டன் மனதில் நிறுத்திப் பெரும் கவியாக விளங்க வேண்டுமென இளமை முதல் விரும்பிக்கல்வியில் ஆர்வஞ் செலுத்தினார். ஆனால் தேசீயச்சுழலில் மில்டன் அகப்பட்டு அப்புனித நோக்கத்தை நெடுங்காலம் மறக்க நேர்ந்தது. அவர் வயோதிகராகவும், குருடராகவும் ராஜிய வாழ்வைவிட்டு வெளியேறினார். அப்போது பெரும் காப்பியங்கள் இயற்ற வேண்டுமென்ற எண்ணம் மீண்டும் எழ, 'செயற்கரிய செய்வார் பெரியார்' என்பதற்கிணங்க இவர் பல கஷ்டங்களுக்கிடையில் மனஞ் சலியாது இரு பெரும் புராணங்களையும், ஒரு நாடக நூலையும் ஆக்கினார். இறுதிக்காலத்தில் இயற்றிய இந்நூல்களின் உயர்வால்தான் மில்டன் ஆங்கில இலக்கிய உலகில் இரண்டாவது இடம்பெற்றுத்திகழ்கிறார். 'எழுமின! விழிமின்!! கருதியகருமங் கைகூடும் வரை சலியாது உழைமின்'!!! என்று மில்டன் வாழ்வு உலகத்தைத்தட்டி யெழுப்பிக் கொண்டிருக்கிறது.

நாகரீகக் கொலை.

ஜனாப் S. சையது ஆமத் அவர்கள்.

இனத்தானையே "வெட்டு! கொல்லு!" என்பது அநாகரீக மனிதனின் சுபாவம். அங்கம் அங்கமாய் வெட்டிக் குவிப்பதும், உயிரோடு தீமூட்டி எரிப்பதும், கோடரி கொண்டு மனம் பதை பதைக்கத் தலையைத் துண்டிப்பதும், கழுத்துவரை பூமிக்குள் புதைத்துத் தலையை யானையை ஏவி இடறச் செய்வதும், உயிரோடு பெரிய சுவருக்குள் நிறுத்தி செங்கல் அடுக்கிப் பூசி விடுவதும், பெண்களையும் பச்சைக் குழந்தைகளையும் சாட்டை கொண்டு விளாசி ரத்தம் சொட்டச் செய்வதும் இன்னும் இவைகளைக் காட்டிலும் பயங்கரமான கொடுமைகளும் முற் காலத்திய கொடிய தண்டனைகள். கோபமேலீட்டால் 'கண்ணுக்குக் கண்,' 'பல்லுக்குப் பல்' பழி வாங்கிவந்தார்கள். விரோதியைக் கொன்றதோடு நில்லாது ஒரு பாவமு மறியாத பெண்டு பிள்ளைகளையும் தாக்கிக் கோரமாகக் கொன்று குவிக்கும்வரை ஆறுதலடைய மாட்டார்கள். அது மனிதனின் மனம் பக்குவமடையாத காலம்; மனிதன் பூரண மனிதத் தன்மை யடையாத நாட்கள். 'லண்டன் கோபுரம்' (Tower of London) என்னும் மாளிகையில் முற் காலத்தில் மரண தண்டனை யளித்த பயங்கரமான கருவிகளை இன்றும் காணலாம்.

காலஞ் செல்லச் செல்ல மனமிளகி அவ்விதம் சித்திரவதை செய்து கொல்லுவதை விடுத்தனர். ஆனால் அந்தோ! கொல்லுவதை முற்றிலும் விடவில்லை. பகுத்தறிவு வளர்ந்து, நாகரீகம் உச்சஸ்தானத்தை அடைந்து விட்டதாகச் சொல்லும் இவ் விருபதாம் நூற்றாண்டிலும் தூக்குமேடையி லேற்றி நாக்குத் தள்ள, விழி பிதுங்க உயிர் போக்குகின்றனர். அல்லது மின்சார நாற்காலியில் (Electro-Cution) வைத்துப் பிணைத்து, சரீரம் சிவந்து, சதை வெந்து துர்க்கந்தம் வீச, நரம்புகள் 'பட் பட்'டென்று வெடிக்க, டாக்டர்கள் அருகில் நின்று உயிர் வாங்குகின்றனர். ஆஹா! என்ன ஜீவகாருண்ய தண்டனை! என்ன நாகரீகக் கொலை! தன்னைப் போன்ற மனிதன்—தன்னைப் போலவே உண்டு, உடுத்திப் பேசித் திரிந்த சகோதரன், கண்களுக்கு முன் துடிதுடித்துச் சாகும் காக்ஷியைக்

கண்டு சகித்திருக்கும் தன்மை என்ன தன்மையோ? அதை மனிதத் தன்மை யெனக் கூற எங்ஙனம் இயலும்? இந்த மரண தண்டனையை எந்த தேசத்தார் ரத்து செய்வார்களோ அவர்களே மனிதர்கள்.

ஒரு உயிரைக் காப்பாற்ற எவ்வளவோ சிரமம் எடுத்து வரும் இக் காலத்தில், மரண தண்டனை யளிக்கும் கொடிய அநாகரீகச் சட்டத்தை வைத்துக் கொண்டிருப்பது எவ்வளவு இழுக்காகும்! பத்து மாதம் சுமந்து, படாதபாடெல்லாம் பட்டுப் பெற்று, உணவூட்டி, உடையுடுத்தி, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்தெடுத்தது அவன் செய்த ஒரு குற்றத்திற்காகக் கொஞ்ச நேரத்தில் பிணமாக்கி விடுவதற்கா? கொடுமை! கொடுமை!! அந்தோ கொடுமை!!! இதைவிடக் கொடுமையான செயல் வேறு உண்டோ? இந்த லக்ஷணத்தில் எம்மை நாகரிக சிகாமணிகளென அழைத்துக் கொள்ளுகிறோம். வெட்கம்! வெட்கம்!

தற்போது அளிக்கும் மரண தண்டனையை 'தடுக்கு முறை' என்று (Deterrent) ரொம்ப நாசூக்காக அழைக்கின்றனர். ஒருவன் கொலையோ இதர பெருங் குற்றங்களோ புரிந்துவிட்டால், அவனால் மேலும் அவ்வித பாதகச் செயல்கள் நிகழாதிருக்கவும் அவன் முடிவைக் கண்டு ஏனையோர் மனங் கலங்கி அவ்விதச் செயல்கள் புரியாதிருக்கவும், அவன் உயிரைப் போக்கிவிடுகின்றனர். முன்பு, பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்தோடு கொன்றால் இப்போது 'தீச் செய்கைகளைத் தடுப்பதற்காக' வென்று கொல்லுகிறார்கள். நோக்கமும் கொல்லும் முறையும் வித்தியாசப்படுகின்றனவே யொழிய கொலை கொலையே யன்றோ?

ஒருவன் கொலை செய்து விடுகிறான்; அவனைப் பிடித்து அரசாங்கம் கொலை செய்துவிடுகிறது. இதில் யார் செய்தது நியாயம்? யார் செய்தது அநியாயம்? அரசாங்கம் செய்தது கொலையில்லையோ? ஒருவன் செய்யும் குற்றத்தைத் தவிர்ப்பதற்காகத் தானும் அதே குற்றத்தைச் செய்வதா?

நிற்க, தற்காலத் 'தடுக்கு முறை' கொலைகள் நிகழாவண்ணம் தடுக்கிறதா வென்பது கவனியுங்கள். கொலை செய்த குற்றவாளியை அரசாங்கத்தார் கொலை செய்து விடுவார்கள் என்று தெரிந்தும் எத்தனை பேர் கொலை செய்கிறார்கள்! மரண தண்டனை யிருந்தும் குற்றங்கள் குறையவில்லையே! கொலை செய்வதினின்றும் ஜனங்கள் பின்னடைய வில்லையே! ஒருவன் கொலை செய்துவிட்டு உதிரம் தோய்ந்த ஆயுதத்துடன் தானாகவே போலீசாரிடம் வந்து தன்னைத் தூக்கிலிட்டு விடும்படி கூறுகிறானே! இதற்கென்ன பரிகாரம்? ஆற

அமர உட்கார்ந்து யோசித்தால் தற்கால மரண தண்டனை, குற்றங்களைத் தடுப்பதற்குப் பதிலாகப் பெருக்கி யிருக்கிறது என்பதை உணரலாம். மரண தண்டனை தோல்வி யடைந்து விட்டது; அது இனிப் பிரயோஜனமில்லை. ஜனங்கள் கொலை முதலிய மாபாதகங்கள் செய்யாதிருக்க வேறு புது மார்க்கம் தேட வேண்டும். அது எது?

கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால், கொலை போன்ற பாதகங்கள் கோபமேலீட்டால்—அடக்க முடியாத ஆத்திரத்தால் விளைபவை என்று தெரிந்து கொள்ளலாம். ஒருவனுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டால் அவனுடைய பகுத்தறிவு அவனைவிட்டுப் போய்விடுகிறது. அவன் நெஞ்சத்தில் சைத்தான் தலைவிரித்தாடுகிறான். அப்போது, தான் செய்வது இன்னது என்று அவனுக்குத் தோன்றுவதில்லை. எவ்விதத் தீச் செயலையும் செய்யத் துணிந்து விடுகிறான். கோபமோ ஆத்திரமோ அனாவசியமாக ஏற்படாதபடி அவனுக்குப் பயிற்சி யளித்திருந்தால் அவ்வித குற்றங்கள் நிகழுமா? மனிதனின் உயிர் விலை மதிக்க வொண்ணாதது எனும் உண்மையை அவன் உணரும்படி பாலியத்திலிருந்தே கல்வி அளிக்கப்பட்டிருந்தால் உயிரைப் போக்க முற்படுவானா?

நாம் எதற்காக ஒருவன் உயிரைப் போக்கப் போகிறோமோ அதைக்காட்டிலும் எதிரியின் உயிர் சிறந்தது எனும் உண்மையை உயிர் கொடுக்க முடியாத நாம் உயிர் வாங்க என்ன உரிமையிருக்கிறது எனும் தத்துவத்தை ஒருவன் உணர்ந்தால், அவன் நெஞ்சு குற்றங்கள் செய்யத் துணியுமா? ஆதலால் தக்க கல்வியும் பயிற்சியும் பாலியத்திலிருந்தே அனைவருக்கும் அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் கொடிய குற்றங்கள் நிகழாதொழியும். இம் முறை மிகவும் அபார சக்தி வாய்ந்தது என்பதை இப்போதுதான் அறிந்து வருகிறார்கள்.

ஒரு கொலை செய்த குற்றவாளி தூக்குமேடையில் ஏறப் போகும்போது கண்ணீர் விட்டு 'நான் இன்று சாகப்போவதற்கு எனது தாயே காரணம்' என்றான். ஆம்! இயற்கையிலேயே நல்லவனாகிய அவனை, அவன் தாய் தீய வழியிலேயே பயிற்சியளித்து அக் கதிக்கு ஆளாக விட்டுவிட்டாள்.

ஒருவன் கொலைசெய்துவிட்டால், அந்தக் குற்றவாளியைத் தூக்கிலிடப்படாது; ஆனால் அவனுக்குச் சரியான கல்வியும் பயிற்சியும் அளிக்காது அத் தீச்செயல் செய்யத்தக்க சுபாவமுடையவனாய் வளர விட்டுவிட்டதற்காக, தன் கடமையைச் செய்யத் தவறிய

அரசாங்கத்தைத் தூக்கிலிட வேண்டும். அதுதான் நியாயம்! இல்லையா?

எதற்கும் விதிவிலக்கு உண்டு. நன்கு பயிற்சியளித்தும் ஒரு சிலர் குற்றங்கள் செய்தால் அவர்களை சிறைபுகுத்திச் சீர்திருத்த வேண்டும். அவர் இனிமேல் குற்றங்கள் புரியாதிருப்பின் அதுவே நமக்குப் போதுமன்றோ? ஒருவன் கொலை செய்துவிட்டால் அக் கொலையைச் செய்யத் தூண்டிய அவன் மனத்திலுள்ள கொடிய விஷத்தை நீக்கவேண்டுமே யொழிய உயிரை நீக்குவது முறையல்ல.

கொலையைக் கொலையால் தடுக்கமுடியாது. தீமையைத் தீமையால் எதிர்த்தால் அது அதிகரிக்குமே தவிர குறையாது. தீயோருக்குத் தீங்கிழைப்பதைக் காட்டிலும் அன்பு காட்டினால் திருந்திவிடுவார்கள். தண்டிப்பதற்குப் பதிலாக மன்னிப்பளிக்கப்பட்டவர்கள் பரிசுத்தமடைந்த உண்மைச் சம்பவங்கள் உலக சரிதத்திலும், மதக் கிரந்தங்களிலும் மலிந்துகிடப்பதைக் காணலாம். 'குற்றம்புரியும் மனோபான்மையை ஒழித்து சாதுக்களாக்குவது சாத்தியமே' என்று மனோ தத்துவ சாஸ்திரிகளும் (Psychologists), குற்றதத்துவ சாஸ்திரிகளும் (Criminologists) சொல்லுகிறார்கள். எத்தனையோ கொடிய கொலை பாதகர்கள் பிற்காலத்தில் பக்திமான்களாகவும் பரம சாதுக்களாகவும் மாறி யிருக்கிறார்கள்.

மரண தண்டனை விதிப்பதில் மற்றொரு பெரும் பாவமும் இருக்கிறது. தவறுவது மனிதனின் சுபாவம்; நியாயாதிபதியும் மனிதனே; ஆதலால் பல சந்தர்ப்பங்களில் நியாயம் தவறிவிடுவதும் உண்டு. குற்றவாளி விடுதலை பெற்று விடுவதும், நிரபராதி யொருவன் தூக்கு தண்டனை பெறுவதும் சகஜம். உண்மைக் கொலைபாதகர்கள் உலகத்தில் உல்லாசமாய்த் திரிய எத்தனையோ அப்பாவிகள் தூக்கு மேடையில் தொங்கி யிருக்கிறார்கள். ஆ! அவர்கள் நெஞ்சம் எங்ஙனம் பதைபதைத்திருக்கும்!

மரண தண்டனையை ரத்து செய்து சீரிய சீர்திருத்த முறையைக் கையாளுவதால் அநேக நாடுகளில் கொலைகள் குறைந்து வருகின்றன. நார்வே, ஸ்வீடன், டென்மார்க், இதாலி, ஹாலந்து, பெல்ஜியம், பிரேஜில் (Brazil), வெனிஸுலா, அர்ஜன்டைனா, லித்துவானியா, ஆஸ்டிரியா, ஸ்விட்ஜர்லாந்து, கொலம்பியா, ஈக்வேடார், காஸ்டாரிகா, ஹாண்டுராஸ், பெரு, ஆஸ்டிரேலியா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள எட்டு மாகாணங்கள் முதலிய தேசங்களிலும் நேபாளத்திலும் மரண தண்டனையை ரத்து செய்துவிட்டனர். "இதாலியில் 1927-ம்ஆடு கொலைகளும் கொலை முயற்சிகளுமாய் 7000 குற்றங்களும் நிகழ்ந்தன; 1929-ம் வருஷத்திலோ

2000 மாகக் குறைந்துவிட்டன" வென்று இதாலிய நீதிமந்திரி 'ஸீனர் ரேக்கோ என்பார் எடுத்துரைத்தார். இதனால் மனிதர்களிடமிருக்கும் கொல்லும் சுபாவம் அறவே ஒழிக்கப்பட வேண்டுமானால் முதலாவதாக அரசாங்கம் தன் வழக்கத்தை விடுத்து வழி காட்ட வேண்டும் என்பது தெளிவாய் விளங்கும்.

சர். ஜேம்ஸ் ரோமிலி, சர். ஜேம்ஸ் மாக்கின்டாஷ் என்பவர்களின் பெரு முயற்சியால் இப்போது இங்கிலாந்தில் கொலை, ராஜத்துரோகம், கடற் கொள்ளை, கப்பல் தொழிற்சாலையை சேதப்படுத்தல் ஆகிய நான்கு குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. 1868-ம் வருஷத்திலிருந்து 1910-ம் வருஷம் வரை எட்டு தடவை மரண தண்டனையை ரத்து செய்துவிட வேண்டுமென வாதித்தனர் ஆங்கிலேயர். சமீபத்தில் ஒன்பதாவது தடவையாக மரண தண்டனையைப் பற்றி விசாரித்து யோசனை கூற ஒரு கமிட்டியை நியமித்தனர். அக் கமிட்டியார் 'ஐந்து வருஷங்கள் வரை மரண தண்டனையை பரீக்ஷார்த்தமாக விலக்கி வைத்துப் பார்க்கலா'மென யோசனை கூறினார்கள். அப்போது அதிகாரத்திலிருந்த திரு. மாக்டொனால்டு தொழில் சர்க்கார் எக் காரணம் பற்றியோ இந்த யோசனையை மூலையில் போட்டுவிட்டனர்.

இங்கிலாந்தைப் பொருத்தவரை எங்ஙனமாயினும் இந்தியாவில் இம் முறை மிகவும் பயன் தரும். கொல்லாமை, அன்பு முதலிய உயரிய குணங்கள் அதிகமாக நிலவும் நமது நாட்டில்—ஆன்மார்த்த ஞானம் பரவிய நமது தேசத்தில் கொலைகள் செய்யாவண்ணம் பயிற்சி யளிப்பதும், மரண தண்டனையை நீக்கிச் சீர்திருத்துவதும் சுலபமானதே.

இதுகாலை நமது இந்தியாவில் (இ. பி. கோ. 121) ராஜத்துரோகம் (302) கொலை இவ்விரண்டு குற்றங்களுக்கு மட்டுமே தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. இதை சுயராஜ்ய சர்க்காரில் ஒழித்துவிட வேண்டுமென மூலாதார நிர்ணயக் கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். அதற்கு முந்தியே மரண தண்டனையை ரத்து செய்துவிடுவது சாலச்சிறந்ததாகும்.

மரண தண்டனையை ரத்து செய்துவிடுவதைச் சர்க்காரும், வைதிகர்களும் எதிர்க்கிறார்கள். கொலையாளிகளைச் சீர்திருத்தினாலும் ராஜத்துவேஷிகளைச் சீர்திருத்த ஏலாது; அவர்களைக் கொன்று தீர்த்துவிட வேண்டுமென்பது சர்க்கார் அபிப்பிராயம். மதம் கொலை செய்தவர்களைக் கடுந் தண்டனைக்கு உட்படுத்தும்படி சொல்லுகிறது; ஆகையால் அதை மீறக்கூடாது என்பது வைதிகர்கள் வாதம். ராஜத் துரோகம் செய்ய முனைந்துள்ளவர்களைச் சீர்திருத்த

நபிபெருமானின் நற்பெருங் குணங்கள். *

ஜனாப். M. K. M. மீரான் அவர்கள்.

இஸ்லாம் மார்க்க நிறுவராகிய முகம்மது நபியவர்கள் அவதாரத்திற்கு முன் அரேபியா தேசமானது எழுத்து வாசனையற்ற மூடரும், குடியரும், இரத்த வெறி கொண்டவரும் நிறைந்த நாடாக இருந்தது. நபியவர்கள் தோன்றிய சிறிது காலத்திற்குள், அந் நாடு நாகரீகம், மார்க்கம், நிர்வாக சாமர்த்தியம் முதலியவற்றிற் சிறப்புற்றோங்கியதுடன் உலகத்திற்கோர் வழிகாட்டியாயும் ஆனது. இவ்வித அற்புத மாறுதல்களுக்கெல்லாம் நபிபெருமான் நற்பெருங் குணங்களே காரணமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ! எனவே, அவற்றை ஈண்டுச் சிறிது குறிப்பிடுவாம்.

நபிகள் பெருமான் எப்பொழுதும் கடவுள் தியானத்திலேயே ஆழ்ந்து நிற்பார். கடவுள் தியானமே அவரது தினசரி வாழ்க்கையின் விசேஷ குணம். அநேக தடவைகளில், இரவெல்லாங் கடவுளின் சந்நிதியில் நிற்பார். நெடுநேரம் நிற்பதால், கால்கள் வீங்கிப் போவதும் உண்டு. எனினும், கடவுள் வழிபாட்டில் அவருக்குள்ள மனவெழுச்சி சிறிதும் குன்றவில்லை.

முடியாதென்றால் தேசப் பிரஷ்டம் செய்துவிட்டால் போதுமானது. வைதிகர்களுக்கு ஒரு வார்த்தை! கொலை முதலிய மாபாதகங்களுக்கு அவரவர் மதக் கொள்கைப்படி மறுமையில் தெய்வ தண்டனை அடைவார்கள். அதற்கு முன் இம்மையிலேயே ராஜ தண்டனையும் அளிக்க வேண்டுமா? ஒரு குற்றத்திற்கு எத்தனை தடவை தண்டனை! உங்கள் தண்டனையை நிறுத்திக்கொண்டு தெய்வ தண்டனைக்கு ஆளாக விட்டு விடுங்கள்!

பொதுஜன அபிப்பிராயமே சட்டம்; ஆகையால் பொது ஜனங்கள் ஒன்றுகூடி கிளர்ச்சி செய்தால் தூக்கு தண்டனையை ரத்து செய்துவிடலாம். எழுமின்! உழைமின்!

---

* மௌலானா அப்துல்மஜீத் அவர்களின் உர்து வியாசத்தைத் தழுவி இஃது எழுதப்பெற்றது.

நபிகள்நாயகம் மிக எளிய வாழ்க்கையையே நடத்தி வந்தார். பேரீச்சம்பழமும் தண்ணீரும் அருந்தியே பல நாட்களைக் கழித்துள்ளார். மிகச் சாதாரணமானதும் முரடானதுமான ஆடைகளையே அவர் சதா தரித்து வந்தார். இராக்காலத்தில் மயிரடர்ந்த தோல் மீது நித்திரை செய்வார். சில சமயங்களில் கோணித் துண்டுகளை மடித்து அவற்றின் மேல் படுத்துக்கொள்வார். பெண்கள் நகைகள் அணிவதை வெறுத்தார். ஒரு நாள் தமது அருமைப் பிராட்டியார் ஆயிஷாநாயகி தங்க வளையல் அணிந்திருந்ததைப் பார்த்தார். உடனே அதைக் கழற்றும்படி செய்து 'இது முகம்மது வீட்டுப் பெண்களுக்கு அழகானதல்ல' என்று கூறினார். மற்றொரு சமயம் தமது மகள் பாத்துமாள் கழுத்தில் தங்கச் சங்கிலி தொங்குவதைப் பார்த்து 'முகம்மதுவின் மகள் கழுத்தில் நெருப்புச் சங்கிலி தொங்குகிறது' என்று கூறினார். என்னே! பண நெருக்கடியான இக் காலத்திலாவது முஸ்லிம் மாதர்களும் மற்ற மாதர்களும் இதைச் சற்றுக் கவனிப்பார்களா?

ஊழியத்தின் பெருமையை நபிகள்நாயகம் நன்கு உணர்ந்திருந்தார். தம்முடைய வேலைகள் யாவையும் தாமே செய்து வந்தார். கால்நடைகளுக்குத் தீனி வைப்பார்; பால் கறப்பார்; துணிகளைத் துவைப்பார்; செருப்புத் தைப்பார்; வீடு பெருக்குவார்; கடை வீதியில் சாமான்கள் வாங்கினால் அவற்றைத் தாமே சுமந்துகொண்டு வீட்டுக்குப் போவார். மதினாவில் முதன் முதல் பள்ளி கட்ட ஆரம்பித்தபோது கூலியாட்களோடு தாமும் ஒரு ஆளாகச் சேர்ந்து வேலை செய்தார்.

நபிபிரான் தம் குடும்ப வாழ்க்கையை மிகப் பொறுப்புடனும் சிரத்தையுடனும் நடத்தி வந்தார். தமது குடும்பத்தாருடனும், சுற்றத்தாருடனும் வெகு அன்பாக நடந்து வந்தார். குழந்தைகளின் மீது மிகவும் அன்போடிருப்பார்; தம் குழந்தை பாத்துமாவுக்கு முத்தங் கொடுப்பார்; தம் பேரப்பிள்ளைகளை முதுகில் சுமந்து விளையாடுவார்; மடியில் வைத்துக் கொஞ்சுவார். 'ஒருவன் எந்த அளவில் தன் குடும்பத்திற்கும் பந்துக்களுக்கும் ஏற்பட்ட கடமையைச் செய்கிறானோ, அவன் அந்த அளவிற்கு நல்லவன்' என்பது அவர்தம் சீரியகொள்கை.

பணக்காரர், ஏழை என்ற வித்தியாசம் நபிகள்பிரானுக்குக் கிடையாது. பரம ஏழை கூப்பிட்டாலும் "இதோ வந்துவிட்டேன்"

என்று அன்புடன் பதில் அளிப்பார். மேன் மக்கள், கீழ் மக்கள் என்ற வித்தியாசம் சிறிதுமின்றி எல்லோருக்கும் ஸலாம் சொல்லுவார்; எவரேனும் தம்மோடு வந்தால் கைகோத்து நடப்பார். வழியில் குழந்தைகளைப் பார்க்கும்பொழுது தாமே அவர்களுக்கு முதலில் ஸலாம் சொல்லுவார். பரம ஏழைகள் விருந்திற்கழைத்தாலுங்கூட அதை ஒப்புக்கொள்வார். விருந்தினருக்கு அதிக உபசாரஞ் செய்வார்; தம் கையாலேயே அவருக்கு விரிப்புப் போடுவார்.

இவர் தீவிர பரோபகாரச் சிந்தை வாய்ந்தவர். ஏற்பவருக்கு இவர் இல்லையென்று சொல்வதே கிடையாது. இவருடைய வாழ்நாள் முழுவதிலும் இவருடைய பரிசுத்த நாவினின்று இல்லை யென்ற வார்த்தை வெளியானதே இல்லையாம்.

இவர் தீவிர சாந்த குணமும் சகிப்புத்தன்மையும் உடையவர். எவராகிலும் ஒருவர் தமக்குத் திருப்தி யில்லாத காரியம் ஒன்றைச் செய்வாராகில் நேராகக் குற்றத்தைச் சுட்டிக்காட்டி அதைப்பற்றி ஒருபோதும் பேசமாட்டார். ஆயின், பொதுவாக விஷயங்களைச் சொல்லுகிற முறையில் குற்றத்தைச் சுட்டிக்காட்டி அதன் மூலம் அவர் திருந்தும்படி செய்வார். பிறர் தமக்குச் செய்த இடர்களுக்கு ஒருபோதும் இவர் பதில் செய்ததில்லை.

நபிகள்பிரான் அளவற்ற உற்சாகமும் உல்லாசமும் உடையவர். ஆனால் அவருடைய சரசக்களிப்பும், உற்சாகமும், நடக்கையும் காலங் கழிப்பதற்கோ ஏளனஞ் செய்வதற்கோ அல்லது நிந்திப்பதற்கோ செலவழிக்கப்படவில்லை.

நபிகள்நாயகம் ஒருபோதும் அனாவசியமாகப் பேசமாட்டார். பெரும்பாலும் மௌனமாகவே இருப்பார். அவரது பேச்சுக்கள் சுருக்கமாயும் இனிமையாயும் கேட்பவர் மனத்தை எளிதில் கவரத் தக்கதாயும் இருந்தன.

நீ ஏதாவது உலகில் செய்ய விரும்பினால், உன் தலையை நிமிர்த்தி நேரே நோக்கவேண்டும். "நான் ஒரு பிச்சைக்காரனல்லன். நான் ஒரு தரித்திர நாராயணனல்லன். நான் ஒரு அரசன்; நான் ஓர் வெற்றி வீரன்; சித்தியடைவது என் பிறப்புரிமை எவரும் என்னிடமிருந்து அந்த உரிமையைப் பறிக்கவியலாது" என்று உனக்குள் ஓயாது சொல்லிக்கொண்டிரு —டாக்டர் மார்டன்.

உண்மைக் காதலும் பக்தி யோகமும்.

திரு. K. வெங்கட ராவ் அவர்கள்.

சிற்றின்பத்திற்கும் பேரின்பத்திற்கும் ஓர் தொடர்பு உண்டு எனப் பெரியோர் கூறுவர். அது போலவே உண்மைக் காதலின் மனோ நிலைமைக்கும், ஓர் யோகியின் மனோ நிலைமைக்கும் ஓர் தொடர்பு உண்டு என்பது தெள்ளிதின் விளங்கும். முத்தூய்மையுடன் பகவானையே சதா ஸ்மரிக்கும் ஓர் பக்தனுக்கு அவனிட உபாசனா மூர்த்தியே அவனுக்கு எல்லாம். எப்போதும், எந்த சந்தர்ப்பத்திலும், எவ்விடத்தும் பகவானையே எண்ணி எண்ணி மனமுருகிறான். பகவானிட ஸ்வரூபமல்லாமல் வேறெதுவும் இவனுக்கு மனச்சாந்தி யளிப்பதில்லை; சந்தோஷமளிப்பதில்லை. பகவானை எங்கு காண்போம், எவ்வாறு காண்போம் என்னும் சிந்தனையால் இவன் நைந்து நைந்து உருகுகிறான். மனிதர்களைக் காணவும் இவனுக்குப் பிடிப்பதில்லை; வீண் சம்பாஷணைகளையும் வெறுக்கிறான். பகவானைத் தவிற வேறு எந்த பொருளையும் இவன் பார்க்க இச்சிப்பதில்லை. செடிகளோ, மரங்களோ, மலைகளோ, மனிதர்களோ எந்த பொருளைப் பார்த்தாலும் இவைகள் பகவானைப்போல் இல்லையே என்று சஞ்சலப்படுவான். பகவானிட ஸ்மரணை செய்பவர்களைக் காணவும், அவர்களிட வசனங்களைக் கேட்கவும் இன்புறுவான். இவ்வாறு உண்மையான பக்தன் எங்கெங்கும் பகவானையே தேடித் தேடி அலைந்து திரிவான். அவனிட பஜனையைக் கேட்கவே அவாக் கொண்டிருப்பான்.

இதே மனோபாவத்தையே உண்மைக் காதலர் கொள்வர். காதலன் காதலியைவிட்டுப் பிரிந்து வாழுங் காலங்களில் அவனிட மனம் துடிக்கும் வேகமோ குறிப்பெடுக்க முடியாது. காதலியைப் பற்றியே இரவிலும், பகலிலும், எக்காலத்தும் நினைத்துக்கொண்டு இருக்கிறான். வேறு எந்த ஸ்திரீயைக் கண்டாலும் "இவள் நமது காதலியைப் போல்வளோ?" என்று தன்னையுமறியாமல் நினைக்கிறான் தன் காதலியைவிட நூறு மடங்கு அதிக அழகு வாய்ந்த வேறொருத்தியைக் கண்டாலும், தன் காதலியே அழகு வாய்ந்தவள் என்று இக் காதலன் நினைக்கிறான். உண்மையில் காதலன் காதலியின் உருவத்திலேனும், அழகிலேனும் பற்றுதல் கொள்ளுகிறனா யென்பதைச் சிந்திக்க வேண்டும்; அழ

கையோ, உருவத்தையோ நேசிப்பதானால் குரங்கு கிளை விட்டுக் கிளை பாய்வதே போல், ஆடவன் தனது அன்பை ஆளை விட்டுவிட்டு மாற்றிக்கொண்டே போகவேண்டியவனாய் விடுவான். இதற்கு ஒரு முடிவே இல்லாமற் போவதுந் தவிர, மனிதன் மனச் சாந்தியை அடைய முடியாமலேயே போய்விடும். கூர்ந்து கவனிக்குமிடத்து காதலன் காதலியின் அழகையே விரும்பி இருப்பதில்லை; உருவத்தையே போற்றி நிற்பதில்லை; அவளிட அவயவங்களின் மீது அன்பு செலுத்துவதில்லை. இதுபோலவே காதலியும் காதலனின் உருவத்தையோ, அழகையோ நேசிப்பதில்லை. இவ்விருவர் ஆன்மாக்களிடையே ஓர் இணைப்பு ஏற்பட்டுவிடுகிறது. ஒரு ஆன்மாவை மற்றோர் ஆன்மாவானது காந்தசக்தி போன்று இழுக்கிறது. இவ்வாறு காதலனின் உருவத்தையல்ல ஆன்மாவைத்தான் நேசித்துப் பூசிக்கிறோம் என்று காதலிக்குத் தெரிவதில்லை. அதுபோலவே காதலியின் உருவத்தையோ, தேக வனப்பையோ வல்ல, ஆன்மாவைத்தான் நேசிக்கிறோம் என்று காதலரும் அறிவதில்லை. உற்று நோக்குமிடத்து இரண்டு ஆன்மாக்களுக்குள் ஏற்படும் ஓர் ஒற்றுமையே எதிர்க்க முடியாத—மறுக்க முடியாத காந்த சக்தியை எழுப்பிக் காக்ஷியளிக்கச் செய்கிறது.

ஒரு மனிதன் வெறும் மிருக விருப்பத்தை அனுசரித்து ஒரு பெண்ணுடன் உறவு கொள்வானாகில், இந்த உறவானது நீடு வாழ்வதில்லை. ஆண், பெண் இருவர் ஆன்மாக்களின் இடையே ஒற்றுமை எங்கெங்கு ஏற்படுவதில்லையோ, அங்கங்குள்ள உறவானது நெடுநாள் நிலைத்திருப்பதில்லை. ஆன்மாக்களிடையே ஒற்றுமை உண்டாய் விட்டால், இங்கு காணப்படும் உறவானது சின்னாட்களுக் கெல்லாம் மறைந்து போவதல்ல. ஆன்ம ஒற்றுமை யுண்டானால் ஒருவர் செய்யும் குற்றம், மற்றவருக்குக் குற்றம் என்று தோன்றுவதில்லை. மன்னித்து மறக்கக்கூடிய குற்றங்களெல்லாம் வெகு விரைவில் கண்ணிற் தென்படாமல் மறைந்து போகின்றன. எங்கெங்கு ஆன்ம ஒற்றுமை யில்லையோ, அங்கெல்லாம் ஒரு சிறு குற்றமும் ஓர் மலையாகத் தோன்றும். மன்னித்து மறக்கக்கூடிய கருணையானது எளிதில் தோன்றுவதில்லை. உதாரணமாக ஓர் மங்கை ஏதாகிலும் ஓர் சிறு குற்றத்தைச் செய்தாளாகில் அவளது காதலன் அதை விரைவில் கருணையுடன் மன்னித்து மறக்கிறான். ஆனால் பிறரோ அதை அவ்வளவு விரைவில் கருணைகொண்டு மன்னித்து மறப்பதில்லை. ஓரிடத்தில் ஆன்ம ஒற்றுமை இருப்பதுவும், மற்றோரிடத்தில் இல்லாதிருப்பதும் காரணமாகும்.

நமது ஆன்மா உறவு கொண்ட மற்றோர் ஆன்மாவை எண்ணிய தக்ஷணமே, அந்த உருவமே திடீரென்று நமது அகக் கண் முன்

தோன்றுகிறது. உண்மைக் காதலன் கண்முன் காதலியின் உருவம் அப்போதைக் கப்போது விட்டு விட்டுத் தோன்றிக் கொண்டேயிருக்கும். அவ்வுருவத்தைக் கட்டித்தழுவ யாது செய்யலாம், எப்போது அடைவோம் என்னும் எண்ணம் இவனிட மனதை வாட்டி வாட்டி வதைத்துக் கொண்டேயிருக்கும். அவ்வுருவத்தையடைந்தாலல்லது வேறு இன்பமே கிடையாதென இவன் நினைப்பான். வேறெவரைக் காண்கினும், வேறெதைப் பேசினும் வெறுப்பே தோன்றும். தன் காதலியின் நினைப்பைத் தவற வேறெந்த நினைப்பும் இவனுக்குத் தோன்றாது. சிறுகச் சிறுக இந்த சஞ்சலம் முதிர்ந்து முதிர்ந்து கனிந்து, தன் காதலியின் நினைப்பல்லது வேறு நினைப்பே யில்லாமல், பிறர் நோக்குதற்கு பைத்தியக்காரனைப் போலவே காண்பான். இது போலவே தூய்மை பொருந்திய மனத்தினனான பக்தனும் பகவானைத்தவிர வேறெவ்வித யோசனையுமின்றி வேறெந்த வஸ்துவின் பேரிலாகிலும், பேச்சின் பேரிலாகிலும் சிறிதேனும் நாட்டஞ் செலுத்தாது பார்ப்போர்க்கு பைத்தியக்காரனைப் போல் வாழ்வான். எங்கெங்கு எவ்வெவரிடத்தில் இவ்வித பக்தியைக் காண்கிறோமோ, அது போற்றப்பட வேண்டும். உண்மையும் தூய்மையும் பொருந்திய காதலைக் காணுமிடத்தையும் நாம் போற்றல் வேண்டும். எவ்வித பிரதி பிரயோஜனத்தைக் கருதியேனும் பக்தன் பக்தி செலுத்துபவனல்ல. உண்மைக் காதலனும் பிரதி பிரயோஜனத்தைக் கருதுபவனல்ல. தான் காதலியின் பேரில் கொண்டுள்ள அளவு மட்டில், அவள் தன் பேரில் அன்பு செலுத்துகிறாளா என்பதையும் அவன் சிந்திப்பவனல்ல. பகவான் பேரில் பக்தி செலுத்துவது தன்னிட கடமையென எவ்வாறு பக்தன் நினைக்கிறானோ அவ்வாறே உண்மைக் காதலனும் காதலியின் பேரில் அன்பு சேர்ப்பது தனது கடமை யெனக் கொண்டவனாவான்.

நீ, உன்னைத் தாழ்ந்தவன் என்று நினைத்துக்கொண்டு உயர்ந்தவனாக முடியாது. நீ சிறப்படையவும், பெருமை பெறவும் விரும்பினால் சிறுமைத்தனத்தை உன்னிலிருந்து விலக்கவேண்டும். நான் என் அயலானைப்போல அறிவாளியல்லன்; அவனைப்போல பலமில்லை; திறமையுங் கிடையாது; ஆகவே என்னால் என்ன செய்யக்கூடும்? என்று கோழைத்தனமாக எண்ணினால் ஒன்றும் உன்னால் முடியாதுதான். "முடியாது" என்ற கொள்கைக்காரரால் ஒன்றையுங் கட்ட முடியாது. ஒருவேளை உடைத்தெறியக்கூடும்.—Dr. மார்டன்.

ஆராய்ச்சி மேடை.

உபநிஷதக் கதைகள்.

ஆசிரியர்:—திரு. M. R. ஜம்புநாதன்.

வெளியிட்டவர்:—ஜம்புநாதன் புஸ்தகசாலை,

விலை ரூ. 1—0—0. 14, பள்ளியப்பன் தெரு, சென்னை.

தனது பேனாவால் தமிழ் நாட்டுக்கும் பாஷைக்கும் தொண்டாற்றிவரும் திரு. ஜம்புநாதனைத் தமிழர் நன்கு அறிவார்கள். பம்பாயில் இவர் எளிய தமிழ்மக்களுக்காகப் படும் பாடு கொஞ்சமன்று. இவரது நெஞ்சத்திலே பொங்கித் ததும்பும் உபநிடத நூலறிவு இப்பொழுது "உபநிஷதக் கதைகள்" என்ற புஸ்தகத்தின்மூலம் வெளிவந்திருக்கிறது. இந்தியாவின் ஆத்மீக அறிவைக் காட்டுவது வேதங்களும் உபநிடதங்களுமேயாம். உபநிடதங்களைச் சிறியாரும் பெரியாரும் கற்றோரும் மற்றோரும் அறிந்துகொள்ளும்பொருட்டு உபநிடத சாரத்தை மனதைக் கவரும் சின்னஞ்சிறு கதைகளாக எழுதியது போற்றத்தக்கதே. ஒவ்வொரு கதையிலும் புதிய கருத்து, புதிய செய்தி, புதிய உணர்ச்சி, புதிய உயிர் அடங்கியிருக்கிறது. தமிழ் மக்கள் உபநிஷத்தின் உண்மைகளைச் சுருக்கமாய் அறிய விரும்பினால், இக் கதைகளை வாங்கி வாசிக்கவேண்டும். இந் நூல் தமிழகத்திற்குப் புதிது. கதைகளென்று நினைக்காது, கருத்துக்களைக் கவனிக்க வேண்டும். இக் கதைகளில் எத்தனையோ விலைமதிக்க வொண்ணாத இரத்தினங்கள் மறைந்து கிடக்கின்றன. எளிய நடை. 89 கதைகள் அடங்கி யிருக்கின்றன.

R. N.

திருவிதாங்கோட்டு அன்னை மஹாராணியார்.

நூலாசிரியர்:— திரு. T. ராமலிங்கம் பிள்ளை, M. A.

வெளியிட்டவர்:— R. S. பிள்ளை, காந்தாரி அம்மன் வீதி,

விலை அணா 6. திருவனந்தபுரம்.

அகில இந்திய ஆங்கிலப் பரிசும், ஹார்வி தத்துவ வியாசப் பரிசும் பெற்ற, இங்கிலீஷிலும் மலையாளத்திலும் பல நூற்கள் எழுதிய, 'அன்னபூர்ணாலயம்' என்ற நாவலை மலையாளத்திலிருந்து தமிழில் ஆக்கித் தமிழ் மாதுக்குத் தொண்டு செய்த திருவாங்கூர் சமஸ்தானத்துத் தலைமை மொழிபெயர்ப்பாளர் ஸ்ரீமான்.

T. ராமலிங்கம்பிள்ளை யவர்கள் தமிழ் இலக்கிய உலகத்திற்குப் புதியவரல்ல. இலங்கை மண்டைத்தீவு ஸ்ரீமதி. தில்லைநாயகி அம்மாள் கேரள நாட்டு மாதர்தம் தற்கால நிலையைப்பற்றி அறிய ஆசை கொண்டு இப் புஸ்தகாசிரியரிடம் எழுதிக் கேட்கவே, இந் நூல் அவருக்காக எழுதப்பெற்றதாகும். திருவிதாங்கூர் இளைய மஹாராணியார், முற்போக்கும் நாகரீகமும் மாதரியக்கத்தில் பற்றும் கொண்ட முதன்மை பெற்ற இந்திய அரசிகளில் ஒருவராகும். மஹாராணியாரது சில பிரசங்கங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன. இலகுவான இனிய வசீகர நடையில் எழுதப்பெற்றிருக்கிறது. இந்தியாவில் மாதர் உரிமையிலும் உயர்விலும் கல்வி அபிவிருத்தியிலும் திருவாங்கூரே, முன்னணியில் நிற்கிறதாகையால், மலையாளத்து மாதர்களைப் பற்றியும் அன்னை அரசியாரைப் பற்றியும் தமிழர் அறிய வேண்டியது அவஸியம்.

ஜீவிய சரித்திரங்கள் பெருக்கமில்லாத் தமிழ் பாஷையில் இந்த சரித்திரத்தை எழுதிய திரு. பிள்ளை யவர்களைப் போற்றுகிறோம். இவரது உயரிய பேனா முனையிலிருந்து நானாவித நல்ல நல்ல நூற்களை எதிர்பார்க்கிறோம்.

R. N.

கிராம வாழ்வு.

ஆசிரியர்:—திரு. டாக்டர் ச. ஏசுதாசன், F.R.C.S.E.

வெளியிட்டவர்:—கிறிஸ்து குல ஆசிரமம்,

விலை அணா 3. திருப்பத்தூர், (வட ஆற்காடு.)

வட ஆற்காடு ஜில்லாவில் திருப்பத்தூரில் கிறிஸ்து குல ஆசிரமம் என்ற ஒரு சேவா நிலயத்தை ஸ்தாபித்து, திரு. டாக்டர் சவுரிராயன் ஏசுதாசன், திரு. டாக்டர் பேடன் முதலிய தொண்டர்கள் வைத்திய உதவி, கிராமத் தொண்டு, கற்பித்தல் முதலிய வேலைகளைச் செய்து வருவது வடாற்காடு ஜில்லாவாசிகளுக்கு நன்றாய்த் தெரியும். டாக்டர் ஏசுதாசன் அயல்நாடு சென்று படித்து வந்த டாக்டராயிருந்த போதிலும், தமிழில் இவருக்கு அதிகப் பிரியமுண்டு; தமிழில் சில புஸ்தகங்களை எழுதியிருக்கிறார். "கிராம வாழ்வு" என்பதைப் பற்றியே இப்பொழுது எழுதுகிறோம். கிராம வாழ்வு சிதைந்துபோயிருப்பதைப்பற்றி வருந்தி, அதன் நிர்மாணத்திற்கான சில வழிகள் இந் நூலில் கூறப்பட் டிருக்கின்றன. குடியானவர்களின் நம்பிக்கையற்ற மனோ நிலையை மாற்றவேண்டுமென்று கூறுகிறார். விவசாயம், குடியேற்று, சுகாதாரமும் வைத்தியமும், கல்வி, ஐக்கியமும் கூட்டுறவும் என்ற தலைப்புகளில் விவரித்து எழுதப்பட்டிருக்கின்றன.

டாக்டரவர்கள் கிராம ஜனங்களுக்குத் தொண்டு செய்வதில் ஆசையுற்றவர்; கிராமத் தொண்டு செய்து அனுபவ மிக்கவர்.

அறியாமையில் அடைபட்டு வறுமையால் வாட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கிராமவாசிகளிடம் அவர் உருக்கமா யிருப்பது போலவே, அவருடைய தமிழ் நடையும் உருக்கமாயிருக்கின்றது. ஒவ்வொரு வாக்கியத்திலும் தொண்டின் மணம் வீசுகின்றது; தியாகம் ஜ்வலிக்கின்றது. கிராம வாசிகளும் கிராமத் தொண்டர்களும் இந் நூலை அவசியம் படிக்கவேண்டும். நல்ல காகிதத்தில் நல்ல அச்சு; 80 பக்கங்கள்; ஆனால் விலை மிகவும் சொற்பம்.

R. N.

THE LABOUR HERALD

இப் பெயர் கொண்ட ஆங்கில மாதப் பத்திரிகையின் முதலாவது இதழ் வரப்பெற்றோம். தொழிலாளருக்கு வேண்டிய முக்கிய விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இப் பத்திரிகைக்குத் தலைவர்கள் ஆசிகள் கூறியிருக்கிறார்கள். வருட சந்தா ரூ. 2—0—0.

விலாசம்:—The Editor, Labour House,
297, Mint Street, Madras.

ஸ்வாமி.

சிறுவர் விருந்து மலர்கள் 1, 2, 3.

ஆசிரியர்:—திரு. பக்கிரிசாமி செட்டியார்.

வெளியிட்டவர்:—K. T. தேவராஜுலு நாயுடு கம்பெனி,
261, சைனாபஜார் ரோடு, சென்னை.

"சிறுவர் விருந்து" என்ற தலைப்பில் 1, 2, 3 மலர்கள் வந்தன. இச் "சிறுவர் விருந்து" உண்மையாய்ச் சிறுவர்களுக்கு விருந்தாகவே யிருக்கிறது. அருமையான கதைகள், சரித்திரங்கள், பொதுவிஷயங்கள், ஜீவியங்கள் முதலிய நல்ல நல்ல விஷயங்கள் நிறையப் பெற்றிருக்கின்றன. நவீன முறையில் புதிய கருத்துக்களுடன் இலேசான நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. ஆகையால் ஆரம்பப் பாடசாலைகளில் உப பாடப் புஸ்தகங்களாக உபயோகிக்குமாறு சிபார்சு செய்கிறோம்.

இவைகளை எழுதியவர் தமிழ்த் தாய்க்கே தனது வாழ்வை அர்ப்பணம் செய்தவர்—சென்னை T. V. ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்—

எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லவர்—ஸ்ரீமான் பண்டித பக்கிரிசாமி செட்டியார் ஆவர்.

R. N.

இத்தாலி தேசக் கூட்டுறவு.

ஆசிரியர்:—திரு. V. மாத்ருபூதம் அய்யர், B.A.

வெளியிட்டவர்.—தமிழ் நாடு கூட்டுறவு பெடரேஷன்,

விலை ரூ. 0—6—0. கோயமுத்தூர்.

கடன் பட்டுத் தவிக்கும் மக்களுக்கும் கைமுதலின்றி எத்தொழிலும் செய்யாது திண்டாடுபவர்களுக்கும் கூட்டுறவு இயக்கம் ஆதியில் ஏற்பட்டது. உலகத்தில் ஸ்வீடன் தேசமே இவ்வியக்கத்தில் இப்பொழுது முதன்மை பெற்று விளங்குகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் ஐர்லாண்டும், ஜெர்மனியும், இட்டாலியும் கூட்டுறவில் சிறப்புற்று நிற்கின்றன. இட்டாலி எவ்வாறு கூட்டுறவு இயக்கத்தில் முன்னேறி யிருக்கிறதென்றும் அத் தேச மக்களுக்கு இது எவ்வளவு தூரம் உதவியிருக்கிறதென்றும் இச் சிறு புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவுப் பிரச்சாரம் செய்யும் ஒவ்வொருவரது கையிலும் இது இருக்கவேண்டியது.

R. N.

தேசிங்கு ராஜன்.

ஆசிரியர்:—திரு. T. கிருஷ்ணசாமிப் பாவலர்.

வெளியிட்டவர்:—விவேகபோதினி ஆபீஸ்,

விலை அணா 10. மைலாப்பூர், சென்னை.

தேசிங்கு ராஜன் கதையைத் தமிழ் நாட்டார்கள் நன்கறிவார்கள். அம்மானை ரூபமாய் இக் கதையை சிறுவர்கள் படிக்கிறார்கள். ஜெயசிங் என்ற தேசிங்கு ராஜன் கதை இப்பொழுதுதான் வசன ரூபமாய் நல்ல நடையில் சரித்திர வரலாறுகளுடன் வெளிவந்திருக்கிறது. இதைப் படிப்பவர்களின் மனதில் வீரம் கொழுந்துவிட் டெரியும்; தேசாபிமானம் மிளிரும்; கடமை ஜ்வலிக்கும்; ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை தேசிங்கு மகபத்கானின் மூலம் பாக்கக் காணலாம். இதை எழுதியவர் தேச பக்தர்—பத்திராதிபர்—தமிழ்த் தொண்டர் திரு. கிருஷ்ணசாமிப் பாவலர்.

ஸ்வாமி.

ஆசிரியக் குறிப்புகள்.

எமது வாழ்த்து

மஹாத்மாவின் புத்திரர் திரு. தேவதாஸ் காந்திக்கும் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரின் புத்திரி திரு. லட்சுமிக்கும் விவாகம் நடைபெறப்போவதாக இரண்டு வருடங்களாக வதந்தி பலமாக உலாவிக்கொண்டிருந்தது. வைதீகர்கள் இதற்கு அதிகமாக ஆட்சேபணை. தெய்வீகத் திருக்காதலுக்கு முன் மனிதர் ஏற்படுத்திக்கொண்ட ஜாதிக் கட்டுகள், மூட வழக்கங்கள் ஒருக்காலும் முன்னிற்காது. அழகு, அந்தஸ்து, அதிகாரம், ஆஸ்தி முதலிய அனைத்தையும் உண்மைக் காதல் ஒருக்காலும் பொருட்படுத்தாது. திரு. தேவதாஸுக்கும் திரு. லட்சுமிக்கும் 16—6—33 வெள்ளிக்கிழமையன்று புனா "பர்னகுடி" நிலையத்தில் விமரிசையாக விவாகம் நடந்தேறியது. திரு. லட்சுமண சாஸ்திரியார் வைதீக முறைப்படி விவாகச் சடங்குகளை நடத்திவைத்தார். இம் மணத்திற்குச் சில ஹரிஜனங்களும் வந்து கலந்துகொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

மகான் காந்தியார் மணமக்களுக்கு உருக்கமான நல்லுபதேசம் செய்தார். ஜாதி மத வேற்றுமைகளால் நைந்து பிளவுற்றிருக்கும் நமது இந்தியாவிற்கு இம் மணம் ஒரு நூதன உணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது; கலப்பு மணத்திற்கும் காதல் மணத்திற்கும் எவ்வளவோ ஆதரவு அளித்து வழிகாட்டியாயிருக்கிறது. தமிழ்நாட்டின் செல்வி கூர்ஜரச் செல்வனிடம் சென்று, இருவரும் இரு நாட்டினரது அருமைப் பொக்கிஷமாக மகாத்மாவிடம் விளங்குகிறார்கள். தற்கால அரசியல் சரித்திரத்தில் இது ஒரு பெரிய சம்பவமாகும். ஒத்த நலனும், ஒத்த பண்பும், ஒத்த அறிவும், ஒத்த அன்பும், ஒத்த நிலையும் அமைந்த காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் எனவும் அவ் வின்பப்பேற்றினைப் பலர் அறிய எய்வதே திருமணமாகும். காதல் மணத்திற்குத் தடைகளாயுள்ளவைகள் அனைத்தும் நீங்கவேண்டும்; நாடெங்கும் காதல் மணங்கள் நடைபெற்று, மணங்கள் மணங்களாகி மணக்கவேண்டும்; இதனால் நல்ல நல்ல சந்தானங்கள் உதிக்கவேண்டும்; இந்தியன் என்ற ஒரே ஜாதி உணர்ச்சி உதிக்கவேண்டும் என்று நாம் பெரிதும் விரும்புகிறோம். காதல் மணங்கள் நாடெங்கும் பெருக! தம்பதிகளுக்குப் பல்லாண்டுகள்!

அடிகளின் உபவாசம்

21 நாட்கள் உபவாச காலத்தில் ஒருக்கால் மஹாத்மாவுக்கு அபாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாமென்றும் அதனால் உலக அபவாதம் இந்தியச் சர்க்காருக்கு உண்டானாலும் உண்டாகலாமென்றும் நினைத்து, அசையா அரசாங்கம் அச்சமடைந்து உலகப் பெரியார் காந்தி அடிகளை அவசர அவசரமாய்ச் சிறைக் கோட்டத்திலிருந்து விடுதலை செய்தது. இந்தத் தள்ளாத வயதில் அவரது கடும் உபவாசத்தைக் கேட்டவுடன் அகில இந்தியர்களும் அவரது அயல்நாட்டு அன்பர்களும் நடுநடுங்கிப்போனார்கள். ஆத்மீக சக்தியின் வலியால் அவரது விரதம் இனிதே நிறைவேறியது.

பிறர் செய்த பாவங்களுக்காக ஏசுநாதர் 40 நாட்கள் பட்டினி நோன்பு கிடந்தார். இந்த அவதார புருஷர் போன்றே காந்தி அடிகளும் பிறருடைய குற்றங்களுக்காகவே—ஹரிஜனங்களின் விடுதலையின் பொருட்டே 21 தினங்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டு சித்தி பெற்றார். இதனால் இவரது ஆத்ம சக்தி விருத்தியாகியிருக்கிறதே தவிர்த்து, இவருக்கு எவ்வித அபாயமும் ஏற்படவில்லை. இதைக் கண்டு உலகமே திகைத்து நிற்கிறது. இவரது நோன்பால் இந்தியாவின் பலவிடங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பல உதவிகள் ஏற்பட்டிருக்கின்றன. சில ஆலயங்களில் இவர்களுக்குப் பிரவேசம் கிடைத்திருக்கிறது. இவர்களுடைய சேவைக்காகப் பலர் முன்வந்திருக்கிறார்கள். நாடு முற்றிலும் சிறிது அனுதாபம் இவர்களுக்காக உண்டாகியிருக்கிறது. தீண்டாமைக் கொடுமை, பிறப்பால் உயர்வு தாழ்வு இந்தியாவி லிருக்கும்பரியந்தம் இந்தியாவுக்கு விமோசனமில்லை.

மணச் சீர்திருத்தச் சங்கம்

பீகாரில் ஓர் மணச் சீர்திருத்தச் சங்கம் உண்டாகியிருக்கிறது. சீதனம் கொடுப்பதையும் வாங்குவதையும் மறுத்து இது பிரசாரம் செய்கிறது. விதவா மணம் உற்சாகிக்கப்படுகிறது. கலப்பு மணம் போற்றப்படுகிறது. வீணான விவாகச் சடங்குகளைக் குறைக்க இச் சங்கம் முயற்சி செய்துகொண்டிருக்கிறது. யுவர்களுக்கும் யுவதிகளுக்கும் காதற் கலை போதிக்க முயற்சி செய்யப்படுகிறது. விதவா அல்லது கலப்பு மணம் செய்யப்போகும் இளைஞர் இளம் பெண்களின் ஜாப்தாக்களைத் தயார் செய்யப்போகிறார்கள். இதன் ஆதீனத்தில் சில மணங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவ்வாறு அரிய தொண்டு செய்துவரும் சங்கத்தினர்களைப் பெரிதும் போற்றுகின்றோம். ஜாத் பாத் தோரக் மண்டல் என்ற ஒரு சங்கம் லாகூரில் ஸ்தாபிக்கப்பட்டு, இம்மாதிரி வேலையைச் செய்துவருகிறது. இம்

மாதிரியான சங்கங்கள் நாடெங்கும் உண்டாகி வேலைசெய்ய வேண்டு மென விரும்புகிறோம்.

சில பத்திரிகைகளின் ஒழுங்கற்ற செய்கை

"பாரதி"யில் வரும் அருமையான கட்டுரைகளைச் சில தினசரிப் பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளும் வெளியிடுகின்றன. நமது வியாசங்களை எழுதியவர் பெயரின்றியும், "பாரதி"யின் பெயரின்றியும் சில பத்திரிகைகள் வெளியிடுவதை நாம் விரும்பவில்லை. மக்களுக்குப் போதிக்க வெளிவரும் இப் பத்திரிகைகளின் நியாயமற்ற செயலை என்னென்போம்! இவ்வாறு பத்திரிகா தர்மத்திலிருந்து தவறும் பத்திரிகைகளின் பெயர்களைக் கூறினால் அவைகளுக்குக் கௌரவக் குறைச்சலாகுமென்று விட்டுவிடுகிறோம். கொழும்பிலிருந்து வெளிவரும் "வீரகேசரி" என்ற தினசரியின் அதிபர் "பாரதி"யிலிருக்கும் வியாசங்களைத் தமது வாரப் பதிப்பில் உபயோகிக்க அனுமதிக்குமாறு கேட்டது எமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவருடைய நேர்மைக்காக எமது பிரிய வந்தனங்கள்.

உபவாசம் இருத்தல்

இந்தியாவில் பட்டினி விரதமிருப்பது தொன்றுதொட்டு வந்த ஒரு வழக்கமாகும். ஒரு ஹிந்து ஒரு மாதத்தில் சில நாட்கள் விரதமிருக்கலாம். மகாத்மா பட்டினி விரதத்தின் பெருமையை வெளியே கூறுவதற்கு முன்பே ஹாயிகூனி, அடோல்ப ஜஸ்ட், பெனிடிக் லஸ்ட், பூரிட்டன், மாக்பாடன் முதலிய மேனாட்டு இயற்கை வைத்தியர்கள் உபவாச மகிமையைப்பற்றி நூற்கள் வெளியிட்டிருக்கிறார்கள். உபவாசத்தால் வியாதிகளைச் சொஸ்தப்படுத்துகிறார்கள். 40 வருஷங்களுக்கு முன்னரே, புரோபசர் ஹாஸியானி என்பவர் 30 நாள் உபவாசத்தைப்பற்றிய அநேக ஆராய்ச்சிகள் செய்தார். டாக்டர் டான என்ற அமெரிக்க டாக்டர் 40 நாட்களும், மெர்லாடி என்றவர் 5[illegible] நாட்களும் உபவாசமிருந்தார்கள். சமீப காலத்தில் அமெரிக்காவில் டாக்டர் பெனிடிக் லஸ்ட் 31 நாட்கள் உண்ணாவிரதத்தில் பல்பல உபயோகமுள்ள ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார்.

வருங்கால உலகத்தில் உபவாச தத்துவம் முக்கியமாய்ப் பரவப் போகின்றது. இயற்கை வைத்தியத்திற்குப் பெரிய மதிப்பும் செல்வாக்கும் உண்டாகப்போகின்றது. இயற்கையின் வழி நடந்தால் மானிடர்களுக்கு நோய்களேது? இயற்கை அன்னைக்கு நாம் வணக்கம் அவசியம் அடிக்கடி செலுத்தவேண்டும்.

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது

197889

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்
டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. *1—4—0.*
தபாற் செலவு வேறு

ராட்டூர்-
-வீரன்-

துர்க்கா தாஸ்.

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

**வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.**

அவரது நாடகங்களத்தனையிலும்
இத் துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் 1/8 சைஸ்
380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.
தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.